














# வருடாந்த செயல்திறன் அறிக்கை 2016

# முன்னுரை



இலங்கை தரைப்படையானது அதன் வரலாறு முழுவதும் நாட்டின் தேசிய நலன்களுக்காக சேவையாற்றியமை பெருமைக்குரிய விடயமாகும். நீண்ட கால தரைப்படையின் புகழ்பெற்ற இந்த பயணத்தில், கலவரம் மற்றும் சமாதான காலங்களில் தரைப்படையின் அர்பணிப்பு மற்றும் அபூர்வமான பங்களிப்பு இலங்கை நாட்டு மக்கள் அனைவரினதும் மனதில் முழுமையான நம்பிக்கை ஆழமாக பதிய செய்தது.

நாட்டின் தீவீரவாதத்தை முற்றாக அழித்தொழிக்க 30 வருட காலமாக தொடர்ச்சியாக இலங்கை தரைப்படையினால் மேற்கொள்ளப்பட்ட அர்பணிப்பு மற்றும் அதன் மூலம் பெறப்பட்ட அனுபவம் ஊடாக வெற்றிகரமான இரரணுவத்தையும் நிபுணத்துவம் மிக்க தரைபடையையும் உருவாக்கியது. தற்போது நாட்டில் நிலவுகின்ற பாதுகாப்பு மற்றும் எதிர்பார்க்க முடியாத உருமாற்றங்கள் என்பன தரைப்படையை அனைத்து துறைகளிலும் பல்வேறு வகையான பணிகளை புரிவதற்கு இன்னும் அதிகமாக விழிப்புடன் இருத்தல் அவசியமாகின்றது. ஆகவே தரைப்படையின் தொழில் முறையை மதீப்பீடு செய்வதற்கும், வாய்ப்புக்களை தக்க வைத்து, பயன்படுத்தி கொள்வதற்கும், தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் இலங்கை தரைப்படையானது நவீன தொழில்நுட்பத்துடன் ஒன்றினைந்து செயற்படல் அவசியமாகின்றது.

மேலும் இலங்கை தரைப்படையானது நாட்டின் பாதுகாவலராகவும் பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை தேவையான நேரங்களில் வழங்குவதற்காக பல்வேறு துறைகளில் பல்வேறு பணிகளை பாரிய பொறுப்புடன் முன்னெடுக்கின்றது. தங்களுக்குரிய முதன்மை கடமைகளுக்கு மேலாக இலங்கையின் தேசிய இலக்கான வறுமை ஒழிப்புக்குரிய சவால்களை எதிர்கொள்ள உதவிகளை வழங்குதல், நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தல் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போது மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்காக தரைப்படையானது நிபுனத்துவம் மிக்க, நவீனமயப்படுத்தப்பட்ட மற்றும் சுறுசுறுப்பான படையாக செயற்படுதல் அவசியமாகும்.

இவ் அறிக்கையானது இவ்வாண்டுக்குரிய அனைத்து நடவடிக்கைகளை உள்ளடக்கியதோடு, 2017 ஆம் ஆண்டு இலங்கை தரைப்படைக்கு குறிக்கப்பட்டுள்ள இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தனது பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்குரிய ஊன்டுகோலாக அமையுமெனவும் தரைப்படையை எவ்வித சந்தேகங்களுமின்றி வழி நடத்தும் எனவும் திடமாக நம்புகின்றேன்.



**ஏடபிள்யுஜேசி த சில்வா ஆர்டபிள்யுபி விஎஸ்வி யுஎஸ்பி என்டியு பிஎஸ்சி**
லெப்டினன் ஜெனரல்
தரைப்படை தளபதி

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | உள்ளடக்கம் | ii |
| | வரைப்படங்கள் | iv |
| | படவுருக்கள் | v |
| | அட்டவணை | vi |
| | குறும் பதங்கள் | viii |
| | முன்னோக்கு | ix |
| | இலங்கை தரைப்படை நிறுவனங்களின் கட்டமைப்பு | x |
| 1. | அறிமுகம். | 1 |
| 2. | 2016 ஆம் ஆண்டின் வரவு செலவு ஒதுக்கீடுகள். | 4 |
| 3. | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள். | 5 |
| 4. | புதிய உற்பத்தி பொருட்களுக்கான காப்புரிமை பெறல். | 6 |
| 5. | இலங்கை தரைப்படையின் வேலைத்திட்டங்கள். | 9 |
| 6. | இலங்கை தரைப்படையின் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் | 11 |
| 7. | இராணுவ செயலாளர் கிளை. | 13 |
| 8. | பிரதம பதவி நிலை அதிகாரிகளின் கிளை. | 15 |
| 9. | நிதி முகாமைத்துவ கிளை. | 24 |
| 10. | நிர்வாக ஜெனரல் கிளை. | 42 |
| 11. | உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளை. | 60 |
| 12. | போர் உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளை. | 67 |
| 13. | பணிப்பாளர் நாயகம் காலாட்படை அலுவலகம். | 76 |
| 14. | லொஜிஸ்டிக் கட்டளைகள் தலைமையகம். | 78 |
| 15. | பிரதான களப் பொறியியளாலர் அலுவலகம். | 80 |
| 16. | பிரதான சமிஞ்சை அதிகாரி அலுவலகம். | 85 |

| | | |
|---|---|---|
| 17. | விளையாட்டுப் பணிப்பாளர் அலுவலகம். | 88 |
| 18. | தரைப்படை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம். | 90 |
| 19. | நீதிபதி மேல் சட்டத்தரணி ஜெனரல் அலுவலகம். | 95 |
| 20. | தரைப்படை பயிற்சி கட்டளைத் தலைமையகம். | 96 |
| 21. | முடிவுரை. | 100 |

**இணைப்பு:**
இலங்கை தரைப்படை தலைமையகத்தின் உயர் அதிகாரிகளின் பெயர் பட்டியல்.


புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

## வரைப்படங்கள் விபரம்


| இல | தலைப்பு | பக்க இல |
|---|---|---|
| வரைபடம் 9.1 | பிரதம பதவி நிலை அதிகாரிகள் கிளையின் கீழுள்ள கட்டமைப்பு. | 15 |
| வரைபடம் 10.1 | நிதி முகாமைத்துவ கிளையின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு. | 24 |
| வரைபடம் 11.1 | நிர்வாக ஜெனரல் அலுவலகத்தின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு | 42 |
| வரைபடம் 12.1 | உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு. | 60 |
| வரைபடம் 13.1 | போர் உபகரண படைபிரிவின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு. | 67 |
| வரைபடம் 18.1 | பிரதான சமிஞ்சை அதிகாரியின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு. | 85 |
| வரைபடம் 19.1 | தரைப்படை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு. | 90 |
| வரைபடம் 21.1 | தரைப்படை பயிற்சிக் கட்டளைகளின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு. | 96 |


புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

## படவுருக்களின் விபரம்


| இல | விபரம் | பக்க இல |
|---|---|---|
| படவுரு 1.1 | இலங்கை தரைப்படையின் ஆளணிக் கட்டமைப்பு. | 1 |
| படவுரு 1.2 | படைபிரிவுகளுக்கு ஏற்ப மனித வளங்கள். | 3 |
| படவுரு 2.1 | வரவு செலவு ஒதுக்கீடுகளும் செலவுகளும். | 4 |
| படவுரு 9.1 | உட்சேர்ப்புக்களின் முன்னேற்றம். | 21 |
| படவுரு 10.1 | மீள்வரும் ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள். | 25 |
| படவுரு 10.2 | மூலதன ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள். | 26 |
| படவுரு 10.3 | வருடத்துக்கான செலுத்தல்கள். | 36 |
| படவுரு 15.1 | அனைத்த படைபிரிவுக்குமான தொழிற்சார் பரீட்சைகளின் சாரம்சம். | 79 |


புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

## அட்டவனைகள் விபரம்


| இல | | விபரம் | பக்க இல |
|---|---|---|---|
| அட்டவனை | 1.1 | இலங்கை தரைப்படையின் ஆளணிக் கட்டமைப்பு. | 1 |
| அட்டவனை | 1.2 | படைபிரிவுகளுக்கு ஏற்ப மனித வளங்கள். | 2 |
| அட்டவனை | 2.1 | 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு ஒதுக்கீடுகள். | 4 |
| அட்டவனை | 8.1 | அதிகாரிகளின் பதவி உயர்வுகள் பற்றிய விபரங்கள். | 13 |
| அட்டவனை | 8.2 | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்ற அதிகாரிகளின் ஒப்பீட்டு விபரம். | 16 |
| அட்டவனை | 9.1 | உட்சேர்ப்பு மற்றும் உள்நாட்டு பயிற்சிகள். | 17 |
| அட்டவனை | 9.2 | கள பயிற்சிகள். | 17 |
| அட்டவனை | 9.3 | வெளிநாட்டு பயிற்சிகள். | 18 |
| அட்டவனை | 9.4 | வெளிநாட்டு போட்டிகள். | 18 |
| அட்டவனை | 9.5 | விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் தியான நிகழ்ச்சிகள். | 20 |
| அட்டவனை | 9.6 | அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினர் எண்ணிக்கை. | 20 |
| அட்டவனை | 9.7 | அனுமதிக்கப்பட்ட மற்றும் உட்சேர்க்கப்பட்ட படைவீரர்கள் விபரம். | 20 |
| அட்டவனை | 10.1 | மீள்வரும் ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள். | 25 |
| அட்டவனை | 10.2 | மூலதன ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள். | 26 |
| அட்டவனை | 10.3 | மதிப்பிடப்பட்ட வரவு செலவு ஒதுக்கீடு. | 27 |
| அட்டவனை | 10.4 | அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் சம்பளங்கள். | 29 |
| அட்டவனை | 10.5 | யுத்தத்தின் போது இறந்தவர்கள், அங்கவீனமானவர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களின் சம்பளங்கள். | 29 |
| அட்டவனை | 10.6 | வெளிநாட்டு பாடநெறிகள், விஜயங்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள். | 29 |
| அட்டவனை | 10.7 | பணிக்கொடைகள் மற்றும் அங்கவீனர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள். | 30 |
| அட்டவனை | 10.8 | முற்பண பீ கணக்கு நிதி. | 30 |
| அட்டவனை | 10.9 | தரைப்படை நலன்புரி நிதி. | 30 |
| அட்டவனை | 10.10 | சுவசஹன நலன்புரி கடன் திட்ட விபரங்கள். | 31 |
| அட்டவனை | 10.11 | படைவீரர்களின் பெற்றோர்களுக்கான விசேட கொடுப்பனவு. | 31 |
| அட்டவனை | 10.12 | அநாதைகள், விதவைகளுக்கு ஓய்வூதியங்கள். | 31 |
| அட்டவனை | 10.13 | அங்கவீனத்துடன் ஓய்வுபெற்ற அதிகாரி மற்றும் ஏனைய நிலையினர். | 32 |
| அட்டவனை | 10.14 | எதிர் பார்க்கப்படும் மீண்டுவரும் செலவினங்களுக்கான ஆரம்ப ஒதுக்கீடுகள். | 32 |
| அட்டவனை | 10.15 | வருடாந்த கணக்கெடுப்பு குழுக்களின் சாராம்சம். | 33 |
| அட்டவனை | 10.16 | உருவாக்கப்பட்ட வருமானம். | 34 |
| அட்டவனை | 10.17 | எதிப்பார்க்கப்படும் வருமானம். | 34 |
| அட்டவனை | 10.18 | முதலீடுகள் - கடன்கள். | 35 |
| அட்டவனை | 10.19 | முதலீடுகளின் சாராம்சம். | 36 |
| அட்டவனை | 10.20 | செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் விபரம். | 36 |
| அட்டவனை | 10.21 | நலன்புரி திட்ட முதலீடுகள் விபரம். | 37 |

| | | |
|---|---|---|
| அட்டவனை 10.22 | தேசிய வரவு செலவு ஒதுக்கீது. | 40 |
| அட்டவனை 10.23 | உண்மையான வருடாந்த ஒதுக்கீடு. | 41 |
| அட்டவனை 10.24 | யுத்தத்தில் இறந்த/அங்கவீனமுற்ற மற்றும் மருத்துவ காரணங்களுக்காக ஓய்வு பெற்றவர்களுக்கான கொடுப்பனவுகள். | 41 |
| அட்டவனை 11.1 | வருடாந்த அதிகரிப்பு/ குறைவு விபரம். | 46 |
| அட்டவனை 11.2 | நிகழ்ந்த வாகன விபத்துக்கள். | 49 |
| அட்டவனை 11.3 | கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் அனுமதியற்ற விடுமுறை. | 50 |
| அட்டவனை 11:4 | விபத்துக்களை தவிர்க்கும் விழிப்புணர்வு செயற்திட்ட விபரங்கள். | 50 |
| அட்டவனை 11:.5 | பணிப்பாளர் குழுமத்தால் வழங்கப்பட்ட நலன்புரி மற்றும் ஏனைய திட்டங்கள். | 53 |
| அட்டவனை 11.6 | ரனவிருவா வீடமைப்பு நிதி. | 54 |
| அட்டவனை 11.7 | ரணவிருவா வீடமைப்பு திட்ட விபரங்கள். | 54 |
| அட்டவனை 12.1 | நிதியியல் விபரங்கள். | 60 |
| அட்டவனை 12.2 | இவ்வருடம் பாவிக்கப்பட்ட செலவுத் தலைப்புகள் விபரம். | 61 |
| அட்டவனை 12.3 | நிதியியல் விபரங்கள். | 63 |
| அட்டவனை 12.4 | மூலதன ஒதுக்கீடு மற்றும் செலவுகள். | 66 |
| அட்டவனை 12.5 | மீண்டுவரும் ஓதுக்கீடு மற்றும் செலவுகள். | 66 |
| அட்டவனை 13.1 | நிதியியல் விபரங்கள். | 68 |
| அட்டவனை 13.2 | கொள்முதல் செயற்பாடுகளின் போது கொள்வனவாளர்களின் அதிகாரத்தை பிரயோகித்தல் முறை. | 71 |
| அட்டவனை 13.3 | ஒதுக்கப்பட்ட வருடாந்த நிதி. | 72 |
| அட்டவனை 13.4 | நிதியியல் முன்னேற்றங்கள். | 74 |
| அட்டவனை 15.1 | தொழிற் பரீட்சைகளின் சாரம்சம். | 79 |
| அட்டவனை 16.1 | மனிதாபிமான கன்னிவெடி அகற்றல் முகாமைத்துவ பாடநெறி. | 81 |
| அட்டவனை 18.1 | இவ்வருடத்தில் விளையாட்டு போட்டிகளில் எய்தப்பட்ட சாதனைகள். | 89 |
| அட்டவனை 19.1 | பிரதான நடவடிக்கை மற்றும் அதன் நடைமுறை தன்மை. | 94 |


புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

# குறும் பதங்களின் பட்டியல்

| | |
|---|---|
| பாதுகாப்பு படைத் தலைமையகம் (யாழ்ப்பாணம்) | பாது.ப.தலை (யா) |
| பாதுகாப்பு படைத் தலைமையகம் (வவுனியா) | பாது.ப.தலை (வ) |
| பாதுகாப்பு படைத் தலைமையகம் (கிழக்கு) | பாது.ப.தலை (கிழ) |
| பாதுகாப்பு படைத் தலைமையகம் (கிளிநொச்சி) | பாது.ப.தலை (கிளி) |
| பாதுகாப்பு படைத் தலைமையகம் (முல்லைத்தீவு) | பாது.ப.தலை (முல்லை) |
| பாதுகாப்பு படைத் தலைமையகம் (மேற்கு) | பாது.ப.தலை (மேற்) |
| பாதுகாப்பு படைத் தலைமையகம் (மத்தியம்) | பாது.ப.தலை (மத்தி) |
| இலங்கை கவசவாகன படைப்பிரிவு | இகவாப |
| இலங்கை பீரங்கிப் படைப்பிரிவு | இபீப |
| இலங்கை பொறியியற் படைப்பிரிவு | இபொப |
| இலங்கை சமிஞ்சை படைப்பிரிவு | இசப |
| இலங்கை காலாட் படைப்பிரிவு | இகாப |
| இலங்கை சிங்கப் படைப்பிரிவு | இசிப |
| கெமுனு ஹேவா படைப்பிரிவு | கெஹேப |
| கஜபா படைப்பிரிவு | கப |
| விஜபாகு காலாட் படைப்பிரிவு | விகாப |
| இயந்திர காலாட் படைப்பிரிவு | இகாப |
| கொமான்டோ படைப்பிரிவு | கொப |
| விசேட படைப்பிரிவு | விப |
| இராணுவ புலனாய்வுப் படைப்பிரிவு | இபுப |
| பொறியியற் சேவை படைப்பிரிவு | பொசேப |
| இலங்கை தரைப்படை சேவை படைப்பிரிவு | இதசேப |
| இலங்கை போர்கருவிச் சேவை படைப்பிரிவு | இபோசேப |
| இலங்கை மின்சாரம் மற்றும் எந்திரங்கள் பொறியியலாளர் படைபிரிவு | இமிஎபொப |
| இலங்கை தரைப்படை மருத்துவ படைப்பிரிவு | இதமப |
| இலங்கை இராணுவ பொலீஸ் படைப்பிரிவு | இஇபொப |
| இலங்கை தரைப்படை பொதுச் சேவை படைப்பிரிவு | இதபொசேப |
| இலங்கை தரைப்படை மகளீர் படைப்பிரிவு | இதமப |
| இலங்கை தரைப்படை முற்போக்கு படைப்பிரிவு | இதமுப |
| இலங்கை தரைப்படை ரயிப்பல் படைப்பிரிவு | இதரப |
| இலங்கை தேசிய பாதுகாப்பு படைப்பிரிவு | இதேபாப |

## முன்னோக்கு

1. தேசத்தின் ஒருமைப்பாட்டை பாதுகாத்து, அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவதோடு இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அவசர காலநிலைகளில் இராணுவ உறுப்பினர்களை ஈடுபடுத்தி ஒத்துழைப்பு வழங்குவதும் இலங்கை தரைப்படையின் பொறுப்பாகும். 2016 ஆம் ஆண்டு இலங்கை தரைப்படையின் ஆண்டறிக்கையில் எதிர்வரும் ஆண்டுக்கான பரிந்துரைகள் மற்றும் நடப்பு ஆண்டு முழுவதுமான இராணுவ செயற்பாடுகள், ஆண்டு வரவு செலவு திட்ட விடயங்கள் என்பன விபரிக்கப்பட்டுள்ளன.மேலும் கிளைகள் மற்றும் பணிப்பக குழுமங்களின் வருடாந்த செயல்திறன்களின் கண்ணோட்டம் விபரமாக வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. 2016 ஆம் ஆண்டில் 160,000.86 மில்லியன் ரூபா (மூலதனம் 8,336.26 மில்லியன் ரூபாவும் மீண்டு வரும் செலவு 151,664.60 மில்லியன்) மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் ஆண்டில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை 147,52.76 மில்லியன் ரூபாவாகும்.

3. இவ்வருடம் படையினரின் பயிற்சி திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதோடு இவ் ஆண்டில் 552 அதிகாரிகளும், 8190 ஏனைய நிலையினரும் தரைப்படைக்கு புதிதாக உட்சேர்க்கப்பட்டனர்.

4. முக முக்கிய நபர்களை பாதுகாத்தல் பெண்கள் அணி, உணவு வழங்கல் மற்றும் பரிமாறல் படையணி, போர் உபகரண பயிற்சி பாடசாலை. போர் உபகரண தொழிற்சாலை மற்றும் இப்பலோகம மற்றும் ஹென்னனிகல பயிற்சி நிலையங்கள் என்பன புதிதாக ஆரம்பிக்கப்ட்டன. ஏனைய நிலையினருக்கான பயிற்சி பாடசாலையானது தரைப்படை தொழில் பயிற்சி மையமாகவும் இலங்கை தரைப்படை முற்போக்கு படைபிரிவு, 2 படையணிகளாக பிரிக்கப்பட்டதுடன் 15 ஆவது இலங்கை பீரங்கிப்படை 15 ஆவது ஆளில்லா வானூர்தி வாகன படையாகவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டன.

5. இலங்கை தரைப்படை விளையாட்டு வீர, வீராங்கனைகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் திறமைகளை வெளிக்காட்டி பல வெற்றிகளை பெற்றதோடு இலங்கைக்கும், இலங்கை தரைப்படைக்கும் பெருமையையும் நன்மதிப்பையும் பெற்றுக் கொடுத்தனர். கடந்த ஆண்டு, தரைப்படை விளையாட்டு வீர, வீராங்கனைகள் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி 34 தங்கப் பதக்கங்களையும், 35 வெள்ளி பதக்கங்களையும், 41 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

6. இலங்கை தரைப்படை கன்னிவெடிகளை அகற்றும் அலகு தற்போது இலங்கைக்குள் இருக்கும் முதற்தர கன்னி வெடி அகற்றும் நிறுவனமாக திகழ்வதோடு, 2016 ஆம் ஆண்டு 3,457,853 சதுர மீற்றர் நிலப்பரப்புகளில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு இவ்வலகு செயற்பட்டுள்ளது.

7. இலங்கை தரைப்படையானது அபிவிருத்தித் திட்டங்களுக்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கியதோடு, கீரிமலை, சாலாவை, கொஸ்கம, அரனாயக, எலகபிடிய மற்றும் வெலிகந்த ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல் மற்றும் அத்தியாவசிய தேவைகளான வீடு, உணவு, தண்ணீர் மற்றும் மருந்து ஆகியவற்றுக்கான மனிதாபிமான ஒத்துழைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

8. தரைப்படை உறுப்பினர்களின் நலன்களுக்காக பாரியளவிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோடு யுத்த செயற்பாடுகள் மூலம் இறந்த மற்றும் காயமடைந்த உறுப்பினர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கு புதிய நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் தற்போது சேவையிலுள்ள மற்றும் ஓய்வுபெற்ற படைவீரர்களுக்காக பல்வேறுபட்ட வேலைதிட்டங்கள் இலங்கை தரைப்படையினால் மேற்கொள்ளப்பட்டன.

# இலங்கை தரைப்படை தலைமையகத்தின் உள்ளக கட்டமைப்பு



# இலங்கை தரைப்படை திட்ட வரை கள உருவாக்கம்

## இலங்கை தரைப்படை தலைமையகம்



**<u>இலங்கை தரைப்படையின் படைபிரிவு தலைமையகங்கள்</u>**

## இலங்கை தரைப்படை தலைமையகம்



## இலங்கை தரைப்படை பயிற்சிக் கட்டமைப்பு

- இலங்கை தரைப்படை தளபதி
  - தரைப்படை பயிற்சி கட்டளைகள் தளபதி
    - இலங்கை இராணுவக் கல்லூரி (தியதலாவ)
    - அதிகாரிகள் தொழில் அபிவிருத்தி மையம் (புத்தலை)
    - தரைப்படை பயிற்சி பாடசாலை (மாதுருஓயா)
    - காலாட்படை பயிற்சி மையம் (மின்னேரிய)
    - வனயுத்த பயிற்சி பாடசாலை (அம்பாறை)
    - தரைப்படை உடற்பயிற்சி பயிற்சி பாடசாலை (பனாகொடை)
    - சுயேட்சை படை பயிற்சி பாடசாலை (தியதலாவ)
    - திறன் அபிவிருத்தி மற்றும் மறைமுக பயிற்சி பாடசாலை (தியதலாவை)
    - தரைப்படை தொழிற்பயிற்சி மையம் (கலாஓயா)
    - இலங்கை சமாதான உதவி நடவடிக்கை பயிற்சிப் நிறுவனம் (குகுலேகங்கை)
    - தரைப்படை லொஜிஸ்டிக் பாடசாலை (திருகோணமலை)

## அறிமுகம்

1. தேசத்தின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் முக்கிய பொறுப்புக்கு மேலதிகமாக இலங்கை தரைப்படை மனிதவளங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு 2016 ஆம் ஆண்டில் பாரிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. இயற்கை அனர்த்தங்களின் போது இலங்கை தரைப்படையானது பொறுப்புடன் செயற்பட்டது. மேலும் இலங்கை தரைப்படை பல்வேறு அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபடுத்தி பாரிய அளவில் பொதுமக்களின் நிதியை சேமித்ததோடு இது இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரிதும் உதவியது. மேலும் சரியான நேரத்தில் பயனுள்ள முறையில் தேசிய தேவைகளுக்கு உதவியமை மிகவும் முக்கியமாகும்

2. 2016 ஆம் ஆண்டு செயல்திறன் அறிக்கையானது 2017 ஆம் ஆண்டுகளுக்கான சிபாரிசுகளை யும் இவ்வாண்டுக்கான செயல்திறன் மற்றும் வரவு செலவு அறிக்கையும் கொண்டுள்ளது. மேலும் கடந்த ஆண்டில் திட்டமிட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்களையும் அவற்றின் உண்மை செயல்திறன் ஆகியன ஆராயப்பட்டு இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### ஆளணிக் கட்டமைப்பு விபரம்

3. தரைப்படையில் அனுமதிக்கப்பட்ட மற்றும் கடமையாற்றுகின்ற ஆளனியர் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | அதிகாரி | | சிப்பாய்கள் | |
|---|---|---|---|---|
| | அனுமதி பெறப்பட்ட தொகை | தற்போது இருக்கும் தொகை | அனுமதி பெறப்பட்ட தொகை | தற்போது இருக்கும் தொகை |
| நிரந்தர படைப்பிரிவு | 7,743 | 7,175 | 119,570 | 106,332 |
| சுயேட்சை படைப்பிரிவு | 2,899 | 2,559 | 70,149 | 61,072 |
| **மொத்தம்** | **10,642** | **9,734** | **189,719** | **167,404** |

அட்டவனை 1.1: இலங்கை தரைப்படையின் ஆளணிக் கட்டமைப்பு.




படவுரு 1.1: இலங்கை தரைப்படையின் ஆளணிக் கட்டமைப்பு.

4. **<u>படைபிரிவுகளுக்கு ஏற்ப மனித வளங்கள்.</u>** இலங்கை தரைப்படை, 24 படைப்பிரிவுகளாக வகுக்கப்பட்டிருப்தோடு அவற்றின் பணி மற்றும் பொறுப்புக்களுக்கு அமைய ஒத்துழைப்பு, சேவை, காலாட் படை என்ற வகையில் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது.

| இல | இராணுவ படைப்பிரிவுகள் | நிரந்தர | | சுயேட்சை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகாரிகள் | சிப்பாய்கள் | அதிகாரிகள் | சிப்பாய்கள் | அதிகாரிகள் | சிப்பாய்கள் |
| 1. | இலங்கை கவசவாகன படை | 262 | 4229 | 35 | 702 | 297 | 4931 |
| 2. | இலங்கை பீரங்கிப் படை | 371 | 5722 | 58 | 1090 | 429 | 6812 |
| 3. | இலங்கை பொறியியல் படை | 303 | 6177 | 44 | 1386 | 347 | 7563 |
| 4. | இலங்கை சமிஞ்சை படை | 327 | 4990 | 23 | 568 | 350 | 5558 |
| 5. | இலங்கை காலாட் படை | 429 | 9062 | 165 | 3664 | 594 | 12726 |
| 6. | இலங்கை சிங்கப்படை | 452 | 9378 | 145 | 4014 | 597 | 13392 |
| 7. | கெமுனு ஹேவா படை | 448 | 9141 | 158 | 3494 | 606 | 12635 |
| 8. | கஜபா படை | 439 | 9430 | 179 | 4110 | 618 | 13540 |
| 9. | விஜபாகு காலாட்படை | 421 | 8357 | 157 | 3578 | 578 | 11935 |
| 10. | இயந்திர காலாட்படை | 154 | 2529 | 23 | 502 | 177 | 3031 |
| 11. | கெமான்டோ படை | 186 | 3148 | - | - | 186 | 3148 |
| 12. | விசேட படை | 161 | 2430 | - | - | 161 | 2430 |
| 13. | இராணுவ புலனாய்வுப் படை | 129 | 2611 | 42 | 1002 | 171 | 3613 |
| 14. | பொறியியற் சேவை படை | 158 | 2953 | 109 | 10212 | 267 | 13165 |
| 15. | இலங்கை தரைப்படை சேவை படை | 155 | 4107 | 28 | 823 | 183 | 4930 |
| 16. | இலங்கை தரைப்படை மருத்துவ படை | 270 | 3904 | 19 | 521 | 289 | 4425 |
| 17. | இலங்கை போர்கருவிச் சேவை படை | 139 | 3329 | 14 | 393 | 153 | 3722 |
| 18. | இலங்கை மின்சாரம் மற்றும் எந்திரங்கள் படை | 182 | 3528 | 23 | 1525 | 205 | 5053 |
| 19. | இலங்கை இராணுவ பொலீஸ் படை | 144 | 3261 | - | - | 144 | 3261 |
| 20. | இலங்கை தரைப்படை பொதுச் சேவை படை | 287 | 3058 | 173 | 2584 | 460 | 5642 |
| 21. | இலங்கை இராணுவ மகளீர் படை | 74 | 715 | 94 | 2329 | 168 | 3044 |
| 22. | இலங்கை இராணுவ முற்போக்கு படை | - | - | 30 | 1127 | 30 | 1127 |
| 23. | இலங்கை ரயிப்பல் படை | - | - | 45 | 1143 | 45 | 1143 |
| 24. | இலங்கை தேசிய பாதுகாப்பு அணி | - | - | 553 | 13419 | 553 | 13419 |
| | **மொத்தம்** | **5,491** | **102,059** | **2,117** | **58,186** | **7,608** | **160,245** |

அட்டவனை 1.2: படைபிரிவுகளுக்கு ஏற்ப மனித வளங்கள்.




படவுரு 1.2: படைபிரிவுகளுக்கு ஏற்ப மனித வளங்கள்.

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

## 2016 ஆம் ஆண்டின் வரவு செலவு ஒதுக்கீடு

1. 2016 ஆம் ஆண்டின் வருடாந்த ஒதுக்கீட்டுக்கு அமைய திறைசேறியால் மீண்டு வரும் செலவு மற்றும் மூலதன செலவிற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு விபரம் பின்வருமாறு.

| செலவு தலைப்பு | தகவல்கள் | 2016 ஆம் ஆண்டிற்கான முழு ஒதுக்கீடு (ரூபா) | 2016.12.31 ஆந் திகதிக்கு உண்மைச் செலவு (ரூபா) | 2016.12.31 ஆந் திகதிக்கு உண்மையான மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| **மீண்டு வரும் செலவினம்** | | | | |
| 1001-1003 | தனியாள் சம்பளம் | 121,250.19 | 117,651.84 | 3,598.34 |
| 1101-1508 | ஏனைய மீண்டு வரும் செலவு | 30,414.42 | 26,279.02 | 4,135.40 |
| | **மொத்தம்** | **151,664.60** | **143,930.86** | **7,733.74** |
| **மூலதன செலவீடுகள்** | | | | |
| 2001-2003 | புனர்வாழ்வு மற்றும் மேலதிக அபிவிருத்தி வருமானம் | 480.70 | 340.53 | 140.17 |
| 2101-2105 | மூலதன வருமானம் பெற்றுக் கொள்ளுதல் | 2,162.10 | 1,842.00 | 320.10 |
| 2401 | பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்தல் | 1,100.00 | 1,102.93 | (2.93) |
| 2502 17 | வேறு முதலீடுகள் | 2,305.94 | 280.01 | 2,025.93 |
| 2502 17 | வேறு முதலீடுகள் (கடன்வரி) | 2,287.52 | 56.44 | 2,231.08 |
| | **மொத்தம்** | **8,336.26** | **3,621.90** | **4,714.35** |
| | **முழு மொத்தம்** | **160,000.86** | **147,552.76** | **12,448.09** |

| முற்பண கணக்கு | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|
| அதிகூடிய எல்லை | 2,750.00 |
| 31.12.2016 வரை செலவு | 2,749.59 |
| மீட்புத் தொகை | 2,732.28 |

அட்டவனை 2.1: 2016 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடுகள்.




படவுரு 2.1: வரவு செலவு ஒதுக்கீடுகளும் செலவுகளும்

## புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள்

**முக முக்கிய நபர்களை பாதுகாத்தல் பெண்கள் அணி.** வெளிநாட்டு பெண் பிரதிநிதிகளை பாதுகாத்தல் மற்றும் நவீன மயமான இராணுவத்தின் வழிமுறைகளுக்கு ஏற்ப தொழில்முறை திறனை அதிகரிப்பதற்காக முக முக்கிய நபர்களை பாதுகாத்தல் பெண்கள் அணி 4 ஆவது கொமாண்டோ படைபிரிவுடன் 2016.04.25 திகதி இணைக்கப்பட்டது



**ஆளில்லா உளவு வானூர்திப்பிரிவு.** அமைதி காக்கும் பணிக்காக அதிக வாய்ப்புக்களை பெறவும் தரைபடையை நவீன மயமாக்கவும் 15 ஆவது இலங்கை பீரங்கிப் படையணியானது ஆளில்லா வானூர்திப் படையணியாக 2016.02.21 ஆம் திகதி மாற்றியமைக்கப்பட்டது.



**போர் உபகரண பயிற்சி பாடசாலை மற்றும் தொழிற்சாலை.** போர் உபகரண பொருட்களை தயாரிக்க, பராமரிக்க மற்றும் பழுது பார்ப்பதன் மூலம் செலவுகளை குறைக்கவும் போர் உபகரண பயிற்சி பாடசாலை மற்றும் தொழிற்சாலை என்பன 2016.03.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.



**ஆரம்ப பயிலுனர் பயிற்சிப் பாடசாலை.** புதிதாக சேர்க்கப்பட்ட சிவிலியன்களை முழுமையான இராணுவ வீரர்களாக மாற்றுவதற்கும், ஆரம்ப பயிற்சி பாடசாலைகள், பயிற்சி பாடநெறிகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை ஒருங்கினைக்கவும் 2016.02.12 ஆம் திகதி இப்பலோகமை மற்றும் ஹென்னனிகலயில் இப்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**உணவு வழங்கல் மற்றும் பரிமாரல் படையணி.** தரைப்படையில் நடைபெறும் வைபவங்கள் மற்றும் விழாக்கள் என்பவற்றுக்கு உணவு வழங்கள் மற்றும் பரிமாரல்கள் மேற்கொள்ளுவதற்காக தரைபடையின் உணவு வழங்கள் மற்றும் பரிமாரல்கள் தரத்தை அதிகரிக்கவும் 2016.03.01 ஆம் திகதி இப்படையணி புதிதாக ஆரம்பிக்கப்பட்டது



**தரைப்படை தொழில் பயிற்சி மையம்.** தரைப்படையில் இருந்து ஓய்வுபெற இருக்கும் படைவீரர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் அவர்களின் வினை திறனை அதிகரிக்கவும் ஏனைய நிலையினர் பயிற்சி பாடசாலையானது 2016.05.10 ஆம் திகதி தரைப்படை தொழில் பயிற்சி மையமாக மாற்றியமைக்கப்பட்டது.

## புதிய உற்பத்தி பொருட்களுக்கான காப்புரிமை பெறல்

1. தரைப்படையில் கடமையாற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருள்ளே புது கண்டுபிடிப்பாளர்களை இனம் கண்டு ஊக்குவிக்கு நோக்கத்துடனும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் புதிய கண்டுபிடிப்புக்களை வெளிகொனரவும் தரைபடையினால் புதிய உற்பத்தி பொருட்களுக்கான கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இவை பாதுகாப்பு படை தலைமையங்களினால் ஒழுங்கு செய்யப்படுவதுடன் புதிய கண்டுபிடிப்புக்களுக்கு காப்புரிமையும் பெற்றுக்கொடுக்கப்படும். அவற்றில் சில கண்டுபிடிப்புக்கள் விபரம் கீழ்வருமாறு.

### புவியீர்ப்பு சத்தியிலான நீர் பம்பி



இக் கண்டுபிடிப்பானது ப/7கிவ்011926 லா கோ திலகசிரி எஸ்டி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதோடு புவியீர்ப்பு சத்தியின் உதவியுடன் நீர் பம்பியை இயக்க செய்யும். இதற்கான செலவு ரூபா 7,500.00 ஆகும்.

### பாரிய அளவில் நீராவி மூலம் இடியப்பம் செய்யும் கருவி



இக் கண்டுபிடிப்பானது ப/9கிவ்02007 சார்ஜன் நலின் குமார (9 இதெபாப) என்பவரால் பாரிய அளவில் நீராவி மூலம் இடியப்பம் செய்யும் இவ்வியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கான செலவு ரூபா 23,000.00 ஆகும்.

### அசையக்கூடிய சென்சர் மூலம் சிறுரக துப்பாக்கி சுடுதலை கட்டுப்படுத்தும் மற்றும் கண்கானிப்பு உபகரணம்




இக் கண்டுபிடிப்பானது அ/75652 மேஜர் டபிள்யுஎஸ் பிரியான் (23 இதேபாப) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதோடு இதன் மூலம் போர் பிரதேச முன்னரங்குகளில் படைவீரர்கள் இல்லாத நிலையில் பாதுகாப்பு முறையை தானியங்கியாக செயற்படுத்த முடியும். இதற்கான செலவு ரூபா 30,000.00 ஆகும்.

### ஜிஐ குழாயை வளைக்கும் கருவி



இக் கண்டுபிடிப்பானது ப/7628850 லா கோ மதுசங்க கேகேஎல் (2 இமிஎபொப) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதோடு இதன் மூலம் ஜிஐ குழாய்களை வலைக்க முடியும். இதற்கான செலவு ரூபா 30,000.00 ஆகும்.

**<u>லேசர் ஒளிக்கோட்டு உதவியுடன் செங்குத்து மற்றும் கிடைமட்ட சமநிலை படுத்தும் சாதனம்</u>**



இக் கண்டுபிடிப்பானது ப/367753 கோப்ரல் ஹேரத் எயிச்எம்எம் (2 இசிப) என்பவரால் லேசர் ஒளிக்கோட்டு உதவியுடன் செங்குத்து மற்றும் கிடைமட்டங்களை சமநிலை படுத்தும் மற்றும் அளவுகளை துல்லியமாக அளக்கும் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதோடு இதற்கான செலவு ரூபா 4,500.00 ஆகும்.

**<u>பாரிய அளவில் சமைப்பதற்காக மரக்கறிகளை வெட்டுவதற்கான சாதனம்</u>**



இக் கண்டுபிடிப்பானது ப/323485 சாபவீ விஜயசேகர டிபிடிஎஸ்டபிள்யு (1இபுப) என்பவரால் தொழில்துறை சார்ந்த பாரிய அளவிலான மரக்கறிகளை ஒரே நேரத்தில் வெட்டுவதற்கு உதவும். இதற்கான செலவு ரூபா 25,000.00 ஆகும்.

**<u>7.62 x 39 ரக துப்பாக்கியின் சன்னங்களை வெளியெடுப்பதற்கான கருவி</u>**



இக் கண்டுபிடிப்பானது ப/604959 சாபவீ குனவர்தன டீடீஏஜ (2 இதபோஉப) என்பவரால் 7.62 x 39 ரக துப்பாக்கியின் சன்னங்களை மிக குறைந்த நேரத்தில் வெளியேற்றுவற்கு இச் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதோடு இதற்கான செலவு ரூபா 1,000.00 ஆகும்.

**<u>ஏனைய வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு வாகனங்களின் பிரதான சமிஞ்சை ஒளியை கட்டுப்படுத்தும் கருவி</u>**



இக் கண்டுபிடிப்பானது ப/2எம்01026 கோப்ரல் விஜயசிங்ஹ டபிள்யுஎம்எல்தி (5 இமிஎபொப) என்பவரால் ஏனைய வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு வாகனங்களின் பிரதான சமிஞ்சை ஒளியை கட்டுப்படுத்துவதற்கான இக் கருவி கண்டுபிடிக்கப்பட்டதோடு இதற்கான செலவு ரூபா 6,500.00 ஆகும்.

**மடித்து வைக்கக்கூடிய மோட்டார் சைக்கிள்**



இக் கண்டுபிடிப்பானது அ/67872 கெப்டன் டிஎம்பிஎம்டி திசானாயக (கன்னோருவ மிஎபொ பாடசாலை) என்பவரால் 70 கிகி நிறையை தாங்கக்கூடிய ஒரு மணித்தியாலத்துக்கு 40 கிமீ வேகத்தில் செல்லக்கூடிய மோட்டார் சைக்கிள் உருவாக்கப்பட்டது. இதற்கான செலவு ரூபா 26,000.00 ஆகும்.

**கண்காணிப்பு மற்றும் சிருரக துப்பாக்கி சுடும் திசை மற்றும் துப்பாக்கி சுடுதலை தன்னிச்சையாக கட்டுப்படுத்தும் சாதனம்**



இக் கண்டுபிடிப்பானது ப/516563 கோப்பிரல் குனரத்ன எஸ்எம்எஸ்ஜி (11 விகாப) என்பவரால் 360 பாகை கோணத்துக்கு சுற்றக்கூடிய கண்காணிப்பு மற்றும் சிருரக துப்பாக்கி சுடும் திசை மற்றும் துப்பாக்கி சுடுதலை தன்னிச்சையாக கட்டுப்படுத்தும் சாதனம் உருவாக்கப்பட்டது. இதற்கான செலவு ரூபா 8,600.00 ஆகும்.

**திண்ம கழிவுகளை அகற்றும் கருவி**



இக் கண்டுபிடிப்பானது ப/2676575 ஸ் சார்ஜன் சமரவீர எஸ்எம்ஆர்பி (4 இஇபொப) என்பவரால் கழிவுப் பொருட்களில் இருந்து திண்ம கழிவுகளை அகற்றி ஈரளிப்பற்ற கோழிகளுக்கான உணவை உற்பத்தி செய்யும் கருவி கண்டுபிடிக்கப்பட்டதோடு இதற்கான செலவு ரூபா 23,000.00 ஆகும்.

**தேயிலையின் நீளம், தரம் மற்றும் பல்வேறுபட்ட விருப்பங்களுக்கேற்ப தெரிவு செய்வு தேயிலை பறிக்கும் இயந்திரம்**




இக் கண்டுபிடிப்பானது ப/21எப்00409 சாபவீ அஜித் குமார கேஏஈ (21 (சு) கெஹேப) என்பவரால் தேயிலையின் நீளம், தரம் மற்றும் பல்வேறுபட்ட விருப்பங்களுக்கேற்ப தெரிவு செய்யும் தேயிலை பறிக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோடு இதற்கான செலவு ரூபா 23,000.00 ஆகும்.

**<u>இலங்கை தரைப்படையின் வேலை திட்டங்கள்</u>**

1. இலங்கை தரைப்படையினால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களான, கட்டுமான பணிகள், மீள் சீரமைத்தல், நில கட்டமைப்பு வேலைதிட்டங்கள் இலங்கை பூராவும் நடைபெறுகின்றன. அவற்றில் சில வேலைதிட்டங்கள் கீழ்குறிப்பிடப்பட்டுளளன.



வழக்கறிஞர் ஜென்ரல் அலுவலகம் - மன்னார்



கீரிமலை வீடமைப்பு திட்டம்



ராகமை பெசிலிகா தேவாலயம்



விளையாட்டு அமைச்சர் வதிவிடம்



பிரதம மந்திரி வதிவிட பங்களா - நுவரெலியா



பிலிம காயா - ருவன்வெலி மஹா சயா



வாஹுகந்த ஏரி - கொமரங்கடுவெல



ரோயல் கல்லூரி பொலன்னறுவை



திலூனா அல் அஸ்கா முஸ்லீம் கல்லூரி - பொலன்னறுவை



கன்டுபொடா ஞானம் செய்யுமிடம்



சிருநீரக வைத்தியசாலை



போகஸ்வெவ நீர் சுத்திகரிப்பு தொழிற்கூடம்

## இலங்கை தரைப்படை அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள்

1. **அரனாயக மற்றும் எலங்கபிடிய பகுதிகளில் மண்சரிவு.** அரனாயக கிராமத்தில் ஏற்பட்ட மண்சரிவு மீட்பு பணி தேவைகளுக்காக 300 படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டதோடு அவர்கள் 150 பொதுமக்களை மீட்டெடுத்தனர். எலங்கபிடிய சம்சரா மலை தொடரின் மண்சரிவு மீட்டுப்பணிகள் பாதுகாப்பு படை தளபதியின் (கிழக்கு) மேற்பார்வையின் கீழ் நடாத்தப்பட்டது.






2. **பிலிமந்தலாவ ரன்மலகா கிராமத்தில் நிலச்சரிவு.** சீரற்ற காலநிலை காரணமாக 2016 மே மாதம் 17 ஆம் திகதி நிலச்சரிவு ஏற்பட்டதோடு 04 ஆண்களும் 02 பெண்களும் இறந்ததோடு 02 வீடுகள் சேதமடைந்தன. பாதுகாப்பு படை தளபதியின் (மத்தி) மேற்பார்வையின் கீழ் 2 (சு) இசிப இனால் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.




3. **<u>வெள்ளம்.</u>** கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த 20,000 பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். மேலும் மனிதாபிமான உதவிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம் மாற்றல் ஆகிய மீட்புப்பணி நடவடிக்கைகள் இலங்கை தரைப்படையினால் மேற்கொள்ளப்பட்டது.










4. **<u>வரட்சி.</u>** அடிக்கடி வரட்சி காரணமாக பாதிக்கப்படும் பொலன்னறுவை மக்களுக்கு பாதுகாப்பு படை (கிழக்கு) சேர்ந்த படைவீரர்களால் குடிநீர் வழங்கப்பட்டது. பொலன்னறுவை மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டின் கடைசி பகுதியில் 70,431 பொதுமக்களும் 18,951 குடும்பங்களும் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டார்கள். வெலிகந்த, திம்புலாகல, லங்காபுர, தாமன்கடுவ, மெதிரிகிரிய மற்றும் ஹிங்குராங்கொட பிரதேச செயலங்களுக்குரிய பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை நிலவியது. பாதுகாப்பு படை தலைமையகத்தினால் (கிழக்கு) குடிநீர் வசதிகள் தண்ணீர் வண்டிகள் மூலம் வழங்கப்பட்டன.





## இராணுவ செயலாளர் கிளை

1. மேஜர் ஜெனரல் பதவியில் இருக்கும் பிரதம பதவி நிலை அதிகாரியான இராணுவ செயலாளரின் கீழ் இராணுவ செயலக அலுவலகம் நிர்வகிக்கப்படுகின்றது. இராணுவ அதிகாரிகள் சம்பந்தமாக மனித வள முகாமைத்துவ வேலைத் திட்டங்கள் இவ்வலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

2. **2016 ஆம் ஆண்டு அடையப்பட்ட இலக்குகள்.** இவ்வருடத்தில் இராணுவ செயலக அலுவலகத்தினால் அடையப்பட்ட இலக்குகள் கீழ்வருமாறு

அ. கீழ் காணப்படும் பதவி உயர் குழு இக் கிளையின் மூலம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

| இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை | | பதவி உயர்த்தப்பட்ட அதிகாரிகள் | |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தர | சுயேட்சை | நிரந்தர | சுயேட்சை |
| 1. | 2/லெப்டினன் தொடக்கம் லெப்டினன் வரை (5 சபை) | 254 | 52 | 156 | 37 |
| 2. | லெப்டினன் தொடக்கம் கப்டன் வரை (9 சபை) | 952 | 220 | 565 | 117 |
| 3. | கப்டன் தொடக்கம் மேஜர் வரை (1 சபை) | 304 | 18 | 134 | 11 |
| 4. | மேஜர் தொடக்கம் த/லெப்டினன் கேர்ணல் வரை (1 சபை) | 63 | - | 49 | - |
| 5. | லெப்டினன் கேர்ணல் தொடக்கம் த/கேர்ணல் வரை (1 சபை) | 61 | - | 28 | - |
| 6. | கேர்ணல் தொடக்கம் த/பிரிகேடியர் வரை (4 சபை) | 130 | 13 | 46 | 02 |
| 7. | பிரிகேடியர் தொடக்கம் த/மேஜர் ஜென்ரல் வரை (3 சபை) | 110 | - | 20 | - |

அட்டவனை 8.1: அதிகாரிகளின் பதவி உயர்வுகள் பற்றிய விபரங்கள்.

ஆ. 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்ற அதிகாரிகளின் ஒப்பீட்டு விபரம் கீழ்வருமாறு:

| இல | விபரம் | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|
| 1. | 2/லெப்டினன் | 13 | 16 | 14 |
| 2. | லெப்டினன் | 163 | 93 | 49 |
| 3. | கெப்டன் | 49 | 84 | 106 |
| 4. | மேஜர் | 94 | 112 | 107 |
| 5. | லெப்டினன் கேர்ணல் | 21 | 17 | 23 |
| 6. | கேர்னல் | 5 | 13 | 13 |
| 7. | பிரிகேடியர் | 5 | 5 | 10 |
| 8. | மேஜர் ஜெனரல் | 8 | 6 | 25 |
| 9. | லெப்டினன் ஜெனரல் | - | 2 | - |
| | **மொத்தம்** | **358** | **348** | **398** |

அட்டவனை 8.2: 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்ற அதிகாரிகளின் ஒப்பீட்டு விபரம்.

இ. பாதுகாப்பு படை தலைமையகங்கள், படைபிரிவு தலைமையகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இராணுவ செயலாளர் கிளையினால் 5 நிர்வாக கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதோடு நிலுவையிலுள்ள நிர்வாக விடயங்களை நிவர்த்தி செய்யவும், எவ்வாறு நிர்வாக பிரச்சினைகளை குறைத்துக்கொள்வது சம்பந்தமாக ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

ஈ. தரைப்படை தளபதியின் கட்டளைப்படி தரைப்படையின் அபிவிருத்திற்கு தடையாகக் இருக்கக் கூடிய பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்கு எடுக்கக் கூடிய தீர்வுகள் பற்றி கருத்துக்களை எடுத்துக் காட்டுவதற்காக இராணுவ செயலாளர் கிளையினால் 32 பரிபாலனை குழுக்கள் நிறுவப்பட்டன.

உ. தரைப்படை தளபதியின் கட்டளைப்படி இராணுவ செயலாளர் கிளையினால் கீழ் குறிப்பிடப்பட்ட கொள்கைகள் மற்றும் அடிப்படை கட்டளை விதிகள் என்பன பிரசுரிக்கப்பட்டன.

(1) அனுமதியின்றி விடுமுறையில் உள்ளவர்களுக்கான கொள்கைகள்.
(2) வெளிநாட்டு பாடநெறி மற்றும் விஜயங்களுக்கு அதிகாரிகளை தெரிவு செய்யும் கொள்ளைகள்.
(3) நிரந்தர மற்றும் சுயேட்சை படைபிரிவுகளுக்கு கட்டளை தளபதிகளை நியமிக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய கட்டளை விதிகள்.
(4) மேலதிக படைபிரிவு நியமணங்கள் அதிகாரிகளுக்கான கட்டளை விதிகள் (திருத்தங்கள்).
(5) தண்டனைகள் வழங்குவதற்கான நியதிகள் (02 கடிதங்கள்).
(6) தொழில்நுட்ப மதீப்பீட்டுக் குழு கொள்கை கடிதங்கள்.

3. **<u>நிகழ்வுகள் மற்றும் நெறிமுறை ஏற்பாடுகள்.</u>** இராணுவ செயலாளர் கிளையினால் பின்வரும் நிகழ்வுகள் மற்றும் நெறிமுறை ஏற்பாடுகள் ஒன்றினைக்கப்பட்டு வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

அ. **<u>பதவிநிலை கலந்துரையாடல்கள்.</u>** இராணுவ செயலாளர் கிளையினால் பின்வரும் பதவிநிலை கலந்துரையாடல் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

(1) ஐந்தாவது இந்தியா - 2016 ஜனவரி 20 தொடக்கம் 22 வரை இலங்கை தரைப்படை, தரைப்படை பதவிநிலை கலந்துரையாடல்கள் இந்தியாவில் நடாத்தப்பட்டன.

(2) 2016 ஜூலை மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை இந்திய மற்றும் இலங்கை பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கு இடையில் இரண்டாவது மூலோபாய விவாதம் முப்படை தளபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

(3) 2016 ஆம் ஆண்டு தொடர்ச்சியாக ஆறாவது வருடமாக கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு **"மென்மையான போக்கும் அதன் உலகலாவிய போக்கின் செல்வாக்கும்"** என்னும் தொனிப்பொருளில் நடைபெற்றது.

4. **<u>எதிர்கால திட்டங்கள்</u>** இராணுவ செயலாளர் கிளையினை செயற்திறன் மற்றும் வினைதிறன் மிக்க நிறுவனமாக மாற்றுவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

அ. இராணுவ செயலாளர் கிளையினை மீள்கட்டமைப்பு மற்றும் விரிவுபடுத்த எண்ணப்பட்டுள்ளது. தற்போதய மற்றும் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப இராணுவ செயலாளர் கிளையின் அமைப்பை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆ. இராணுவ செயலாளர் கிளையின் தரவுகளை தானியக்கி முறையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்வுள்ளது. இராணுவ செயலாளர் கிளையினை துல்லியமாகவும் திறனுடன் கூடிய முறையில் தொழில்படுத்தவும் தெரிவு செய்தல்களின் போது மனித காரணி மற்றும் மனித ஈடுபாட்டை குறைக்கவும் தரவு மற்றும் பதிவுகளை தானியக்கி முறையில் பெறுவதற்குரிய முறைமையை அமுல்படுத்தவும் எண்ணப்பட்டுள்ளது.

## பிரதம பதவி நிலை அதிகாரிகள் கிளை

1. இலங்கை இராணுவத் தலைமையகத்தின் முக்கிய கிளையாக திகழ்வுடன் நிறுவனங்களின் நடவடிக்கை, பயிற்சி, திட்டமிடல் மற்றும் இராணுவ புலனாய்வு ஆகியவற்றை ஒருங்கினைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் இக்கிளையின் பிரதான கடமைகளாகும். பிரதம பதவிநிலை பணிப்பக குழும தலைவரினால் இக் கிளை நிர்வாகம் செய்யப்படுவதோடு அவர் மேஜர் ஜெனரல் நிலையில் உள்ள இலங்கை தரைப்படையில் உள்ள 6 பிரதான பதவி நிலைகளில் ஒருவர் ஆவர். இரண்டு ஆலோசனை தலைமையகங்கள், 8 பணிப்பக குழுமங்கள் மற்றும் 4 படைபிரிவு தலைமையங்கள் இக் கிளையின் கீழ் இயக்கப்படுகின்றன.




வரைபடம் 9.1: பிரதம பதவி நிலை அதிகாரிகள் கிளையின் கீழ் உள்ள கட்டமைப்புக்கள்.

### வருடத்தின் எய்தப்பட்ட சாதனைகள்

2. இவ்வாண்டு வெவ்வேறு நோக்கங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட சாதனை முறைகளை உணாந்து கொள்ள முடிந்தது. இலங்கை தரைப்படையை சேர்ந்த (26 அதிகாரிகள் உட்பட 190 ஏனைய நிலையினர்) 2 ஐக்கிய நாட்டு அமைதி காக்கும் பணிகளுக்காக அமர்த்தப்பட்டனர். இயற்கை அனர்த்த மீட்புப்பணி, தொழிற்சங்க நடவடிக்கைகளின் போது அத்தியாவசியமான சேவைகளை நடைமுறைபடுத்த அரசாங்கத்துக்கு உதவுதல், சட்டவீரோதமாக மண்வெட்டுதல், மரம் வெட்டுதல், வேட்டையாடுதல் மற்றும் நீதி மற்றும் சட்டத்தை காக்க பொலிசாருக்கு உதவுதல் ஆகிய நடவடிக்கைகள் தரைப்படை படைவீரர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொலைத்தொடர்பு விடயத்தில் தரைப்படை தகவல் மற்றும் தரவு தொடர்பாடல் கட்டமைப்பு விருத்தி செய்யப்பட்டதோடு புதிய வலையமைப்பு வசதிகளும் நீடிக்கப்பட்டன. இவ்வாண்டு சமூக உலவியல் செயற்பாடுகளும் பாரியளவில் முன்னேற்றத்தை காட்டின. அகில இலங்கை ரீதியாக சமூக உலவியல் நிகழ்ச்சித் திட்டங்கள் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் கருத்தரங்குகள் படைவீரர்களின் நன்மைக்காக நடாத்தப்பட்டன. தற்போதய இலங்கை தரைப்படையை நவீனமயப்படுத்த முக முக்கிய நபர்களை பாதுகாத்தல் பெண்கள் அணி, உணவு வழங்கல் மற்றும் பரிமாறல் படையணி, போர் உபகரண பயிற்சி பாடசாலை. போர் உபகரண தொழிற்சாலை, 15 ஆவது ஆளில்லா வானூர்தி வாகன படை என்பன புதிதாக ஆரம்பிக்கப்பட்டன.

**<u>போர் நடவடிக்கை பணிப்பக குழுமம்</u>**

3. போர் நடவடிக்கை சேவைகளின் கடமைகள், போர் நடவடிக்கை உபாய முறைகள், எண்ணக்கருக்கள், திடீர் திட்டங்கள் மற்றும் போர் நடவடிக்கை சேவையின் ஆலோசனைகள் தொடர்பாக பதவிநிலை கடமைகள் ஆகியவற்றை மேற்கொள்ளல் தரைப் படை போர் நடவடிக்கை பணிப்பாளர் குழுமத்தின் பொறுப்புகளாகும்.

4. **<u>பிரதான செயற்பாடும் அதன் முன்னேற்றமும்</u>.** போர் நடவடிக்கை பணிப்பக குழுமத்தின் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம் பின்வருமாறு.

அ. பாதுகாப்பு படை தலைமையகங்கள் யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மேற்கு ஆகியன தங்களது கண்காப்பின் கீழ் உள்ள பிரதேசங்களின் படைபிரிவு மற்றும் படையணிகளின் உதவியுடன் உரோந்து நடவடிக்கை மற்றும் சுற்றிவளைப்பு தேடுதல்களை மேற்கொன்டு ஒழித்து வைத்துள்ள ஆயுதங்கள், போர் உபகரணங்கள் மற்றும் சன்னங்கள் என்பவற்றை கண்டுபிடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ. அகில இலங்கை ரீதியாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு மற்றும் தேசிய கட்டுமானப்பணி திட்டங்களை துரிதப்படுத்த இப்பணிப்பகமானது முழு ஒத்துழைப்பு மற்றும் ஆதரவை வழங்குகிறது. சாலாவ பிரதேசத்தின் இயற்கை அனர்த்த நடவடிக்கைகளுக்காக படையினர் அமர்த்தப்பட்டுள்ளனர். அவசர நிலைமைகளில் செயற்படும் பொருட்டு தேடல் மற்றும் மீட்புக் குழு பணிகளுக்கு 55 தரைப்படை குழுக்கள் 25 மாவட்டங்களும் உள்ளடங்கியவாறு நிலைபடுத்தப்பட்டுள்ளனர்

5. **<u>ஐக்கிய நாட்டு அமைதி காக்கு படை பணிகளுக்காக பணியமர்த்தல்</u>.** ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளுக்காக பின்வருவோர் பணியமர்த்தப்பட்டனர்.

அ. 10 அதிகாரிகளும் 140 சிப்பாய்களும் (10 ஆவது படை பாதுகாப்பு நிறுவனத்துக்கு) 2016.02.06 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு லெபனான் அமைதிகாக்கும் பணிகளுக்காக இணைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆ. 16 அதிகாரிகளும் 50 சிப்பாய்களும் (4 ஆவது 2 ஆம் நிலை இராணுவ வைத்தியசாலை) 2016.06.07 ஆந் திகதியில் இருந்து ஒரு வருட காலத்திற்கு தென் சூடான் அமைதிகாக்கும் பணிகளுக்காக இணைக்கப்பட்டுள்ளார்கள்.

6. **<u>செயற்திறன் அபிவிருத்தி நடவடிக்கை</u>.** அவசர நிலைமைகளில் செயற்படும் பொருட்டு தேடல் மற்றும் மீட்புக் பணி குழுக்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக 4 மில்லியன் ரூபாவும் மேலதிகமாக 36 மில்லியன் ரூபா தேடல் மற்றும் மீட்புக் குழு, தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்காக செலவிடப்பட்டது. தேர்ச்சிவாய்ந்த மற்றும் நுட்பங்களுடன் கூடிய தேடல் மற்றும் மீட்புக் குழுவை இலங்கை தரைப்படை கொண்டுள்ளது.

**<u>பயிற்றுனர் பணிப்பக குழுமம்</u>**

7. தரைப்படை பயிற்றுவிப்பு கொள்கைகள், வழிகாட்டல்கள் மற்றும் இராணுவத் தளபதியின் ஆலோசனைகளை மேம்படுத்துதல் மற்றும் அனைத்து இராணுவம் மற்றும் இராணுவமல்லாத பயிற்சி பயிற்சிகளையும் ஒன்றினைத்து பாடநெறிகளை நடாத்தல் என்பன பயிற்றுனர் பணிப்பக குழுமத்தின் பொறுப்புக்களாகும். 2016 பயிற்சி வழிகாட்டலுக்கு அமைய அனைத்து பயிற்சி நிறுவனங்களும் முழுமையான பயிற்சிகளை வழங்க உறுதிப்பாட்டுடன் உள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட மேஜர் நிலைக்கான பட்டியலில் இல்லாத மற்றும் ஒய்வுபெறும் தருவாயில் உள்ள அதிகாரிகளுக்காக இராணுவம் சாராத பாடநெறிகள் வழக்கத்துக்கு அப்பால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் அனுமதிக்கப்ட்ட நிதி எல்லைக்குள் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயிற்சி அட்டவனைக்கு ஏற்றவாறு பாடநெறிகளை நடாத்துவதற்கு பாதுகாப்பு படை தலைமையங்கள், படைபிரிவுகள் என்பன ஒத்துழைப்புக்களை வழங்கின.

8. **<u>பிரதான செயற்பாடும் அதன் முன்னேற்றமும்</u>.** படைவீரர்களுக்கு தமிழ் மொழித்திறனை அதிகரிப்பதற்காக தேசிய கல்வி மொழி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் உதவியுடன் அனைத்து பாதுகாப்பு படை தலைமையங்களில் 12 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. அதிகபடியான வெளிநாட்டு பங்கேற்பாளர்களுடன் கொமரன்ட் ஸ்டைக் 2016 மற்றும் மித்ர சக்தி ஆகியன இலங்கையில் நடாத்தப்பட்டன. இலங்கை தரைப்படையினால் நடாத்தப்படுகின்ற நிர்வாக கட்டளைகள் மற்றும் ஒன்றினைந்த பதவிநிலை மற்றும் கட்டளைகள் பாடநெறிகளை பயில்வதற்கு வெளிநாட்டவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. மேலும் ஒன்றினைந்த கூட்டு பயிற்சிகள் சேவை மற்றும் ஒத்துழைப்பு வழங்கும் படைபிரிவுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

மேலும் தரைப்படையில் 22 வருட சேவையை முடித்து ஓய்வுபெற இருக்கும் அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்காக தேசிய தொழில்துறை நிறுவனத்துடன் ஒன்றினைந்து தொழில்துறை பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 5 ஆரம்ப பயிற்றுனர் பாடசாலைகளுக்கும் தரைப்படை பயிற்சி பாடசாலைகளுக்கு முறையே 97 மில்லியன், 75 மில்லியன் ரூபா கட்டுமான பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகாரிகளுக்கு பட்டப்படிப்பு, டிப்லோமா மற்றும் சான்றிதல் பாடநெறிகளை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பயில்வதற்காக வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆங்கிலம், தமிழ் மற்றும் பிரான்ஸ் ஆகிய மொழிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பயில்வதற்காக ஊக்கமளிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியக் குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட அடிப்படைகளுக்கு அமைய தரைப்படை அங்கத்தவர்களுக்கு பல்கலைக்கழகத்துக்கு உட்சேர்வதற்கு அதிகபடியான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

9. **உட்சேர்ப்பு மற்றும் உள்நாட்டு பயிற்சிகள்.** 2016 ஆம் ஆண்டு 214 அதிகாரிகள் தியதலாவை இராணுவ கல்விக் கழகத்தில் இருந்து அதிகாரிகள் தரத்திற்கு உட்படுத்தப்பட்டதோடு 552 பயிலுனர்கள் புதிதாக உட்சேர்க்கப்பட்டார்கள். எழுதுனர், வாகன ஓட்டுனர், ஒரு துறையில் நிபுனத்துவம் பெற்ற 8190 பேர் தரைப்படைக்கு புதிதாக உட்சேர்க்கப்பட்டனர். மேலும் இலங்கை மகளீர் படைபிரிவிற்கு 256 பெண் படை வீராங்கனைகள் புதிதாக உட்சேர்க்கப்பட்டனர்.

10. தரைப் படை பயிற்சி பாடசாலை மற்றும் படைபிரிவு பயிற்சிப் பாடசாலைகளில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் சாராம்சம் கீழ்வருமாறாகும்.

| **இல** | **நிறுவனத்தின் விபரம்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | தரைபடை பயிற்சி பாடசாலை | 6,163 | 3,835 |
| 2. | படைபிரிவு பயிற்சிப் பாடசாலை | 3,170 | 2,792 |
| | **மொத்தம்** | **9,332** | **6,627** |

அட்டவனை 9.1: உட்சேர்ப்பு மற்றும் உள்நாட்டு பயிற்சிகள்.

11. **களபயிற்சி பயிற்சிகள்.** 2016 ஆம் ஆண்டு பின்வரும் களபயிற்சி பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

| **இல** | **விபரம்** | **இடம்** | **கால எல்லை** | **பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை** | |
|---|---|---|---|---|---|
| 1. | கொமரன்ட் ஸ்டைக் பயிற்சி | கோகிலாய் - பனாமா | 2016.09.23 - 2016.09.25 | 5,441 | 58 |
| 2. | மித்ர சக்தி பயிற்சி | இசிப தலைமை காரியாலயம் | 2016.10.24 - 2016.11.06 | 90 | 45 |
| | **மொத்தம்** | | | **5,531** | 103 |

அட்டவனை 9.2: கள பயிற்சிகள்.

12. **இராணுவம் சாராத பயிற்சிகள்.** 2016 ஆம் ஆண்டில் பல்வேறு சிவில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைகழகங்களில் இராணுவமல்லாத பாடநெறிகளை கற்பதற்காக 383 அதிகாரிகள் மற்றும் 2742 ஏனைய அலுவலர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 352 அதிகாரிகள் மற்றும் 517 ஏனைய அலுவலர்களுக்கும் போதனைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகள் என்பவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பங்குகொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்காக வெளிவாரியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் ஒழுங்குசெய்யப்பட்டன.

13. **<u>வெளிநாட்டு பயற்சிகள்.</u>** வெளிநாட்டு விஜயங்கள்/ போதனைகள்/ கருத்தரங்குகள்/ பயிற்சிகள் என்பவற்றுக்காக அதிகாரிகள் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கும் பங்குபற்றிய விபரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது

| இல | விபரம் | அதிகாரிகள் | ஏனைய நிலையினர் |
|---|---|---|---|
| 1. | வெளிநாட்டு விஜயம்/போதனை/கருத்தரங்குகள்/பயிற்சிகள் | 140 | 78 |
| 2. | வெளிநாட்டு பாடநெறிகள் | 693 | 388 |
| 3. | ஐக்கிய நாட்டு பாடநெறிகள்/ போதனைகள்/ கருத்தரங்குகள் | 26 | - |
| | **மொத்தம்** | **589** | **466** |

அட்டவனை 9.3: வெளிநாட்டு பயற்சிகள்.

14. இப்பணிப்பக குழுமத்தின் ஏற்பாட்டில் 04 வெளிநாட்டு பிரதிநிதிகள் விஜயம் மேற்கொன்டார்கள் மேலும் பாகிஸ்தானில் நடைபெற்ற மூன்று பிரிவு ஈகல் டேஸ் - 1 (2016) பயிற்சிக்கு 12 அதிகாரிகள் உட்பட 34 ஏனைய நிலையினர் பங்குபற்றினர்.

அ. 2016 ஆம் ஆண்டு வெளிநாட்டு பயிற்சிகளுக்கு பங்குபற்றிய அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினர் விபரம் கீழ்வருமாறு:

| இல | விபரம் | நாடு | கால எல்லை | | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | அதிகாரிகள் | ஏனைய நிலையினர் |
| 1. | பாகிஸ்தான் தரைபடை உடல் சுறுசுறுப்பு போர் திறன் கட்டமைப்பு போட்டி | பாகிஸ்தான் | 2016.10.18 | 2016.10.26 | 04 | 23 |
| 2. | 2 சர்வதேச உரோந்து நடவடிக்கை போட்டி | பிரேசில் | 2016.08.15 | 2016.08.26 | 03 | 08 |
| 3. | பரசூட் பாயும் உபகரணம் | பாகிஸ்தான் | 2016.05.30 | 2016.06.11 | 04 | 28 |
| 4. | பாகிஸ்தான் தரைபடை கூட்டு முயற்சி | பாகிஸ்தான் | 2016.03.31 | 2016.04.08 | 04 | 07 |

அட்டவனை 9.4: வெளிநாட்டு போட்டிகள்.

15. **<u>செயற்திறன் அபிவிருத்தி நடவடிக்கை.</u>** இந்தியா/பாகிஸ்தான் தரைப்படை பதவிநிலை அதிகாரிகளுடன் இராணுவ பதவிநிலை கலந்துரையாடல்கள் மற்றும் அனுபவங்களை பரிமாற்றுக்கொள்ளும் விடயங்கள் (பயிற்றுனர் பரிமாறல்கள்) ஆகியன கூட்டங்களில் விரிவாக கலந்துறையாடப்பட்டன. மேலும் வெளிநாட்டு பாடநெறிகள்/ பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப உபகரன கற்பித்தல் முறைகள் ஆகிய விடங்களை அதிகரிக்கும் வழிமுறைகள் என்பன கருத்தில் கொள்ளப்பட்டன.

16. **<u>சிக்கல்கள் மற்றும் சவால்கள்.</u>** நிதியியல் கட்டுப்பாடுகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் மட்டுமே உயர் கல்வியை கற்பதற்குரிய நிதிகளை பெறுகிறார்கள். மேலும் 81 மிமி மோட்டார் மற்றும் ஏனைய பீரங்கி ஆயுத பயிற்சியரங்கு தரைப்படைக்கு இல்லாத காரணத்தினால் தற்போது கல்பிடிய விமானப்படை பயிற்சியரங்கில் பீரங்கீ மற்றும் படையணி சார்ந்த ஆயுதங்களின் சுடுதல் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திட்டமிடல் பணிப்பக குழுமம்**

17. இராணுவத் போர் திறன்களை பேனுவதற்காக போர் உபகரணங்கள்/ துப்பாக்கிகள்/ சன்னங்கள்/ விசேட உபகரணங்கள் என்பவற்றை வழங்குதல், தரைப்படையின் சுமூகமான செயற்பாட்டுக்கு உதவுதல் என்பவற்றுக்காக இப் பணிப்பக குழுமம் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

18. தரைப்படைக்கு தேவையான உபகரண கொள்வனவுக்கு மேலாக 2017 ஆம் ஆண்டுக்கான போர் உபகரண ஆலோசனை குழு, கொமாண்டோ படைபிரிவு மற்றும் விசேட படை படைபிரிவு என்பவற்றை நவீனமயபடுத்தும் நடவடிக்கை, 3 வருட மற்றும் 5 வருட வெடிபொருட்கள் திட்டம் மற்றும் மாலி ஐக்கிய நாட்டு அமைதி காக்கும் பணி ஆகியவற்றுக்கும் 2016 ஆம் ஆண்டு அதிக முக்கியதுவம் அளிக்கப்பட்டது.

19. **பிரதான செயற்பாடும் அதன் முன்னேற்றமும்.** இப்பணிப்பக குழுமத்தின் ஒருங்கினைப்புடன் வெலிசர கடற்படை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சபையினால் 5 மில்லியன் பெறுமதியான சிருரக ஆயுத தானியங்கி மாதிரி அமைப்புக்கள் நான்கை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாலி ஐக்கிய நாட்டு அமைதி காக்கும் பணிகளுக்கு படையினரை பணியமர்த்த தேவையான கவசவாகனங்களை புதுப்பித்தல் மற்றும் கொள்முதல் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கொமாண்டோ மற்றும் விசேட படை படைபிரிவு என்பவற்றை நவீனமயபடுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட திட்டத்தின் பகுதி 1 தற்போது நடைமுறையிலுள்ளது. வெடிப்பொருள் அகற்றும் ஆலை, பொறியியல் படைபிரிவுக்குரிய உபகரணங்கள், ஆயுதங்கள் தயாரிக்கும் ஆலை மற்றும் இந்திய கடன் வரியிடமிருந்து ஆயுத போக்குவரத்து வாகனங்கள் என்பன கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. மேலும் கீரி/நாய்களை கொண்டு கன்னிவெடி/வெடிபொருட்கள் ஆகியவற்றை அடையாளம் காண்பதற்குரிய ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

20 **பிரச்சினைகள் மற்றும் சவால்கள்.** தொழில் நுட்ப மதீப்பீட்டு அறிக்கையை நிறைவு செய்தல், இறுதிப் பயன் பெறுனர்கள் மற்றும் பணிப்பக குழுமத் தலைவர்கள் ஆகியோரிடம் இருந்து பெறப்படுகின்ற பரிந்துரைகள் ஆகியவற்றில் இடையூறுகள் காணப்படுவதால் பொருட்கள் கொள்வனவின் போது காலதாமதம் ஏற்படுகிறது. மேலும் வெளிநாட்டு கொள்வனவுகளின் போது தொழில் நுட்ப மதீப்பீட்டு குழுவினால் மாதிரிகளை கொனர்வித்து பரிசோதித்து சரி பார்க்க காலம் செல்வதால் பொருட்கள் கொள்வனவின் போதும் காலதாமதம் ஏற்படுகிறது.

**உளவியல் நடவடிக்கை பணிப்பக குழுமம்**

21. உளவியல் நடவடிக்கை பணிப்பக குழுமமானது பாதுகாப்பு படை தலைமையங்கள் மற்றும் படைபிரிவு தலைமையங்கள் ஆகியவற்றின் கீழியங்கும் நடவடிக்கை குழுக்கள் மூலம் இயக்கப்படுவதுடன் சரியான மற்றும் தேவையான நேரங்களில் உளவியல் நடவடிக்கை பணிகளை தேர்தெடுக்கப்பட்ட மக்கள் குழுக்களுக்கு வெளியிடுதல் மற்றும் விளிப்புனர்வு நடவடிக்கைகளை அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தல் இவ் பணிப்பக குழுமத்தின் முக்கிய நோக்கமாகும்.

22. **பிரதான செயற்பாடும் அதன் முன்னேற்றமும்.**

அ. இவ்வாண்டு மாதாந்தம் 32 பக்கங்களை கொண்ட ரணவிருவா பத்திரிகை 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு அவை படையினருக்கு மற்றும் விரும்பி படிப்போருக்கும் தேவைக்கேற்ப விநியோகிக்கப்பட்டது.

ஆ. இப்பணிப்பக குழுமத்தினால் விழிப்பணர்வு பயிற்சிகள், தியான நிகழ்ச்சிகள், சட்ட சிக்கல்களை தீர்ப்பதற்கான அறிவை மேம்படுத்தல், பெண்கள் உரிமை மற்றும் நேர்மறையான அனுகுமுறை மூலம் வாழ்கை தரத்தை உயர்த்தல் ஆகியவற்றுக்கான பல்வேறுபட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

| இல | நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றியோர் |
|---|---|---|
| (அ) | (ஆ) | (இ) |
| 1. | தியான நிகழ்ச்சிகள் | 599 படை வீரர்கள் |
| 2. | விழிப்பணர்வு பயிற்சிகள் பயிற்றுனர் நிகழ்ச்சி | 8,456 படை வீரர்கள் |
| 3. | சட்ட சிக்கல்களை தீர்ப்பதற்கான அறிவை மேம்படுத்தல்/ பெண்கள் உரிமை மற்றும் நேர்மறையான அனுகுமுறை மூலம் வாழ்கை தரத்தை அதிகரித்தல் | 1,164 பெண் படை வீரர்கள் |

| (அ) | (ஆ) | (இ) |
|---|---|---|
| 4. | சட்டத்துக்கு புறம்பான செயல்களை தடுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 8,332 பெண் படை வீரர்கள் |
| 5. | சுகபோக வாழ்க்கைக்கான வழிமுறைகள் நிகழ்ச்சித்திட்டம் | 210 படை வீரர்கள் |

அட்டவனை 9.5: விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் தியான நிகழ்ச்சிகள்.

23. **<u>எதிர்கால நோக்கல்கள்</u>.** நான்கு பாதுகாப்பு படை தலைமையங்களில் உளவியல் நடவடிக்கை குழுக்கள் செயற்பட்டு வருவதோடு ஏனைய பாதுகாப்பு படை தலைமையங்களுக்கும் படைசேனை தலைமையங்களுக்கும் அர்ப்பனிப்பு மிக்க உளவியல் நடவடிக்கை குழுக்களை நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எதிர்கால தேவைகளுக்கேற்ப உளவியல் நடவடிக்கைளை மேற்கொள்ள வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகள் மற்றும் கருத்தரங்குகள் அதிகாரிகளுக்கு வழங்கப்படவேண்டுமென பரிந்துரை செய்யப்படுகிறது.

**<u>பதவிநிலை பணிப்பக குழுமம்</u>**

24. பதவிநிலை பணிப்பக குழுமமானது பிரிகேடியர் நிலையிலுள்ள பதவிநிலை பணிப்பக குழும தலைவரினால் தலைமை தாங்கப்படுகிறது. தரைப்படையின் தொகுப்பு நடைமுறைபடுத்தல் மற்றும் கண்காணித்தல், பயிலுனர் அதிகாரிகளை மற்றும் சிப்பாய்களை ஆட்சேர்ப்பு செய்தல் ஆகியவற்றுக்கு அனுமதியை பெற்றுக் கொள்வது இவ் பணிப்பகத்தின் பொறுப்பாகும். மேலும் தரைப்படை நிறுவனங்களின் கட்டமைப்புக்கள் மற்றும் சிவில் ஊழியர்களை ஒதுக்கீடு செய்தல் என்பன அதன் முக்கிய பொறுப்புக்களாகும்.

25. அனைத்து நிறுவுனங்களும் தங்களது பணிகளை வினைத்திறனுடன் புரிவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல், தரைப்படையை தடங்கலின்றி முன்னோக்கி செல்வதற்காக படைவீரர்கள் மற்றும் சிவில் உறுப்பினர்கள் ஆகியோரை சிறந்த முறையில் முகாமைததுவபடுத்தல் என்பன இப்பணிப்பக குழுமத்தின் முக்கிய பொறுப்புக்களாகும்.

26. **<u>இவ்வாண்டு கணக்கெடுப்பு</u>.** 2016 ஆம் ஆண்டு இலங்கை தரைப்படையில் கடமை புரிகின்ற அதிகாரிகள் மற்றும் ஏனையநிலையினர் விபரம் கீழ்வருமாறு (2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாத சம்பள புத்தகத்தில் இருந்து பெறபட்ட தகவல்).

| விபரம் | அதிகாரிகள் | | ஏனைய நிலையினர் | |
|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட | கடமையிலுள்ள | அங்கீகரிக்கப்பட்ட | கடமையிலுள்ள |
| நிரந்தர படை | 7,743 | 7,175 | 119,570 | 106,332 |
| சுயேட்சை படை | 2,899 | 2,559 | 70,149 | 61,072 |
| **மொத்தம்** | **10,642** | **9,734** | **189,719** | **167,404** |

அட்டவனை 9.6: அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினர் எண்ணிக்கை.

27. **<u>வருடத்தில் அடையப்பட்ட இலக்குகள்</u>.** இவ்வருடத்தில் எய்தப்பட்ட இலக்குகள் பற்றிய விபரம் கீழ்வருமாறு.

அ. 2014 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் தரைப்படைக்கு அனுமதிக்கப்பட்ட மற்றும் உட்சேர்க்கப்பட்ட படைவீரர்கள் விபரம் கீழ்வருமாறு:

| விபரம் | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக் கப்பட்ட | உட்சேர்க் கப்பட்ட | அங்கீகரிக் கப்பட்ட | உட்சேர்க் கப்பட்ட | அங்கீகரிக் கப்பட்ட | உட்சேர்க் கப்பட்ட |
| அதிகாரிகள் | நிரந்தர | 492 | 297 | 360 | 267 | 558 | 146 |
| | சுயேட்சை | 201 | 141 | 111 | 67 | 79 | 52 |
| ஏனைய நிலையினர் | நிரந்தர | 9,814 | 9,484 | 6,173 | 5,950 | 14,320 | 6,270 |
| | சுயேட்சை | 10,517 | 7,143 | 3,891 | 3,681 | 3,134 | 2,480 |

அட்டவனை 9.7: அனுமதிக்கப்பட்ட மற்றும் உட்சேர்க்கப்பட்ட படைவீரர்கள் விபரம்.

28. அனுமதிக்கப்பட்ட மற்றும் உட்சேர்க்கப்பட்ட படைவீரர்களின் ஒப்பிடுகை







படவுரு 9.1: உட்சேர்ப்புக்களின் முன்னேற்றம்.

29. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட சிவில் அங்கத்தவர்கள் விபரம் கீழ்வருமாறு. தரைப்படையின் நிறுவனங்களுக்கு உதவிகளை பெறுவதற்காக சிவில் அங்கத்தவர்கள் நிறுவனங்களின் தேவைக்கேற்ப வழங்கப்பட்டுள்ளனர்.

| இல | தொழில் | நிலையான | ஒப்பந்த அடிப்படையில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | சமையற்காரர் | 2,132 | 1,227 | 3,359 |
| 2. | உணவு பரிமாறுபவர் | 1,204 | 1,233 | 2,437 |
| 3. | தரம் III தொழிலாளர்கள் | 1,397 | 1,094 | 2,491 |
| 4. | சுகாதார தொழிலாளாகள் | 812 | 783 | 1,595 |
| 5. | ஏனையவர்கள் | 1,056 | 200 | 1,256 |
| | **மொத்தம்** | **6,601** | **4,537** | **11,138** |

புள்ளி விபரக்குறிப்பு 10.3 சிவில் ஊழியர்களின் கட்டமைப்பு.

30. **பிரச்சினைகளும் சவால்களும்.** இலங்கை தரைப்படையில் காணப்படும் பயிற்றுவிக்கும் வசதிகளுக்கு ஏற்ப தரைப்படையின் படையினரின் எண்ணிக்கையை முழுமைபடுத்த போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் அக்குறைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக அதிகாரிகளுக்கு 5 வருடமும் ஏனைய நிலையினருக்கு 10 வருடமும் எடுக்குமென கனிக்கப்பட்டுளது. ஆதலால் இலங்கை தரைப்படையானது பின்வரும் காரணிகளுடன் 5/10 வருட திட்டங்களை நடைமுறைபடுத்தி படைபிரிவினர் எனண்ணிக்கையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

அ. அதிகாரிகளுக்கான பயிற்றுவிக்கும் ஆற்றலை ஏற்படுத்தல்.

ஆ. அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு முழு வசதிகளுடன் கூடிய பயிற்சி வழங்குவத்குறிய ஆற்றலை ஏற்படுத்தல்.

இ. உட்சேர்ப்பு நடைமுறைக்காக புதிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.

ஈ. தற்போது சுயேட்சை படையில் படையினர் சதவீதம் அதிகமாக இருப்பதால், சுயேட்சை படையிலுள்ள ஏனைய நிலையினரை நிரந்தர படைக்கு மாற்றுவதற்கான புதிய செயற்முறையை உருவாக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

**ஊடகவியல் பணிப்பக குழுமம்**

31. ஊடகவியல் பணிப்பக குழுமமானது நடவடிக்கை துறை, நிர்வாக துறை, இணையத்தளம் மற்றும் இணைய துறை, தொழில்நுட்ப துறை, இலத்திரனியல் மற்றும் அச்சக பதிப்பு துறை, அறிவிப்புத் துறை ஆகியவற்றை கொண்டுள்ளது. மேலும் பாதுகாப்பு படை தலைமையகங்கள் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகியவற்றில் 3 வெவ்வேறு ஊடக துறைகள் செயற்படுகின்றன. இராணுவ நிகழ்வுகள், ஏனைய வகைப்படுத்தப்பட்ட தகவல்கள் சரியான முறையில் இலத்திரனியல் மற்றும் அச்சக பதிப்பு ஊடகங்களுடாக பிரசுரிப்பதன் மூலம் தரைப்படையின் பிம்பத்தை வலுப்படுத்துவது ஊடக பணிப்பாளர் குழுமத்தின் கடைமைகளாகும்.

32. **இவ்வருடத்தில் சாதிக்கப்பட்டவை.** 2016 ஆம் ஆண்டு இலத்திரனியல் மற்றும் அச்சக பதிப்பு ஊடகங்களுடாக 108 இராணுவ மற்றும் அதிகாரபூர்வமான நிகழ்ச்சிகள் பிரசுரிக்கப்பட்டன. இப்பணிப்பக குழுமத்தினால் தரைப்படை முக்கியமான நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒளி மற்றும் ஒலி சேவைகளாக காட்சிப்படுத்தப்படுகின்றன. தரைப்படையின் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதற்கான தற்போது பணியாற்றுகின்ற இரண்டு தமிழ் சிங்கள அறிவிப்பாளர்களால் சேவை வழங்கப்படுகிறது. ஊடகவில் சம்பந்தமான விடயங்கள் மற்றும் முன்னோக்கல்கள் ஆகியவற்றுக்கான ஊடக ஆலோசகரினால் (சிவில்) விரிவுரைகள் வழங்கப்படுகிறது. மஹரகம தேசிய இளைஞர் சபையின் உதவியுடன் கானொளி மற்றும் புகைப்பட பாடநெறி 2016.03.09 தொடக்கம் 2016.04.25 வரை நடாத்தப்பட்டதோடு இப்பாடநெறிக்கு 33 தரைப்படையினர் பங்குபற்றினர். பல்வேறு விசேட நிகழ்வுகளை உள்ளடக்கிய புகைப்பட செருகேடு தயாரிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு தொழில்நுட்ப பிரிவினால் 360 நிகழ்ச்சிகள் படதொகுப்பு செய்வதற்கு புகைபட கலைஞர்களுடைய சேவை வழங்கப்பட்டது.

**தகவல் தொழில்நுட்ப பணிப்பக குழுமம்**

33. இலங்கை தரைப்படையின் அனைத்து தகவல் தொழில்நுட்ப விடயங்களை தரைப்படை தலைமையகம், பாதுகாப்பு படை தலைமையகம் மற்றும் ஏனைய சுயாதீன படைபிரிவுகளுக்கு விருத்தி செய்தல், நடைமுறைபடுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல்/ மாற்றங்கள் மேற்கொள்ளல் என்பன தகவல் தொழில்நுட்ப பணிப்பக குழுமத்தின் பொறுப்புக்களாகும்.

34. **பிரதான செயற்பாடும் அதன் முன்னேற்றமும்.** பாதுகாப்பு அமைச்சு உட்பட 24 மென்பொருள் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன் அவற்றை ஏனைய தரைப்படை நிறுவனங்களில் பாவிப்பதற்குரிய நடைமுறை பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. 10 இணைய வலைதளங்கள் புதிதாக நிறுவப்பட்டதோடு பல விசேட நிகழ்ச்சிகளும் பிரசுரிக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு தரைப்படை தகவல் வலைபின்னல்கள் ஐபி/விபிஎன் வசதிகள் ஊடாக மேம்படுத்தப்பட்டன.

35. தரைப்படை தகவல் வலைபின்னல் சேவையை துரிதப்படுத்துவதற்கு செக்கனுக்கு 16 மெகாபிட்ஸ் தரவுகளை தரைப்படை தலைமையகத்தில் இருந்து பனாகொடைக்கு தரவுகளை பரிமாற்றம் செய்ய அலைவரிசை மேம்படுத்தப்பட்டது. தகவல் வலைபின்னல் விநியோக புள்ளிகள் மேம்படுத்தப்பட்டன. சைபர் பாதுகாப்பு மற்றும் இணைய அச்சுருத்தல்களை குறைக்க எடுக்கப்படவேண்டிய முன்னடவடிக்கை என்பன சம்பந்தமான சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்காக கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது. மேலும் கடந்த ஆண்டு கீழ்குறிப்பிட் விசேட ஆராய்ச்சி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. சிருரக ஆயுத மாதிரி தானியங்கி.

ஆ. ஜிபிஎஸ் மூலம் இயங்கும் குவாடப்டர்.

இ. வீசும் ரொபோ.

ஈ. வானொலி தொழில்படும் இடத்தை கண்டுபிடிக்கும் கருவி.

உ. சைபர் பாதுகாப்பு மாதிரி தானியங்கி.

ஊ. முக அங்கீகரிக்கபட்ட அமைப்பு.

36. **<u>எதிர்கால முன்னோக்கல்கள்.</u>** மென்பொருள்/வலைபின்னல் பொறியியல் நிபுனத்துவம் பெற்ற அதிகாரிகள் மற்றும் தகவல் தொழிலநுட்ப அதிகாரிகளை இடமாற்றம் இல்லது வேறு நிறுவனங்களுக்கு இணைத்தல் சம்பந்தமாக நிலையான மற்றும் நன்கு வரையறுக்கப்ட்ட கொள்கைகள் தயாரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்வதற்காக இலங்கை சமிஞ்சை படைபிரிவை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்காக தகவல் தொழில்நுட்ப பிரிவுகளில் பாடநெறிகளை அதிகரிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

## நிதி முகாமைத்துவ கிளை

1. இலங்கை தரைப்படையின் நிதியில் சம்பந்தமான விடயங்களை திறம்பட மற்றும் திறமையாக நிர்வாகிக்க நிதி முகாமைத்துவ கிளையானது பிரதான பதவிநிலை கிளைகளில் ஒன்றாக 2005 நவம்பர் 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை இராணுவத்தின் நிதி முகாமைத்துவத்தோடு தொடர்புடைய திட்டமிடல், நிர்வாகம், விமர்சித்தல் சம்பந்தமாக கணக்கு காட்டும் அதிகாரியான இராணுவத் தரைப்படைத் தளபதி மற்றும் பிரதான கணக்காளரான பாதுகாப்புச் செயலாளர் அவர்களுக்கு பணிப்பாளர் நாயகம் நிதி முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டும். அவ்வாறே நிதி முகாமைத்துவ கிளையின் கீழ் காணப்படும் அனைத்து பணிப்பக குழுமங்களினதும் தொடர்பாடல்கள் சம்பந்தமான பொறுப்பும் பணிப்பாளர் நாயகம் நிதி முகாமைத்துவ கிளையின் பொறுப்பாகும்.

2. கணக்கியல் அதிகாரிகளின் நிர்வாக நடவடிக்கை, ஒழுக்கம், பதவியுயர்வு, இடமாற்றம் மற்றும் தரைபடையின் எதிர்கால பதவிகளில் முகாமைத்துவம் ஆகியன பணிப்பாளர் நாயகம் நிதி முகாமைத்துவ கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன.




வரைபடம் 10.1: நிதி முகாமைத்துவ கிளையின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு.

3. **இவ்வருடத்தில் சாதிக்கப்பட்டவை.** பொது நிதி மற்றும் பொது நிதி அல்லாத நிதிகளில் 97 % தேவைகளுக்காக பிரயோகித்து அனைத்து நிதியியல் சம்பந்தமான விடயங்களை திறனாகவும் திறமையாகவும் பயன்படுத்தியதன் மூலம் இலக்குகள் அடையப்பட்டன.

### வரவு செலவு மற்றும் நிதி முகாமைத்துவ பணிப்பக குழுமம்

4. வரவு செலவு திட்டம் மற்றும் நிதி பணிப்பக குழுமமானது இலங்கை தரைப்படை நிதி முகாமைத்துவ கிளையின் கீழ் இயங்குகிறது. நிதியியல் முகாமைத்துவம் சம்பந்தமாக இலங்கை தரைப்படை தளபதியின் எண்ணங்களுக்கு அமைய திறன்பட நிதிகளை கையாளுதல், இராணுவத்தின் மூலதன முகாமைத்துவம், வரவு செலவு திட்டமிடல்களை ஒழுங்கமைப்பு செய்தல் மற்றும் உத்தேச வரவு செலவு திட்டத்தை ஒதுக்கீடு செய்தல், மூலதன முகாமைத்துவ தகவல்கள் உள்ளக மற்றும் வெளியக தேவைகளுக்கு ஏற்ப வழங்குதல் போன்ற செயற்திட்டங்கள் கடினமாகவும் பலனுடையதாகவும் மேற்கொள்ளுதல் இவ் பணிப்பக குழுமத்தின் கடமையாகும்.

5. **பிரதான செயற்பாடும் அதன் முன்னேற்றமும்.** 2016.31.12 உள்ளவாறான மூலதன சொத்துக்கள் மற்றும் மீள்வரும் செலவினங்கள் ஆகியவற்றின் நிலைமை மற்றும் செலவு தலைப்புக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. **மீள்வரும் ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள்.**

| இல | செலவு விபரங்கள் | 2016.12.31 ஆந் திகதிக்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | 2016.12.31 ஆம் திகதிக்கு தற்போதைய செலவு (ரூபா மில்லியன்) | பாவிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | தனியாள் சம்பளம் | 121,250.19 | 117,663.83 | 97% |
| 2. | பிரயான செலவுகள் | 296.50 | 258.20 | 87% |
| 3. | ஏனைய வழுங்கல் | 22,985.30 | 22,229.87 | 97% |
| 4. | பராமரிப்பு செலவுகள் | 587.00 | 585.57 | 100% |
| 5. | ஏனைய சேவைகள் | 5,915.32 | 5,783.54 | 98% |
| 6. | இடமாற்றங்கள் | 556.00 | 526.17 | 95% |
| 7. | வேறு நானாகித செலவுகள் | 74.30 | 74.24 | 100% |
| | **மொத்த தொகை** | **151,664.60** | **147,121.43** | **97%** |

அட்டவனை 10.1: மீள்வரும் ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள்.




படவுரு 10.1: மீள்வரும் ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள்.

ஆ. **மூலதன செலவினங்கள்**

| இல | செலவு விபரங்கள் | 2016.12.31 ஆந் திகதிக்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | 2016.12.31 ஆம் திகதிக்கு தற்போதைய செலவு (ரூபா மில்லியன்) | பாவிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | மூலதனச் சொத்து, புனர்வாழ்வு மற்றும் முன்னேற்றம் | 480.70 | 477.22 | 99% |
| 2. | மூலதனச் சொத்தை கைப்பற்றிக் கொள்ளல் | 2,162.10 | 2,132.16 | 99% |
| 3. | மனித நேய வள அபிவிருத்தி | 1,100.00 | 1,092.90 | 99% |
| **மொத்தம்** | | **3,742.80** | **3,702.27** | **99%** |
| **ஏனைய மூலதனச் செலவுகள்** | | | | |
| 4. | ஏனைய முதலீடுகள் | 2,305.94 | 497.90 | 22% |
| 5. | கடன் முறைத்திட்டங்கள் | 2,287.52 | 56.44 | 2% |
| **மொத்தம்** | | **4,593.46** | **554.34** | **12%** |
| **மொத்த தொகை** | | 8,336.26 | 4,256.60 | 51% |

அட்டவனை 10.2: மூலதன ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள்.




படவுரு 10.2: மூலதன ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள்.

6. **ஐக்கிய நாட்டு பணிகளில் வருமானம்.** இலங்கை இராணுவத்தினரால் 2016 ஆம் ஆண்டினுள் ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் செயற் திட்டங்களுக்காக ஈடுபடுத்தியிருக்கும் படையினர்களின் கடமைத் தேவைகளுக்காக லெபனான் மற்றும் சூடான் ஆகிய நாடுகளுக்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 69.06 மில்லியன் ரூபா (0.479 மில்லியன் அமெரிக்க டொலர்) செலவை மேற்கொண்டதோடு ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் செயற்திட்டத்தின் மூலம் 423.40 மில்லியன் ரூபா (2.92 மில்லியன் அமெரிக்க டொலர்) வருமானம் சம்பாதிக்கப்பட்டிருக்கின்றது.

7. **சிக்கல்களும் சவால்களும்.** 2016 ஆம் ஆண்டு மதீப்பீடு செய்யப்பட்ட வரவு செலவு ஒதுக்கீடு மற்றும் 2016 ஆம் ஆண்டு பெறப்பட்ட வரவு செலவு ஒதுக்கீடு விபரம் கீழ்வருமாறு.

| இல | விபரம் | மதீப்பீடு செய்யப்பட்ட தொகை - 2016 (ரூபா மில்லியன்) | வருடாந்த ஒதுக்கீடு - 2016 (ரூபா மில்லியன்) | வித்தியாசம் | |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா மில்லியன் | சதவ-ீதம் |
| 1. | மீண்டுவருபவை | 161,577.96 | 151,893.69 | 9,684.27 | 6% |
| 2. | மூலதன* | 8,910.45 | 3,150.00 | 5,760.45 | 65% |
| | மொத்தம் | **170,488.41** | **155,043.69** | **15,444.72** | |

* கடன் உதுக்கீட்டு வரி இப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

அட்டவனை 10.3: மதிப்பிடப்பட்ட வரவு செலவு ஒதுக்கீடு.

அ. 2016 ஆம் ஆண்டு பெறப்பட்ட வரவு செலவு ஒதுக்கீடு ரூபா 155,043.69 மில்லியன் ஆவதுடன் இத்தொகை திட்டமிட்ட தொகையுடன் ரூபா 15,444.72 மில்லியன் குறைவாகும்.

ஆ. கீழ் குறிப்பிட்ட ஒதுக்கீடுகளின் குறைவு பின்வரும் செலவு தலைப்புக்களில் நிறுவனத்துக்கு பெறும் பாதிப்பை ஏற்படுத்தியது.

(1) **மீன்டுவரும் செலவுத்தலைப்பு.**

(அ) பிரயான செலவுகள் (வெளிநாடு).
(ஆ) வாகனங்களுக்கான வாடகை கொடுப்பனவு.
(இ) வாகன பராமரிப்பு.

(2) **மூலதன செலவுத்தலைப்பு.**

(அ) கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களை கையகப்படுத்துதல்.
(ஆ) இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகள் கையகப்படுத்தல்.
(இ) திறன் மேம்படுத்தல்கள் (பதவிநிலை பயிற்சிகள்).

இ. கையிருப்பு போதாமையால் 2016.12.31 திகதி வரையில் நிலுவையிலுள்ள கொடுப்பனவுகள் 3.699.42 மில்லியன் ரூபா ஆகும்.

**<u>உள்ளக கணக்காய்வு பணிப்பக குழுமம்</u>**

8. மூலதனச் செயற்பாடுகள் தொடர்பாக நடத்தும் உள்ளக நிர்வாக அமைப்பின் வேலைத்திட்டங்களை பரிசீலனை, மதீப்பீடு மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடும் மூலதன ஒழுங்கு விதிகளுக்கு அமைய கீழ் காணப்படும் காரணங்களில் அவதானத்தை எற்படுத்தி நடைமுறையில் இருக்கும் உள்ளக நிர்வாக அமைப்பை முன்னேற்றுதல்.

அ. தொடந்தும் விமர்சன நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நடை முறையில் இருக்கும் உள்ளக நிர்வாக அமைப்பை வலுப்படுத்திக் கொள்ளுதல்.
ஆ. சொத்து நஷ்டஈடு, இழப்புக்கள் மற்றும் காலாவதியானவற்றிலிருந்து பாதுகாத்தல்.
இ. பலவீனமான அமைப்புக்களை அடையாளம் கண்டு அதனை மேம்படுத்துதல்.
ஈ. குற்றம் மற்றும் மோசடிகளை தடுத்தல் மற்றும் வெளிப்படுத்திக் கொள்வதற்காக தேவையான உள்ளக நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

9. **<u>பிரதான செயற்பாடும் அதன் முன்னேற்றமும்</u>.** முக்கிய நடவடிக்கைகளும் அதன் பெறுபேறுகளும் கீழ்வருமாறு:

அ. பணிப்பாளர் நாயக திணைக்களத்தினால் எழுப்பப்பட்ட தணிக்கை ஆய்வுகளுக்கான விளக்கங்களும் விடைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

ஆ. 2006/29 தரைப்படை ஆணைக்கு அமைய பிரதான பதவி நிலை அதிகாரியின் தலைமையின் கீழ் 2016.08.03 மற்றும் 2016.12.28 ஆகிய திகதிகளில் திணைக்கள கணக்கியல் மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடைபெற்றது.

இ. பாதுகாப்பு செயலாளரின் தலைமையின் கீழ் பாதுகாப்பு அமைச்சில் 2016.05.05 மற்றும் 2016.10.26 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கணக்கியல் மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்திற்கு இலங்கை தரைப்படை சார்பாக பங்குபற்றப்பட்டது.

ஈ. தரைப்படை தளபதியுடன் பாராளுமன்ற குழு கூட்ட அறை இல 06 இல் 2016.06.24 திகதி நடைபெற்ற அரசாங்க கணக்கியல் கூட்டத்திற்கு பங்குபற்றப்பட்டது.

10. **<u>செயற்திறன் அபிவிருத்தி நடவடிக்கை</u>.** தணிக்கை அவதானிப்புக்களை குறைக்க படைசேனை தலைமையகம், படைபிரிவு தலைமையகம் மற்றும் படையணி தலைமையகம் ஆகியவற்றில அரசாங்கம் மற்றும் அரசு சாராத நிதி சம்பந்தமாக "**விழிப்புணர்வு மூலம் தடுப்பு**" என்னும் தொனிப்பொருளில் ஒரு விழிப்பனர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டோது 160 அதிகாரிகளும் 1,112 ஏனைய நிலையினரும் இந் நிகழ்ச்சிகளுக்கு பங்குபற்றினார்கள்.

11. **<u>சிக்கல்கள் மற்றும் சவால்கள்</u>.** இவ்வருடத்தில் இப்பணிப்பக குழுமத்தினால் பின்வரும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு முகம் கொடுக்கப்பட்டன.

அ. சிறப்பு தணிக்கை செயற்பாடுகளுக்கு பாரிய அளவில் தணிக்கை அதிகாரிகளை நியமிக்கும் போது திட்டமிடப்பட்ட தனிக்கை அறிக்கைகளில் காலதாமதம் ஏற்படுகிறது.

ஆ. அதிகபடியான தணிக்கை செயற்பாடுகளில் மோசடிகள் சம்பந்தமாக அதிக படியான அவதானிப்புக்கள் காணப்படுகின்றமையால் குறிப்பிட்ட நேரத்துக்கு அறிக்கைகளை வெளியிடுவதற்குரிய சாத்தியகூறுகள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆதலால் திட்டமிட்டபடி தணிக்கை அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு கடினமாக உள்ளது.

<u>**சம்பளம் மற்றும் ஆவணங்கள் பணிப்பக குழுமம்**</u>

12. தரைப்படையில் தற்போது சேவையாற்றுகின்ற அதிகாரிகள், ஏனைய நிலையினர் மற்றும் யுத்தத்தின் போது இறந்தவர்கள், அங்கவீனமானவர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல் சம்பளம் மற்றும் ஆவணங்கள் பணிப்பக குழுமத்தின் பொறுப்புக்களாகும். மேலும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், இழப்பீடு, நன்கொடை சம்பந்தமாக கொள்கைகளை திட்டமிடல், சுயவிபரக் கோவைகளைப் பராமரித்தல், வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் புள்ளி விபரங்களை அமைத்தல் மற்றும் இராணுவ அமைப்பு தகவல்களை மேற்கொள்ளுதல் சம்பளம் மற்றும் ஆவணங்கள் நிருவாக சபையின் நோக்கமாகும்.

13. <u>**பிரதான செயற்பாடும் அதன் முன்னேற்றமும்.**</u> 2016 ஜனவரி 01 தொடக்கம் 2016. டிசம்பர் 31 வரை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், 2016 ஜனவரி 01 தொடக்கம் 2016. டிசம்பர் 31 வரை யுத்தத்தின் போது இறந்தவர்கள், அங்கவீனமானவர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் விபரம் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் சம்பளங்கள்.

| இல | விபரம் | நிரந்தர (ரூபா மில்லியன்) | சுயேட்சை (ரூபா மில்லியன்) | மொத்தம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1. | அதிகாரிகள் | 6,330.33 | 2,116.22 | 8,446.55 |
| 2. | ஏனைய நிலையினர் | 66,818.36 | 37,885.51 | 104,703.87 |

அட்டவனை 10.4: அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் சம்பளங்கள்.

ஆ. 2016 ஜனவரி 01 தொடக்கம் 2016 டிசம்பர் 31 வரை யுத்தத்தின் போது இறந்தவர்கள், அங்கவீனமானவர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| இல | விபரம் | நிரந்தர (ரூபா மில்லியன்) | சுயேட்சை (ரூபா மில்லியன்) | மொத்தம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1. | அதிகாரிகள் | 1,237.86 | 132.68 | 1,370.55 |
| 2. | ஏனைய நிலையினர் | 18,808.43 | 3,636.69 | 22,445.12 |

அட்டவனை 10.5: யுத்தத்தின் போது இறந்தவர்கள், அங்கவீனமானவர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களின் சம்பளங்கள்.

இ. 2016 ஜனவரி 01 தொடக்கம் 2016 டிசம்பர் 31 வரை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு வெளிநாட்டு பாடநெறி, விஜயங்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள்.

| இல | விபரம் | பங்குபற்றியவர்கள் எண்ணிக்கை | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | விஜயங்கள் | 557 | 177.3 |
| 2. | பாடநெறிகள் | 1279 | 1004.3 |
| | **மொத்தம்** | **1836** | **1181.6** |

அட்டவனை 10.6: வெளிநாட்டு பாடநெறி, விஜயங்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள்.

ஊ. 2016 ஜனவரி 01 தொடக்கம் 2016 டிசம்பர் 31 வரை பணிக்கொடைகள் மற்றும் அங்கவீனர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| இல | விபரம் | விண்ணப்பங்கள் எண்ணிக்கை | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | குறைக்கப்பட்ட நன்கொடை | 4,829 | ஓய்வூதிய திணைக்களத்தால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது |
| 2. | சேவை நன்கொடை | 371 | 166.81 |
| 3. | அங்கவீனர்களுக்கான ஓய்வூதியம் | 2,725 | ஓய்வூதிய திணைக்களத்தால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது |
| | **மொத்தம்** | **7,925** | **166.81** |

அட்டவனை 10.7: பணிக்கொடைகள் மற்றும் அங்கவீனர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள்.

உ. வாகன மற்றும் சொத்து கடன்களுக்காக (10 மாத தொகுப்பூதியம் அல்லது அதிகபடியாக ரூபா 250,000.00) அரச வங்கிகளில் பெறப்பட்ட இடர் கடன்கள் மற்றும் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் விபரம் கீழ்வருமாறு.

(1) **<u>முற்பண பீ கணக்கு நிதி</u>.**

| விபரம் | விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | வழங்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | 31.12.2016 வரை செயல் முறையில் உள்ள விண்ணப்பங்கள் |
|---|---|---|---|---|
| இடர் கடன்கள் | 3,933 | 3,040 | 531.00 | 369 |
| மூலதன கடன்கள் | 536 | - | - | - |
| வாகன கடன்கள் | - | - | - | - |
| **மொத்தம்** | **4,469** | **3,040** | **531.00** | **369** |

அட்டவனை 10.8: முற்பண பீ கணக்கு நிதி.

(2) **<u>தரைப்படை நலன்புரி நிதி</u>.**

| இல | விபரம் | வின்னப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | வழங்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1. | இடர் கடன்கள் | - | - | - |
| 2. | மூலதன கடன்கள் | 07 | 03 | 8.00 |
| 3. | வாகன கடன்கள் | - | - | - |
| | **மொத்தம்** | **07** | **03** | **8.00** |

அட்டவனை 10.9: தரைப்படை நலன்புரி நிதி.

ஊ. தரைப்படை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் வாழ்க்கை தரங்களை உயர்த்துவதற்காக நலன்புரி கடன் திட்டம் சுவசஹன கடன் என்னும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டதோடு வருடாந்த வட்டி 9 % ஆகும். இது 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் நலநிதிக்காக வரவு வைக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து கொடுக்கப்பட்டது.

| இல | விபரம் | செயல்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் | செலுத்தப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | தனிப்பட்ட கடன்கள் | 898 | 826.65 |
| 2. | நிவாரன கடன் திட்டங்கள் | 178 | 168.35 |
| | **மொத்தம்** | **1076** | **995.00** |

அட்டவனை 10.10: சுவசஹன நலன்புரி கடன் திட்ட விபரங்கள்.

எ. படைவீரர்களின் பெற்றோர்களுக்காக மாதாந்தம் ரூபா 750.00 வீதம் விசேட கொடுப்பனவு 2012 ஒக்டோபர் மாதம் முதல் அரசாங்கத்தால் கொடுப்பனவு செய்யப்படுகிறது. 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்காக செலுத்தப்பட்ட தொகை கீழ்வருமாறு.

| விபரம் | பெற்றோர்கள் எண் | மொத்த தொகை (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| பெற்றோர்கள் | 154,478 | 115,85.00 |

அட்டவனை 10.11: படைவீரர்களின் பெற்றோர்களுக்காக விசேட கொடுப்பனவு.

ஏ. 2016 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அநாதைகள், விதவைகளுக்கு ஓய்வூதியங்கள், விசேட இழப்பீடு, அநாதைகள், விதவைகளுக்கு மீண்டும் கொடுக்கப்பட வேண்டிய ஓய்வூதியங்கள், சார்ந்தவர்களுக்கான விருதுகள், மரணித்தவர்களுக்கான நன்கொடை ஆகியவற்றின் விபரம் கீழ்வருமாறு.

| இல | விபரம் | விண்ணப்பங்கள் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | அநாதைகள், விதவைகளுக்கு ஓய்வூதியங்கள் | 412 | பிரதேச செயலாளரால் செலுத்தப்பட்டது |
| 2. | விசேட இழப்பீடு | 66 | 102.60 |
| 3. | விசேட இழப்பீடு - P.A.C 21/88 | 4 | 0.33 |
| 4. | விசேட இழப்பீடு - P.A.C 22/93 | 227 | 51.96 |
| 5. | விசேட இழப்பீடு - A.R.O 12/86 | 2,677 | 116.17 |
| 6. | மீண்டும் திருமணமான விதவைகளுக்கான இழப்பீடு | 57 | 199.37 |
| 7. | அநாதைகள், விதவைகளுக்கு மீண்டும் கொடுக்கப்பட வேண்டிய ஓய்வூதியங்கள் | 209 | பிரதேச செயலாளரால் செலுத்தப்பட்டது |
| 8. | சார்ந்தவர்களுக்கான விருதுகள் | 170 | பிரதேச செயலாளரால் செலுத்தப்பட்டது |
| 9. | மரணித்தவர்களுக்கான நன்கொடை | 155 | 83.42 |
| | **மொத்தம்** | **3,977** | **553.85** |

அட்டவனை 10.12: அநாதைகள், விதவைகளுக்கு ஓய்வூதியங்கள்.

14. **திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள்.** கடந்த ஆண்டு பின்வரும் திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. சம்பளம் மற்றும் ஆவணங்கள் சம்பந்தமாக பிரச்சனைகள் தீர்ப்பதற்காக சம்பளம் மற்றும் ஆவணங்கள் பணிப்பக குழுமங்களுக்கு வருகை தருபவர்களுக்காக விசேட உதவும் மேசை ஒன்று அமைக்கப்பட்டது. (யுத்தத்தின் போது இறந்தவர்களின் உறவினர்கள், மருத்துவ காரணங்களுக்காக ஓய்வுபெற்றவர்கள், சேவையிலுள்ள அதிகாரிகள்/ ஏனைய நிலையினர், இழப்பீடு மற்றும் ஏனைய பிரச்சினைகள் என்பவற்றை தீர்ப்பதற்காக).

ஆ. அங்கவீனமுற்று ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் வாழ்க்கை தரங்களை உயர்த்துவதற்காக நலன்புரி கடன் திட்டம் சுவசஹன கடன் என்னும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டதோடு வருடாந்த வட்டி 9 % ஆகும். இது 2016 ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டதோடு தரைப்படை நலநிதிக்காக வரவு வைக்கப்பட்டுள் நிதியில் இருந்து கொடுக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல | விபரம் | செயல்முறை படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் | செலுத்தப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | அங்கவீனத்துடன் ஓய்வுபெற்ற அதிகாரி மற்றும் ஏனைய நிலையினர் | 967 | 642.90 |
| 2. | யுத்தத்தில் இறந்தவர்களுடைய உறவினர்கள் | 591 | 322.40 |
| | **மொத்தம்** | **1558** | **965.30** |

அட்டவனை 10.13: அங்கவீனத்துடன் ஓய்வுபெற்ற அதிகாரி மற்றும் ஏனைய நிலையினர்.

23. **<u>எதிர்கால முன்னோக்கல்கள்.</u>** 2017 ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினங்களுக்கான ஆரம்ப ஒதுக்கீடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல | விபரம் | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| 1. | சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | 113,635.31 |
| 2. | வெளிநாட்டு பாட நெறி | 1,046.37 |
| 3. | சுற்றுலா கொடுப்பனவுகள் | 150.00 |
| 4. | சொத்துக் கடன் வட்டி | 224.00 |
| 5. | நட்ட ஈடு | 120.00 |
| 6. | பிரயான செலவுகள் | 1.50 |
| 7. | அங்கவீனத்துடன் ஓய்வுபெற்றவர்கள் மற்றும் யுத்தத்தில் இறந்தவர்களுடைய உறவினர்கள் | 26,022.00 |
| 8. | ரணவிரு பெற்றோர்கள் கொடுப்பணவுகள் | 1,400.00 |
| 9. | வேறு கொடுப்பணவுகள் | 185.24 |
| | **மொத்த ஒதுக்கீடுகள்** | **142,784.44** |

அட்டவனை 10.14: எதிர் பார்க்கப்படும் மீண்டுவரும் செலவினங்களுக்கான ஆரம்ப ஒதுக்கீடுகள்.

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

**<u>சொத்து முகாமைத்துவ பணிப்பக குழுமம்</u>**

16. தரைப்படை ஆணை 21/2006 இற்கு இனங்க சொத்து முகாமைத்துவ பணிப்பக குழுமம் 2005 நவம்பர் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது தரைப்படை தலைமையகம், நிதி முகாமைத்துவ கிளையின் கீழ் இயங்குகிறது. நிதி ஒழுங்கு விதிகளின் படி செயற்படுவதன் மூலம் இராணுவ வருமான அபிவிருத்தி கட்டுப்பாட்டில் திறமையாகவும், பலனுடையதாகவும் முகாமைத்துவப்படுத்துவது இன் நிருவாக சபையின் பொறுப்பாகும்.

17. **<u>பிரதான செயற்பாடுகளும் அதன் முன்னேற்றமும்.</u>** சொத்து முகாமைத்துவ பணிப்பக குழுமத்தினால் பின்வரும் நான்கு பகுதிகளின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ. வருடாந்த கணக்கெடுப்பு குழுக்களின் சாராம்சம்.

| இல | குழுவின் வகை | ஒன்று கூட வேண்டிய குழுக்களின் எண்ணிக்கை | ஒன்று கூடப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை | முடிக்கப்பட் குழு அறிக்கைகள் | முடிக்கப்பட வேண்டிய குழு அறிக்கைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | வருடாந்த சரிபார்த்தல்கள் குழு 2016 வருடத்துக்கு உரியவை | 627 | 627 | 502 | 125 |
| 2. | வருடாந்த அழித்தல்கள் அணுமதியளித்தல் குழு (2015 வருடத்துக்கு உரியவை) | 627 | 627 | 627 | - |
| 3. | வருடாந்த அழித்தல்கள் குழு (2015 வருடத்துக்கு உரியவை) | 627 | 627 | 627 | - |

அட்டவனை 10.15: வருடாந்த கணக்கெடுப்பு குழுக்களின் சாராம்சம்.

ஆ. **<u>வருட இறுதியில் நிலையான சொத்துக்களின் சரிபார்ப்பு.</u>** அரசாங்க நிதி கட்டுப்பாடு 507(2) இற்கு இனங்க ஒவ்வொரு வருட இறுதியிலும் நிலையான சொத்துக்களின் உண்மை தன்மையை அறிய ஒவ்வொரு நிதியாண்டும் சரிபார்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஆதலால் நிலையான சொத்துக்களை சரிபார்ப்பதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டுக்காக அவ்வாறான 499 குழுக்கள் 2016 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டதோடு, 2016 ஆம் ஆண்டுக்கான 500 குழுக்களை நியமித்தல் பணி 2017 ஆம் ஆண்டு அனுமதிக்கப்படும்.

இ. இவ்வருடத்துக்குரிய இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பற்றிய விபரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) 01.01.201 இல் செயல்முறையில் உள்ள வழக்குகள் - 318.
(2) 01.01.2016 - 31.12.2016 காலப்பகுதியில் பெறப்பட்ட வழக்குகள் - 175.
(3) 01.01.2016 - 31.12.2016 காலப்பகுதியில் முடிவுபெற்ற வழக்குகள் - (200).
(4) 01.01.2016 - 31.12.2016 காலப்பகுதியில் ரத்து செய்யப்பட்ட வழக்குகள் - (09).
(5) 31.12.2016 இல் நடைமுறையில் உள்ள வழக்குகள் - 284.

தீவிரவாத நடவடிக்கை காரணமாக தரைப்படை சொத்துக்களுக்கு கணிசமான அளவு இழப்புக்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்டன. நிதி கட்டுப்பாடு 109 இற்கு அமைய மீட்டெடுப்பு/ தொகையில் இருந்து குறைத்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் 200 வழக்குகளுக்குரிய மொத்த தொகை ரூபா 176,182,736.70 பெறுமதி புத்தகத்தில் இருந்து கழிக்கப்பட்டது.

ஈ. **<u>கேள்விக்கோரல்கள் பிரிவின் சராம்சம்.</u>** தரைப்படை போர் தளபாட பிரிவின் அனைத்து பயன்படாத வாகனங்கள்/பொது பொருட்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பொது ஏல அகற்றலுக்காக கொடுக்கப்ட்டது. பொது ஏலத்தில் இருந்து பெறப்ட்ட வருமானம் பின்வருமாறு:

(1) **<u>ஏலம் மூலம் 2016 -1 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வருமானம்</u>.**

| இல | விபரம் | மொத்தம் | வருமானம் (ரூபா) |
|---|---|---|---|
| 1. | வாகனம் | 243 | 64,336,877.00 |
| 2. | பொது பொருட்கள் | 68 | 12,443,558.00 |
| | **மொத்தம்** | **311** | **76,780,435.00** |

அட்டவனை 10.16: உருவாக்கப்பட்ட வருமானம்.

(2) **<u>ஏலம் மூலம் 2016 -11 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட வருமானம்</u>.**

| இல | விபரம் | மொத்தம் | வருமானம் (ரூபா) |
|---|---|---|---|
| 1. | வாகனம் | 205 | 37,339,201.00 |
| 2. | பொது பொருட்கள் | 103 | 32,486,074.70 |
| | **மொத்தம்** | **308** | **69,825,275.70** |

(மொத்த வருமானம் விலைமனுக்கோரல் குழு அறிக்கையின் பின்னர் உறுதிப்படுத்தப்படும்)

அட்டவனை 10.17: எதிர்பார்க்கப்பட்ட வருமானம்.

18. **<u>திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள்</u>.** தரைப்படையிலுள்ள நிலையான சொத்துக்களை திறமையாகவும், பலனுடையதாகவும் முகாமைத்துவம் செய்வதற்கான தன்னிச்சையாக இயங்கும் சொத்து மேலாண்மை மென்பொருள் அமைப்பு அறிமுகப்படுத்தப்ட்டது.

**<u>தரைப்படை நலநிதி பணிப்பக குழுமம்</u>**

19. 1981 ஆம் ஆண்டு தரைப்படை வீரர்களின் சேமிப்பை அதிகரிப்பதற்காக தரைப்படை நலன்புரி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு அது தரைப்படை பெனவலன்ட் நிதியாக 1996 ஜனவரி 01 ஆம் திகதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும் இதன் பணிகள் அதிகரிக்கப்பட்டதால் 2009 ஆகஸ்ட் 30 ஆம் திகதி பணிப்பகமாக மாற்றப்பட்டது.

20. **<u>பிரதான செயற்பாடுகளும் முன்னேற்றமும்</u>.** தரைப்படை வீரர்களின் சேமிப்பு திறனை அதிகரிப்பதே இந்த பணிப்பக குழுமத்தின் பிரதான நோக்கமாகும். ஆதலால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. **<u>பிரதான நடவடிக்கைகள்</u>.**

(1) உறுப்புரிமை வழங்குதல்.
(2) பங்களிப்புகளை சேகரித்தல்.
(3) நிலையான பத்திரங்கள் மீதான முதலீடு.
(4) காலாண்டு வட்டியை அறிவித்தல்.
(5) உறுப்பினர்களின் கடன்களை அனுமதித்தல் (85% பங்களிப்பு).
(6) உறுப்பினர்களின் 80% மீள்பெறுகையை அனுமதித்தல்.
(7) உறுப்பினர்களுக்கு திருப்பி கொடுக்கப்பட வேண்டியவை.
(8) பயனாளிகளுக்கு திருப்பி கொடுக்கப்பட வேண்டியவை.
(9) சவசஹன நிதி, சொத்துக் கடன் மற்றும் துயரக் கடன் திட்டங்கள்.

ஆ. மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுக்கு மேலாக, யுத்தத்தின் போது இறந்த மற்றும் காயமுற்ற படைவீரர்களுக்கான சுவசஹன கடன் திட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது.

இ. **<u>நிதி மற்றும் உறுப்புரிமை கட்டணங்கள்</u>.** 2016 ஆம் ஆண்டு உறுப்பினர்கள் எண்ணிக்கை 8819 ஆக அதிகரிக்கப்பட்டதோடு 2016 டிசம்பர் 31 ஆம் திகதி மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 168,581 (செயல்படுத்தும் உறுப்பினர்கள்) ஆகும். இவ்வாண்டு நிதியானது ரூபா 3,070 மில்லியன் ஆக அதிகரிக்கப்பட்டதோடு 2016 செப்டெம்பர் 30 வரை மொத்த சொத்து ரூபா 58,250.00 மில்லியன் ஆகும். இன்னும் நிதியியல் அறிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான புள்ளிவிபரங்களை வழங்க முடியாமல் உள்ளது.

ஈ. **<u>முதலீட்டுக் கடன்கள்.</u>** 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான சுவசஹன, துயரம், சொத்து மற்றும் ரனவிருசஹன முதலீடுகள் மற்றும் 85 % கடன் திட்டங்கள் ஆகியவற்றின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| இல | கடன் திட்டங்கள் | அங்கத்தவர்கள் | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | சுவசஹன | 25,795 | 19,017.00 |
| 2. | நீண்ட கால | 13,870 | 2,250.00 |
| 3. | சொத்துக்கள் | 16 | 32.00 |
| 4. | ரனவிரு சஹன | 1,591 | 965.00 |
| 5. | 85% கடன் | 6,813 | 1,667.00 |
| | **மொத்தம்** | **48,085** | **23,931.00** |

அட்டவனை 10.18: முதலீடுகள் - கடன்கள்.

உ. 2016 டிசம்பர் 31 வரை முதலீடுகளின் சாராம்சம் (ரூபா மில்லியன்).

| வங்கிகளின் வகை | இலங்கை வங்கி | தேசிய சேமிப்பு வங்கி | மக்கள் வங்கி | அஅமமுவ | உலோக நொறுக்கி | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்கொள்வனவு ஒப்பந்தம் | 1,950.92 | 21,173.83 | - | - | - | 23,124.75 | 60.38% |
| நிலையான வைப்பு | 4,344.71 | 8,751.38 | 853.00 | 1,066.69 | - | 15,015.78 | 39.20% |
| தொலைபேசி பற்றுசீட்டு | - | - | 143.99 | | - | 143.99 | 0.38% |
| உலோக நொறுக்கி | - | - | - | - | 15.00 | 15.00 | 0.04% |
| **மொத்தம்** | **6,295.63** | **29,925.21** | **996.99** | **1,066.69** | **15.00** | **38,299.52** | **100%** |
| சதவீதம் | 16.44% | 78.13% | 2.60% | 2.79% | 0.04% | - | 100% |

அட்டவனை 10.19: முதலீடுகளின் சாராம்சம்.

ஊ. 2016 ஜனவரி 01 தொடக்கம் 2016 ஜனவரி 31 வரை கொடுப்பனவுகள் விபரம்.

| இல | விபரம் | பெறுபவர்கள் எண்ணிக்கை | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1. | 80% மீள்பெறுகை | 4,127 | 2,233.00 |
| 2. | கடைசி செலுத்துகை | 18,453 | 4,784.00 |
| 3. | 85 % கடன் | 6,813 | 1,667.00 |
| 4. | வட்டிப் பணம் | 5,372 | 72.00 |
| 5. | பீ முற்பண கணக்கு | 6,980 | 34.00 |

அட்டவனை 10.20: செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் விபரம்.







படவுரு 10.3: வருடத்துக்கான செலுத்தல்கள்.

எ. 2016.12.31 இல் இலங்கை தரைப்படை விபத்து நன்மை நலன்புரி திட்ட முதலீடுகள் மிகுதிகள் விபரங்கள் கீழ்வறுமாறு.

| இல | நிறுவனம் | வகை | தொகை (ரூபா) | முகப் பெறுமதி (ரூபா) | மொத்த வட்டி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | தேசிய சேமிப்பு வங்கி | நிலையான வைப்பு | 5,765,526.84 | 6,354,874.25 | 589,347.41 |
| 2. | தேசிய சேமிப்பு வங்கி | | 1,396,514.71 | 1,538,568.95 | 142,054.24 |
| 3. | தேசிய சேமிப்பு வங்கி | | 3,597,375.00 | 3,965,095.72 | 367,720.72 |
| 4. | மக்கள் வங்கி | | 20,000,000.00 | 21,032,164.38 | 1,032,164.38 |
| | **முழு மொத்தம்** | | **30,759,416.55** | **32,890,703.31** | **2,131,286.75** |

அட்டவனை 10.21: நலன்புரி திட்ட முதலீடுகள் விபரம்.

**<u>விவசாயம் மற்றும் கால் நடை பணிப்பக குழுமம்</u>**

21. இலங்கை தரைப்படையின் பண்ணைகளுக்கு சிறந்த தொழில்நுட்ப மற்றும் ஒருங்கினைப்பு ஆதரவுகளை வழங்குவதற்காக விவசாயம் மற்றும் கால் நடை பணிப்பக குழுமம் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த மூன்று வருட காலமாக மத்திய ஒருங்கினைப்பு மையமாக இப்பணிப்பகம் செயற்படுவதால் தரைப்படையின் பண்ணைகளில் அதிக இலாபமும் துரித வளர்ச்சியையும் காணக்கூடியதாக அமைந்தது. இவ் வேலைத்திட்ட முகாமைத்துவத்துக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் போன்ற காரணங்களை முதன்மைபடுத்தி இவ் நிருவாக சபை நிறுவப்பட்டதோடு தற்போது இராணுவத்தின் கீழ் விவசாயப் பண்ணைகள் 06 நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இப் பண்ணைகள் மூலம் பால் மற்றும் மரக்கறி வகைகள், பழ வகைகள் உற்பத்தி செய்தல் போன்ற அலுவல்கள் நிறைவேற்றப்படுகின்றன. மேலும் விவசாயம் மற்றும் கால் நடை பணிப்பக குழுமத்தினால் 07 பண்ணைகள் இலங்கை தரைப்படை பொது சேவைகள் படைபிரிவினாலும் இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்களில் தரைப்படையின் பல்வேறு நிறுவனங்களாலும் பராமரிக்கப்படுகின்றன.

22. **<u>பிரதான செயற்பாடுகளும் முன்னேற்றமும்.</u>** பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

அ. நீடித்த விவசாயத்துக்காக 100 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிர் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.





ஆ. விவசாய திணைக்களத்துடன் இனைந்து குறுகியகால மற்றும் நீண்ட கால பயிர்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.





இ. விவசாய திணைக்களத்துடன் இனைந்து சோளம் மற்றும் ஏனைய பயிர்களின் விதை தயாரிப்பு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஈ. நீர் மின் நிலையங்களுக்கு அருகாமையில் மரம் நடல் நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

உ. பாசி உற்பத்தி.





ஊ. பிரவுன்ஸ் உலக பண்ணைகள் மற்றும் அத்தாமா தர வேளான்மை பிரைவட் லிமிட்டட் ஆகிய நிறுவனங்களுடாக விவசாய கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளல்.

எ. அக்ரோ சுற்றுச்சூழல் சுற்றுலாவை தொடர்தல்.

ஏ. பால் குளிரூட்டுமை மையத்தை தொடர்தல்.

ஒ. விலைமனு கோரல்களில் விலைகளை குறைப்பதற்காக காய்கறிகள், பழங்கள், முட்டைகள், கோழி இறைச்சி என்பவற்றை தரைப்படைக்கு குறைந்த விலைகளுக்கு கொடுத்தல்.

ஓ. நீடித்த விவசாயத்துக்காக வெவ்வேறு வகையான பராம்பரிய நெல் பயிர் செய்கை 100 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டது.

ஐ. இலங்கையில் வனப்பகுதியை அதிகரிப்பதற்காக பானதுறை மரவளர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தரைப்படை பண்ணைகளான கந்தல்காடு மற்றும் ஏனைய பண்ணைகளில் முறையே 100 ஏக்கர் மற்றும் 2197 ஏக்கர் பிரதேசங்களில் பயிரிடப்பட்டது.

ஔ. பாதுகாப்பு அமைச்சின் வழிக்காட்டலுக்கு இணங்க விவசாய திணைக்களத்தின் உதவியுடன் ஹைபிரிட் சோள விதை மற்றும் ஏனைய பயிர்கள் உற்பத்தி தொடரப்பட்டது.

க. ஸ்பைருலீனா பாசியினை பயன்படுத்தி உருவாக்கப்படும் பொருட்களின் விலைகள் மதிப்பு கூட்டப்பட்டது.

ச. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழ்கின்ற விவசாயத்துடன் விருப்பமுடைய சிவிலியன்களுக்கு வறுமை ஒழிப்பு 2017 ஆம் ஆண்டு என்னும் தலைப்பில் 3 மாத விவசாய பாடநெறி நடாத்தப்பட்டது.

ட. ஜனாதிபதியின் இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு பாதுகாப்பு படை தலைமையங்கள், படைபிரிவு தலைமையங்கள் மற்றும் பயிற்சி பாடசாலைகள் என்பவற்றில் 41,000 மரங்கள் நடப்பட்டன.

த. கொத்மலை நீர் மின் நிலையம் பிரதேசத்தில் மரநடுகை இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ப. இலங்கையின் சேதன பசளை தயாரிக்க, உயிர் நிலக்கரி மற்றும் டெட்ரோ வலுசக்தி என்பவற்றை உற்பத்தி செய்ய நச்சு அல்லாத கிலிசீரியா செடி பில்லியன் நடும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 385,000 கில்ரீசியா செடிகள் தரைப்படை பண்ணைகள் மற்றும் ஏனைய முகாம்களில் நடப்பட்டன.

ர. யாழ்ப்பாணத்தில் வனபகுதியை விரிவு படுத்த 10,000 மரங்கள் நடப்பட்டன.

ஞ. சாலாவை முகாம் பிரதேசத்தில் 240 ஏக்கர் இடத்தில் நெல் பயிர் செய்கைக்கு தேவையான இடத்தில் ஆரம்ப வேலைகளை மேற்கொள்ளப்பட்டன.





23. **<u>திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள்.</u>** இவ்வாண்டில் பின்வரும் திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. கலாஓயா தரைப்படை பொது சேவைகள் படைபிரிவு பாடசாலையில் பராம்பரிய விவசாயம் மற்றும் ஆன்மீக உயிரோட்டம் விவசாய சான்றிதல் பாடநெறியில் நடைமுறை மற்றும் தத்துவ கல்வி அமர்வுகள் நடாத்தப்பட்டன.

ஆ. கந்தல்காடு தரைப்படை பண்ணையில் மரபணு மூலம் 100 கால்நடைகள், நாளாந்த அபிவிருத்தித் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன.

**<u>நிதியியல் பணிப்பக குழுமம்</u>**

24. பொது மக்களின் நிதியத்தின் பிரதான செயற்பாடு திறைசேரிக்கு வழங்கப்படும் தொகையை முகாமை செய்தல் மற்றும் அரச நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய இலங்கை இராணுவத்துக்கு சொந்தமான பொது மக்கள் நிதி நிருவாக சபையின் பிரதான பணியாவதுடன் திறைசேரி மூலம் அதற்கு தேவையான வழிகாட்டல் மற்றும் சுற்றறிக்கை வெளியிடுவது போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

25. **<u>பிரதான செயற்பாடுகளும் முன்னேற்றமும்</u>.** பிரதான செயற்பாடுகளும் அவற்றின் முன்னேற்றங்களும் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

அ. வருடாந்த கணக்கியல் அறிக்கை தயார் செய்து (முற்பண பீ கணக்கு மற்றும் நிதியமைப்பு கணக்கு) மற்றும் கணக்காளர் நாயகம் மற்றும் உரிய அரசாங்க நிறுவனங்களுக்கு சமர்பிக்கப்பட்டது.

ஆ. 2016 ஆம் ஆண்டு மூலதனச் செலவு மற்றும் மீண்டுவரும் செலவுகளுக்காக தேசிய வரவு செலவு திட்டத்தில் இருந்து 160,000.86 மில்லியன் ரூபா திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டது.2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கப்ட்ட நிதி மற்றும் உண்மை செலவுகள் என்பன கிழே காட்டப்பட்டுள்ளன.

| செலவுத் தலைப்பு | விபரம் | 2016 ஆண்டு ஒதுக்கீது (ரூபா மில்லியன்) | 31.12.2016 வரை உண்மை செலவுகள் (ரூபா மில்லியன்) | 31.12.2016 இல் மிகுதித் தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினங்கள்** | | | | |
| 1001-1003 | தனிப்பட்ட வேதனாதிகள் | 121,250.19 | 117,651.84 | 3,598.34 |
| 1101-1508 | வேறு மீண்டுவருபவை | 30,414.42 | 26,279.02 | 4,135.40 |
| | **மொத்தம்** | **151,664.60** | **143,930.86** | **7,733.74** |
| **மூலதன செலவினங்கள்** | | | | |
| 2001-2003 | மூலதன சொத்துக்கள் மேம்படுத்தல், புணருத்தாபனம் | 480.70 | 340.53 | 140.17 |
| 2101-2105 | மூலதன சொத்து கொள்வனவு | 2,162.10 | 1,842.00 | 320.10 |
| 2401 | பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி | 1,100.00 | 1,102.93 | (2.93) |
| 2502 17 | வேறு முதலீடுகள் | 2,305.94 | 280.01 | 2,025.93 |
| 2502 17 | வேறு முதலீடுகள் (கடன் வழியில்) | 2,287.52 | 56.44 | 2,231.08 |
| | **மொத்தம்** | 8,336.26 | 3,621.90 | 4,714.35 |
| | **முழு மொத்தம்** | **160,000.86** | **147,552.76** | **12,448.09** |

| முற்பண கணக்கு | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|
| அதி கூடிய பெறுமதி | 2,750.00 |
| 31.12.2016 வரையிலான செலவுகள் | 2,749.59 |
| திரும்ப பெறபட்டதொகை | 2,732.28 |

அட்டவனை 10.22: தேசிய வரவு செலவு ஒதுக்கீது.

26. **பகுப்பாய்வு மற்றும் செயற்பாடுகளுக்கான மதிப்பீடு.** கடந்த ஆண்டுக்கான பகுப்பாய்வு மற்றும் செயற்பாடுகளுக்கான மதிப்பீடுகள் விபரம் கீழ்வருமாறு:

அ. 2016 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுக்கு அமைய ஒதுக்கீடு குறைவாக கானப்பட்டதோடு இலங்கை தரைப்படையானது அதனை நிர்வாகித்து அதன் இலக்கை அடைந்தது.

| இல | விபரம் | 2016 ஆம் திட்டமிடப்பட்ட மதிப்பீடு (ரூபா மில்லியன்) | 2106 வருட ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | வித்தியாசம் | |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபா மில்லியன்) | சதவீதம் |
| 1. | மீண்டுவருபவை | 161,577.96 | 151,893.69 | 9,684.27 | 6% |
| 2. | மூலதனம் | 8,910.45 | 3,150.00 | 5,760.45 | 65% |
| | **மொத்தம்** | **170,488.41** | **155,043.69** | **15,444.72** | |

* கடன் ஒதுக்கீட்டு வரி இந்த அட்டவனையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

அட்டவனை 10.23: உண்மையான வருடாந்த ஒதுக்கீடு.

ஆ. விவசாயம் மற்றும் கால் நடை பணிப்பக குழுமத்தினால் நடாத்தப்படும் நடவடிக்கைகள் இலங்கையில் தயாரிக்கப்படும் விவசாய மற்றும் பண்ணை பொருட்களை குறைந்த செலவில் தயாரிப்பதற்கு உதவுவது கவனிக்கக்கூடிய ஒன்றாகும். மேலும் இந்நடவடிக்கைகளிக் மூலம் இலங்கையின் சுற்றுசுழல் பாதுகாப்புக்கு உதவுவதோடு ஏனைய திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(1) குறுங்கால/நீண்டகால பயிர் செய்கை திட்டங்கள்.
(2) மரவளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்.

இ. யுத்தத்தில் இறந்த/அங்கவீனமுற்ற மற்றும் மருத்துவ காரணங்களுக்காக ஓய்வு பெற்றவர்களுக்கான கொடுப்பனவுகள் 2016 ஆம் ஆண்டு, அதிகாரிகள் 32% மற்றும் ஏனைய நிலையினர் 15 % ஆகவும் அதிகரித்தது. மேலும் 2015 ஆண்டை பார்க்க மருத்துவ காரணங்களுக்காக ஓய்வுபெற்ற அதிகாரிகள்/ ஏனைய நிலையினர் எண்ணிக்கை அதிகரித்தது.

| இல | விபரம் | 2015 (ரூபா மில்லியன்) | 2016 (ரூபா மில்லியன்) | வித்தியாசம் (ரூபா மில்லியன்) | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1. | அதிகார | 1,040.39 | 1,370.55 | 330.16 | 32 % |
| 2. | ஏனைய நிலையினர் | 19,490.18 | 22,445.13 | 2,954.95 | 15 % |
| | **மொத்தம்** | **20,530.57** | **23,815.68** | **3,285.11** | **16 %** |

அட்டவனை 10.24: யுத்தத்தில் இறந்த/அங்கவீனமுற்ற மற்றும் மருத்துவ காரணங்களுக்காக ஓய்வு பெற்றவர்களுக்கான கொடுப்பனவுகள்

## <u>நிர்வாக ஜெனரல் கிளை</u>

1. பிரதம நிலை அதிகாரி பதவியை வகிக்கும் மேஜர் ஜெனரல் நிலையில் இருக்கும் உயர் அதிகாரிகளில் ஒருவரான இராணுவத் தலைமையகத்தின் நிர்வாக ஜெனரல் கிளையின் அத்தியட்சகரான நிர்வாக ஜெனரல் அவர்களினால் அணைத்து நிர்வாகம் சம்பந்தமான காரணங்களுக்கு இராணுவத் தளபதிக்கு பொறுப்புக் கூற வேண்டும்.




படவுரு 11.1: நிர்வாக ஜெனரல் அலுவலகத்தின் கீழ் உள்ளக அமைப்பு.

2. **<u>சாதனைகள் மற்றும் வருடாந்த மதிப்பாய்வு.</u>** இவ்வருடம் நிர்வாக ஜெனரல் அலுவலகத்தினால் பின்வரும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டன.

அ. **<u>5 ஆவது ரணவிரு ரியல் ஸ்டார் நிகழ்ச்சியை ஒருங்கினைத்தமை.</u>** பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டலுடன் 2016 செப்டெம்பர் 16 ஆம் திகதி ரணவிரு ரியல் ஸ்டார் இறுதி சுற்று சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இலங்கை பீரங்கிப் படைபிரிவை சேர்ந்த ப/163263 பொம்பொடி பலன்சூரிய பிஎம்எஸ்எஸ் முதலாம் இடத்தை பெற்று வெற்றிவாகை சூடினார். இரண்டாம் இடத்தை கடற்படையை சேர்ந்த என்ஆர்எக்ஸ் 2895 லுத்தினன் அமில லக்மால் சிரிவர்தன மற்றும் மூன்றாம் இடத்தை விமானப்படையை சேர்ந்த 40114 லீடிங் எயாமென் பிரச்சன்ன சஞ்சீவவும் வென்றெடுத்தனர்.

ஆ. **<u>பொது இணைப்பு திட்டம் (Common Bond Project).</u>** 2016 ஜூலை 24 ஆம் திகதி தொடக்கம் 2016 ஆகஸ்ட் 04 வரை அமெரிக்காவில் நடைபெற்ற பொது இனைப்பு திட்ட நிகழ்ச்சிக்கு யுத்தத்தின் போது உயிர் நீத்த தரைப்படையின் படைவீரர்கள் மூவரின் பிள்ளைகள் பங்குபற்றினார்கள். இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளின் மன உளைச்சல் குறைக்கப்பட்டதோடு வெளிநாட்டு பிள்ளைகளுடன் பழகுவதற்குற்கு வாய்ப்பு க்கள் அளிக்கப்பட்டன. பிள்ளைகளின் திறனை அதிகரிப்பதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

இ. **<u>2016 ஆம் ஆண்டு பொது மன்னிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தமை</u>**

(1) 2016 ஜூன் 13 முதல் 2016 ஜூலை 12 வரை சம்பளங்கள் மற்றும் ஆவணங்கள் பணிப்பக குழுமத்தினால் விலக்கப்பட்ட 12934 ஏனைய நிலையினருக்கு முதலாவது கட்டமாக பொது மன்னிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(2) 2016 டிசம்பர் 01 முதல் 2016 டிசம்பர் 31 வரை சம்பளங்கள் மற்றும் ஆவணங்கள் பணிப்பக குழுமத்தினால் விலக்கப்பட்ட 4 அதிகாரிகள் மற்றும் 4871 ஏனைய நிலையினருக்கு இரண்டாம் கட்டமாக பொது மன்னிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

ஈ. **<u>இப் பணிப்பக குழுமத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய நிகழ்ச்சிகள்.</u>**

(1) **<u>வெற்றிக் கொண்டாட்டம் (கலாச்சரர நிகழ்ச்சி).</u>** இந்நிகழ்ச்சி 2016 மே 16 ஆம் திகதி பத்தரமுல்லையிலும் சமரசத்துக்கான முன்னோக்கிய நகர்வு கலாச்சார நிகழ்ச்சி 2016 மே 18 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்திலும் நடைபெற்றது.

(2) **<u>புதுவருட நிகழ்வுகள்.</u>** தரைப்படை தளபதியின் பங்கேற்புடன் 2016 ஏப்பிரல் 11 ஆம் திகதி மலே வீதி மைதானத்தில் புதுவருட நிகழ்வுகள் நடைபெற்றன.

(3) **<u>தேசிய வெசாக் விழா.</u>** தரைப்படை தளபதியின் பங்கேற்புடன் 2016 மே 21 ஆம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு கொழும்பு கங்காராம விகாரைக்கு அருகே வெசாக் கூடு கண்காட்சி, பகதிப் பாடல்கள் மற்றும் அன்னதானம் என்பன நடைபெற்றன.

(4) **<u>தேசிய பொசன் விழா</u>.** தரைப்படை தளபதியின் பங்கேற்புடன் 2016 ஜூன் 19 ஆம் திகதி மஹியங்கனை விகாரையில் நடைபெற்றது.

(5) **<u>பாதுகாப்பு கருத்தரங்கு.</u>** 2016 செப்டெம்பர் 01 திகதி தொடக்கம் 2016 செப்டெம்பர் 02 ஆம் திகதி வரை கொழும்பு, சினமன் கிரேன்ட ஹோட்டலில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

(6) **<u>67 ஆவது தரைப்படை ஆண்டு நிறைவு விழா</u>.** தரைப்படை தளபதியின் பங்கேற்புடன் 2016 ஒக்டோபர் 10 ஆம் திகதி இலங்கை பீரங்கி படைபிரிவு மைதாணத்தில் நடைபெற்றது.

**<u>ஆளனி நிர்வாக பணிப்பக குழுமம்</u>**

3. தரைப்படை ஆணைக்கு அடங்க இப்பணிப்பக குழுமமானது நிர்வாக ஜெனரல் அவர்களின் கீழ் இயங்குகிறது. சிப்பாய்களின் ஆட்சேர்ப்பு முதல் ஓய்வு பெறும் காலப்பகுதி வரையான அனைத்து நிர்வாக செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் அரச மற்றும் இராணுவ விழாக்களை ஒழுங்குபடுத்துவதும் பயிலுனர் அதிகாரிகளை உட்சேர்ப்பு செய்தல், வீர தீர செயலகளுக்கான பதக்கங்கள்/ சேவை பதக்கங்கள் வழங்குதல் மற்றும் பணிப்பாளர் நிர்வாகத்துடன் தொடர்புடைய நடைமுறைகளை செயற்படுத்துவதும் இவ் பணிப்பக குழுமத்தின் பொறுப்பாகும்.

4. இப்பணிப்பக குழுமமானது ஆளனி நிர்வாக கொள்கைகளை தயாரித்து நடைமுறைபடுத்துவதன் மூலம் உட்சேர்ப்பு முதல் வெளியேறும் வரையில் சிறந்த மனிதவள முகாமைத்துடன் சிரான முறையிலான நடைமுறை படுத்துவதற்கு உதவுகிறது. மேலும் சிப்பாய்களின் ஆட் சேர்ப்பு முதல் ஓய்வு பெறும் காலப்பகுதி வரையான அனைத்து நிர்வாக செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் அரச மற்றும் இராணுவ விழாக்களை ஒழுங்குபடுத்துவதும் பயிலுனர் அதிகாரிகளை உட்சேர்ப்பு செய்தல் இப்பணிப்பகத்தின் கொள்கைகளாகும்.

5. **விழாக்கள்.** பின்வரும் தரைப்படை விழாக்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் 2016 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடைபெற்றன.

அ. **அரசாங்க நிகழ்வுகள்**

(1) **04 பெப்ரவரி 2016.** முப்படைகளினதும் மற்றும் பொலிசாரினதும் பங்களிப்பில் 68 ஆவது சுதந்திர தின வைபவம் கொழும்பு, காலி முகத்திடலில் நடாத்தப்பட்டது. இங்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்காக முப்படைகளினதும் மரியாதை அணிவகுப்பு மற்றும் 21 மரியாதை வேட்டுக்கள் என்பன அளிக்கப்பட்டன.

(2) **27 ஒக்டோபர் 2016.** படை வீரர்களுக்கு பதக்கங்கள் வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக சர்வதேச கலாச்சார மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முப்படையை சோந்த 300 அதிகாரிகள் உட்பட 8213 ஏனைய நிலையினர் பதக்கங்களை பெற்றார்கள்.

ஆ. **பௌத்த சமய நிகழ்வுகள்**

(1) **21, 22 மற்றும் 23 பெப்ரவரி 2016.** கங்கராமை விகாரையினால் ஒழுங்கு செய்யப்பட்ட நவம் போயா தினத்திற்கு இலங்கை தரைபடையினால் உதவி வழங்கப்பட்டது.

(2) **21 தொடக்கம் 25 மே 2016.** பௌத்த ரஷ்மி, தியவன்னாவ, கொள்ளுபிடி, வலுகரம, பௌத்தலோக, மஹர, கடவத்தை, தரைப்படை தலைமையகம், சம்போதி விகாரை வெசாக் வலயம் ஆகிய இடங்களில் வெசாக் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வெசாக் கூடு கண்காட்சிக்கு இலங்கை தரைப்படையினால் வெசாக் கூடுகள் வழங்கப்பட்டன.

(3) **23 ஜூலை 2016.** அநுராதபுரத்தில் நடைபெற்ற தேசிய மல்லிகை பூ பூஜைக்கு தரைப்படையினால் உதவிகள் வழங்கப்பட்டன.

(4) **12 செப்டெம்பர் 2016.** பௌத்த மதகுரு நய்யுனே ஆரியதம்ம அவர்களின் இறப்பை முன்னிட்டு அரசாங்க மற்றும் இராணுவ மரியாதை நடாத்தப்பட்டதோடு தரைப்படையினால் படையினர் இந்நிகழ்வுக்காக அனுப்பப்பட்டனர்.

இ. **இராணுவ அதிகாரிகள், வெளிநாட்டு பிரமுகர்கள், இராஜாங்க தலைவர்கள் ஆகியோருக்கு செலுத்தப்பட்ட அணிவகுப்பு மரியாதைகள்**

(1) **05 ஜனவரி 2016.** பாகிஸ்தான் பிரதம மந்திரி இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

(2) **27 ஏப்பிரல் 2016.** தாய்லாந்து முப்படை தளபதி இலங்கை விஜயத்தின் போது பாதுகாப்பு அமைச்சின் ஹெலிகப்டர் நிறுத்தும் இடத்தில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

(3) **08 ஆகஸ்ட் 2016.** பாகிஸ்தான் முப்படை தளபதி இலங்கை விஜயத்தின் போது பாதுகாப்பு அமைச்சின் ஹெலிகப்டர் நிறுத்தும் இடத்தில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

(4) **12 ஆகஸ்ட் 2016.** நோர்வே பிரதம மந்திரி இலங்கை விஜயத்தின் போது போது பாதுகாப்பு அமைச்சின் ஹெலிகப்டர் நிறுத்தும் இடத்தில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இவருக்கு பீரங்கி மரியாதையும் கலாச்சார நிகழ்ச்சிகளும் வழங்கப்பட்டன.

(5) **13 டிசம்பர் 2016.** தஜகிஸ்தான் அதிமே தகு ஜனாதிபதி அவர்களுக்கு இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் முப்படை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இலங்கை தரைப்படை அணிவகுப்புக்கு படை வீரர்களை வழங்கியதுடன் 21 பீரங்கி மரியாதையும் கலாச்சார நிகழ்ச்சிகளும் அளிக்கப்பட்டன.

(6) **13 டிசம்பர் 2016.** அரசாங்க இரவு விருந்துபசாரம் தஜகிஸ்தான் அதிமே தகு ஜனாதிபதி அவர்களுக்கு 1930 மணியளவில் அலரி மாளிகையில் வழங்கப்பட்டதோடு தரைப்படை சங்கீத வாத்தியகுழுவையும் 06 பெண் அதிகாரிகளை வரவேற்பு அளிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியது.

6. **நிதியியல் விபரங்கள்.** கடந்த ஆண்டிற்கான நிதியியல் விபரங்கள் கீழ்வருமாறு.

அ. **ஊக்குவிப்புக் கொடுப்பனவு.** 2016 ஆம் ஆண்டுக்காக செலுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ. **அங்கவீன படை வீரர்களுக்கு சம்பளம் மற்றும் நட்டஈடு வழங்கி தரைப் படையிலிருந்து ஓய்வு பெறச் செய்வித்தல் நடவடிக்கை.** செயற்பாடுகளின் போது அங்கவீனமான 114 அலுவலர்களுக்கும் 1915 ஏனைய பதவி படித் தரங்களின் அலுவலர்களுக்கும் மருத்துவ வகைப்படுத்தலின் பிரகாரம் சம்பளம் மற்றும் ஒதுக்கீடுகளுடன் இவ்வாண்டில் ஓய்வுபெறச் செய்விக்கப்பட்டது.

இ. **நட்டஈடு வழங்கிய பின்னர் மீண்டும் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.** திடீர் விபத்துகள் காரணமாக அங்கவீனமாகிய 18 அதிகாரிகளுக்கும் 276 ஏனைய பதவிப் படித் தரங்களில் உள்ளவர்களுக்கும் நட்டஈடு செலுத்திய பின்னர் மீண்டும் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது.

ஈ. **தரைப்படை சேவையில் மரணமடைந்த தரைப் படை உறுப்பினர்களின் தங்கி வாழ்வோரிற்கான நட்டஈடுகளை வழங்கல்.** கடந்த ஆண்டில் 04 அலுவலர்கள் மற்றும் 28 ஏனைய நிலையில் உள்ளவர்கள் தரைப் படை சேவைக்கு உரியதான காரணங்களின் அடிப்படையில் இறந்துள்ளனர். அவர்களில் 04 அலுவலர்கள் மற்றும் 28 ஏனைய நிலையினரிரை தங்கி வாழ்வோருக்கு சம்பளங்கள் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 346 மற்றும் 22/93 இன் பிரகாரம் 60, 120 மாதங்களுக்கு உரியதாக நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளது.

உ. **விளம்பரங்கள் மற்றும் பிரச்சாரங்கள்.** இந்த ஆண்டில் இப் பணியின் பொருட்டு ரூபா 13,281,295.00 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதில் ரூபா 11,344,884.44 செலவு செய்யப்பட்டதுடன் இவ்வாண்டு கடைசியில் ரூபா 1,936,410.56 மிகுதியாக காணப்படுகிறது.

ஊ. **நேர்முகப்பரீட்சை மற்றும் மதீப்பீட்டு குழுக்களுக்கான கட்டணங்கள்.** நேர்முகப்பரீட்சை மற்றும் மதீப்பீட்டு குழுக்களுக்கான கட்டணங்களுக்காக இவ்வருடம் ரூபா 2,000,000.00 நிதி ஒதுக்கப்பட்டது. இதில் ரூபா 1,316,186.00 செலவு செய்யப்பட்டதுடன் இவ்வாண்டு கடைசியில் ரூபா 683,814.00 மிகுதியாக காணப்படுகிறது.

எ. **அலங்கார பட்டிகள் மற்றும் பதக்கங்களுக்கான வேலைப்பாடுகள்.** 2016 ஆம் ஆண்டுக்காக ரூபா 500,000.00 நிதி ஒதுக்கப்பட்டது. இதில் ரூபா 75,480.00 செலவு செய்யப்பட்டதுடன் இவ்வாண்டு கடைசியில் ரூபா 424,520.00 மிகுதியாக காணப்படுகிறது.

ஏ. **மொழிப்பெயர்புக் கட்டணம்.** 2016 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,000,000.00 நிதி ஒதுக்கப்பட்டது. இதில் ரூபா 131,259.00 செலவு செய்யப்பட்டதுடன் இவ்வாண்டு கடைசியில் ரூபா 68,741.00 மிகுதியாக காணப்படுகிறது.

ஓ. கடந்த சில ஆண்டுகளாக ஒதுக்கபட்ட நிதி செலவுத்தலைப்புகளின் அதிகரிப்பு மற்றும் குறைவு என்பன கீழ் குறிப்பிட்ட அட்டவனையில் காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | விளம்பரங்கள் மற்றும் பிரச்சாரங்கள் (ரூபா) | நேர்முகப்பரீட்சை மற்றும் மதீப்பீட்டு குழுக்களுக்கான கட்டணங்கள் (ரூபா) | தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக சேதமான சொத்துக்கள் மற்றும் வீடுகள் என்பவற்றின் பொருட்டு நட்டஈடு (ரூபா) | அலங்கார பட்டிகள் மற்றும் பதக்கங்களுக்கான வேலைப்பாடுகள் (ரூபா) |
|---|---|---|---|---|
| 2011 | 8,830,900.00 | 3,150,000.00 | 300,000.00 | 150,000.00 |
| 2012 | 10,454,053.00 | 3,300,300.00 | 900,000.00 | 1,325,000.00 |
| 2013 | 12,000,000.00 | 2,200,000.00 | 312,500.00 | 800,000.00 |
| 2014 | 15,222,650.00 | 1,500,000.00 | 1,026,500.00 | 5,806,301.73 |
| 2015 | 8,394,493.88 | 891,677.50 | 714.00 | 400,000.00 |
| 2016 | 11,344,844.44 | 1,316,186.00 | - | 75,480.00 |

அட்டவனை 11:1 வருடாந்த அதிகரிப்பு/ குறைவு விபரம்.

**<u>தரைப்படை சங்கீத வாத்தியகுழு மற்றும் கலைநிகழ்ச்சி பணிப்பக குழுமம்</u>**

7. இலங்கை தரைப்படை சங்கீத வாத்தியகுழு பணிப்பக குழுமமானது, 2014.07.09 ஆம் திகதியில் இருந்து தரைப்படை சங்கீத வாத்தியகுழு மற்றும் கலைநிகழ்ச்சி பணிப்பக குழுமமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு இல 92, தெலவல வீதி, இரத்மலானையில் நிறுவப்பட்டது. தரைப்படையின் கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கு சங்கீத வாத்தியகுழு மற்றும் நடன குழுக்களை வழங்கள் ஆகியன அப்பணிப்பக குழுமத்தின் முக்கிய பொறுப்புக்களாகும்.

8. தரைப்படை சங்கீத வாத்தியகுழு மற்றும் கலைநிகழ்ச்சி பணிப்பக குழுமத்தினால் வழங்கப்படும் சேவைகள்.

அ. இராணுவ நிகழ்வுகள் - பிராஜ் வாத்தியகுழு.
ஆ. கிழக்கத்தேய பீட் குழு.
இ. ஹேவிசி பேண்ட் (இசைகுழு).
ஈ. நடன பேண்ட்.
உ. கெலிப்சோ பேண்ட்.
ஊ. சிறிய பீட் இசைகுழு.
எ. பெதுர.
ஏ. கலாச்சாரா நடன குழு.
ஒ. மேற்கத்திய நடன குழு.
ஐ. ஹேவிசி பேண்ட்.
ஔ. பைப் பேண்ட்.
க. “பிரிக்கமுடியாத” இசைகுழு.

9. **<u>பிரதான செயற்பாடுகள் அவற்றின் முன்னேற்றம்</u>.** பிரதான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. தற்போது இப்பணிப்பக குழுமத்தில் உள்ள 28 அதிகாரிகள் மற்றும் 678 ஏனைய நிலையினருக்கு மேலாக 11 அதிகாரிகளுக்கும் 184 ஏனைய நிலையினருக்கும் இலங்கை தரைப்படையின் அனுமதி பெறப்பட்டது.

ஆ. “பிரிக்கமுடியாத” இசைகுழு உருவாக்கம்.

இ. அனைத்து வசதிகளுடன் கூடிய அழகு நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல்.

10. **சவால்களும் கவனிக்கப்பட்டவையும்.**

அ. **முக்கிய சவால்கள்**

(1) புதுவருட நிகழ்வுகளும் சுகந்திர தின விழாவும்.
(2) தரைப்படை தலைமையகத்தில் புது வருட நிகழ்வுகள்.
(3) வெசாக் பக்தி பாடல்கள்.
(4) பொசன் பக்தி பாடல்கள்.
(5) யுத்த வெற்றி அணிவகுப்பு.
(6) அணிவகுப்பு போட்டிகள்.
(7) பாதுகாப்பு கருத்தரங்குகள்.
(8) தரைப்படை வர்ணங்கள் இரவு.
(9) தரைப்படை தின கொண்டாட்டங்கள்.
(10) தரைப்படை நடனம்.
(11) கிறிஸ்மஸ் பக்திபாடல்கள்.
(12) வருடாந்த உணவு விழா.
(13) வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள்.
(14) வெளிநாட்டு பிரதானிகளை வரவேற்றல்.
(15) தியதலாவை பயிலுனர் அதிகாரிகளின் அணிவகுப்பு.
(16) கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைகழக பட்டமளிப்பு விழா.
(17) லொஜிஸ்டிக் பாடசாலை பட்டமளிப்பு விழா.
(18) அதிகாரிகளின் இராணுவ திருமணங்கள்.
(19) அதிகாரிகளின் வருடாந்த ஒன்று கூடல்கள்.
(20) அதிகாரிகளின் வருடாந்த விழாக்கள்.
(21) சேவா வனிதா வருடாந்த குழு கூட்டம்.
(22) வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கான இரவு விருந்துபசாரங்கள்.
(23) சிரேஸ்ட அதிகாரிகளின் வழியனுப்பும் இரவு போசனங்கள்.
(24) பாதுகாப்பு படை தலைமையங்களின் வருட பூர்த்தி விழாக்கள்.
(25) பயிலுனர் அதிகாரிகளின் இரவு போசன விருந்துகள்.

ஆ. மேற்குறிப்பிட்ட சேவைகளை மேற்கொள்ளும் போது கருத்தில் கொள்ளப்படவேண்டியவை.

(1) சங்கீத வாத்திய குழு மற்றும் நடன குழுக்களுக்கு தேவையான கோரிக்கைகளை பூர்த்தி செய்ய இயலாமை.
(2) போதுமான அளவு இசை வாத்திய கருவிகள் இல்லாமை.
(3) சங்கீத வாத்திய குழு மற்றும் நடன குழுக்களுக்கு போதுமான ஆடைகள் இல்லாமை.
(4) போக்குவரத்து கடினம்.

11. **எதிர் கால திட்டங்கள்.** இப்பணிப்பகத்தின் எதிர்கால திட்டங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. இதபொசேப தலைமையகத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்ட இசை வாத்திய குழு மற்றும் நடனமாடும் படைவீரர்களுக்காக புதிய வதிவிட கட்டிடம் அமைத்தல்.

ஆ. தரைப்படை தளபதியின் புதிய எண்ணக்கருவுக்கு அமைய இலங்கை தரைப்படை இசை வாத்தியகுழு 2017 நிறுவுதல்.

இ. தரைப்படை சங்கீத வாத்தயகுழுவை பொலிவுபடுத்தல்.





**<u>சட்ட சேவைகள் பணிப்பக குழுமம்</u>**

12. இலங்கை இராணுவத்திக்குள் ஏற்படும் அனைத்து சட்டம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வுகான்பதும் அனைத்து மட்டங்களிலும் அது சம்பந்தமாக இராணுவத் தளபதிக்கு ஆலோசனை வழங்குவதும் இவ் பணிப்பக குழுமத்தின் பிரதான பொறுப்பாகும்.

13. **<u>பிரதான செயற்பாடுகளும் முன்னேற்றமும்</u>.** 2016 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சட்டசேவை பணிப்பக குழுமத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. சட்ட அதிகாரிகளால் 60 படைபிரிவுகள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்ககூடிய வகையில் தரைப்படை பயிற்சி பாடசாலைகளில் இராணுவ நீதி மற்றும் ஏனைய நீதியில் விடயங்கள் சம்பந்தமாக விரிவுரைகள், கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

ஆ. புணருத்தாபன பணிப்பக குழுமத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அங்கவீனமுற்ற போர் வீரர்களின் புணருத்தாபனம் மற்றும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 08 நீதி அதிகாரிகள் பங்குபற்றினார்கள்.

இ. இராணுவ விவகார பணிப்பக குழுமத்தினால் யுத்தத்தில் இறந்த அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் நெறுங்கிய உறவினர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 08 நீதி அதிகாரிகள் பங்குபற்றினார்கள்.

ஈ. மேற்குறிக்கப்பட்ட ஆண்டில் தரைப்படை நீதியியல் சேவைக்கான ஒதுக்கப்பட்ட மொத்த செலவுத் தலைப்பு தொகை 1,159,480.00.

14. **<u>திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள்</u>.** கடந்த காலத்தில் செயற்படுத்தப்பட்ட திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள் விபரம் கீழ்வருமாறு.

அ. இலங்கை பார் சம்மேலத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சட்டத்துறையின் புதிய போக்குகள் சம்பந்தமான கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கு தரைப்படை நீதியில் அதிகாரிகள் பங்குபற்றினார்கள்.

ஆ. வாத்துவ, ப்ளு வோட்டர்ஸ் ஹோட்டலில் 2016 03.18 தொடக்கம் 2016.03.20 வரை நடைபெற்ற தேசிய சட்ட கருத்தரங்குக்கு 2016, 06 நீதி அதிகாரிகள் பங்குபற்றினார்கள்.

இ. கொழும்பு, பண்டாரநாயக சர்வதேச கலாச்சரா மண்டபம் மற்றும் சினமன் கிரேன்ட் ஹோட்டலில் 2016.08.10 தொடக்கம் 2016.08.15 வரை நடைபெற்ற சட்டம் ஆசியா பொன்விழா நிகழ்வுக்கு, 10 நீதி அதிகாரிகள் பங்குபற்றினார்கள்.

ஈ. கொழும்பு. பண்டாரநாயக சர்வதேச கலாச்சரா மண்டபம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் மனித உரிமை மையத்துடன் ஒன்றினைந்து 2016.08.26 தொடக்கம் 2016.08.28 வரை நடாத்திய மனித உரிமை குடியுரிமை குடியமர்த்தல் 2017 என்னும் தொனிப்பொருளிலான சர்வதேச கருத்தரங்குக்கு 10 நீதி அதிகாரிகள் பங்குபற்றினார்கள்.

15. 2017 ஆம் ஆண்டு நடைமுறைபடுத்த எண்ணப்பட்டிருக்கும் வேளைகள் விபரம் கீழ்வருமாறு.

அ. இலங்கை பார் சம்மேலத்தினால் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் ஒழுங்கு செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றுக்கு அதிகளவிலான நீதியியல் அதிகாரிகளை பங்கு கொள்ள செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆ. சட்ட சேவைகள் பணிப்பக குழுமத்தில் பணியாற்றுகின்ற ஏனைய நிலையினருக்கு எழுதுநர் சேவை மற்றும் கனணி அறிவை அதிகரிப்பதற்காக அதிகளவில் கருத்தரங்குகளுக்கு பங்குகொள்ள செய்ய என்னப்பட்டிருக்கிறது.

**<u>ஒழுக்க கட்டுப்பாட்டு பணிப்பக குழுமம்</u>**

16. இராணுவ பொலிஸ் சேவைகளுடன் சம்பந்தமான கட்டளைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பற்றி இராணுவத் தளபதிக்கு ஆலோசனை வழங்குவதும், இராணுவத்திற்குள் மிகவும் உயர் நிலையில் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்வது இப் பணிப்பக குழுமத்தின் பொறுப்பாகும். அதே போல் ஒழுக்க விதிகளுடன் இணைந்த சாதாரண நிறுவனங்களின் தொழில்நுட்ப பயிற்சி மற்றும் அதனுடன் இணைந்த உபகரணங்கள் தொடர்பாக இப் பணிப்பக குழுமம் பொறுப்பு கூற வேண்டும்.

17. இராணுவ பொலிஸ் சேவைகளுடன் சம்பந்தமான கட்டளைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பற்றி இராணுவத் தளபதிக்கு ஆலோசனை வழங்குவதும், இராணுவத்திற்குள் மிகவும் உயர் நிலை ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்வதும் இவ் நிருவாக சபையின் பொறுப்பாகும்.

18. **<u>சாதனைகளும் இவ்வாண்டுக்கான மதிப்பீடுகளும்</u>.** கடந்த ஆண்டு இப்பணிப்பகத்தின் சாதனைகளும் மதிப்பீடுகளும் கீழ்வருமாறு:

அ. கடந்த ஆண்டு இலங்கை இராணுவ பொலிஸ் படையினரால் 1356 வழக்குகள் விசாரனை செய்யப்பட்டது.

ஆ. கடந்த ஆண்டு நடைபெற்ற விபத்துக்கள் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விபத்துக்கான காரணங்கள் | விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|
| தரைபடை சாரதிகளின் கவனமின்மை | 94 |
| சிவில் சாரதிகளின் கவனமின்மை | 54 |
| எந்திரவியல் பழைகள் | 10 |
| பாதைகள் ஒழுங்கின்மை | - |
| தவிர்க்க முடியாத காரணங்கள் | 13 |
| **மொத்தம்** | **171** |

| விபத்துக்களின் தன்மை | விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|
| எளிதான | 133 |
| தீவிரமான | 22 |
| அபாயகரமான | 16 |
| **மொத்தம்** | **171** |

அட்டவனை 11.2: நிகழ்ந்த வாகன விபத்துக்கள்.

இ. 2016 ஆம் நிலையான பரிசோதனை, ஊர்ந்து நடவடிக்கை, விசாரனைகள் மூலம் கீழ் குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் அனுமதியற்ற விடுமுறையில் இருந்தோர் கைது செய்யப்பட்டனர்.

| இல | கைது செய்யப்பட்டவை | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அனுமதியற்ற விடுமுறை | அதிகாரி/ ஏனைய நிலை | 12 x 3927 |
| 2. | சன்னங்கள் | 7.62 மிமீ x 39 சன்னங்கள் | 172 |
| | | 7.62 மிமீ x 39 பயிற்சி சன்னங்கள் | 75 |
| 3. | வெடிமருந்து | சீ 4 வெடிமருந்து | 835 கிராம் |
| 4. | எண்ணெய் | டீசல் | 2130 லீ , 25 மிலீ |
| | | பெற்றோல் | 215 லீ , 500 மிலீ |
| 5. | சட்டவிரோத போதைபொருள் | கஞ்சா | 10 கிகி 58 கி 259 மிகி |
| | | ஹெரோயின் | 22 கி, 305 மிகி |

அட்டவனை 11.3: கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் அனுமதியற்ற விடுமுறை

ஈ. 2016 ஆம் ஆண்டு பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

(1) வாகன சாரதிகளுக்காக விழிப்புணர்வு கருத்தரங்கு பனாகொடையில் நடாத்தப்பட்டது. (பொலிஸ் மற்றும் வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பக குழுமத்துடன் ஒன்றினைந்து) 18 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டதுடன் 1051 சாரதிகள் பங்குபற்றினார்கள்.

(2) இலங்கை சமிஞ்சை படைபிரிவு தலைமை காரியாலயத்தில் வாகன பராமரிப்பு மற்றும் வாகன விபத்துக்களை தவிர்க்கும் வழிமுறைகள் அடங்கலாக 2 நாட்கள் வேலை பட்டறை 2016 ஏப்பிரல் 03 மற்றும் 04 ஆம் திகதியும் 2016 ஜுன் 05 மற்றும் 06 ஆம் திகதிகளிலும் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு 456 வாகன போக்குவரத்து அதிகாரிகளும், 161 சாரதிகளும் பங்குபற்றினார்கள்.

(3) வாகன பராமரிப்பு மற்றும் வாகன விபத்துக்களை தவிர்க்கும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் இலங்கை இராணுவ பொலிஸ் படைபிரிவினால் அவர்களுடைய படையணி பிரிவுகளுக்குள்ளே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

| இல | படைபிரிவு | இடம் | நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் | பங்குபற்றியவர்கள் விபரங்கள் |
|---|---|---|---|---|
| 1. | 1 இஇபொப | பாபத (மே) | 08 | 04 அதிகாரிகள் மற்றும் 220 ஏனைய நிலையினர் |
| 2. | 2 இஇபொப | பாபத (கி) | 08 | 06 அதிகாரிகள் மற்றும் 310 ஏனைய நிலையினர் |
| 3. | 3 இஇபொப | பாபத (வ) | 22 | 04 அதிகாரிகள் மற்றும் 220 ஏனைய நிலையினர் |
| 4. | 4 இஇபொப | பாபத (யா) | 02 | 30 அதிகாரிகள் மற்றும் 323 ஏனைய நிலையினர் |
| 5. | 5 இஇபொப | பாபத (கிளி) | 24 | 11 அதிகாரிகள் மற்றும் 913 ஏனைய நிலையினர் |
| 6. | 6 இஇபொப | பாபத (முல்லை) | 04 | 84 ஏனைய நிலையினர் |
| | **மொத்தம்** | | **68** | |

அட்டவனை 11.4: விபத்துக்களை தவிர்க்கும் விழிப்புணர்வு செயற்திட்டங்கள்.

உ. விசேட கடைமைகள்





ஊ. பயிற்சி பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள்



குற்ற விசாரனை பாடநெறி



சாரதிகள் விழிப்புணர்வு நிகழ்வுகள்

19. **<u>எதிர்கால முன்னோக்கல்கள்.</u>** இப்பணிப்பகமானது பின்வரும் காரணிகளை முன்னேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளது.

அ. 2017 ஆம் ஆண்டுக்காக பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்குமாறு வரவு செலவு மறறும் நிதி முகாமைத்துவ பணிப்பக குழுமத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

(1) ஒவ்வொரு இலங்கை இராணுவ பொலிஸ் படையணிக்கு 3 மோட்டார் வண்டிகள்.

(2) புதிய தொழில்நுட்பத்துக்கு அமைய விசாரனைகளை செய்யக்கூடிய வகையில் இலங்கை இராணுவ பொலிஸ் படையணிக்கு பொசனிக் (forensic) ஆய்வுகூட வசதிகளை அமைத்தல்.

(3) விசாரனைகளை வினைதிறன் கூடிய வகையில் செய்யக்கூடிய வகையில் இலங்கை இராணுவ பொலிஸ் படையணிக்கு பின்வரும் வசதிகளை செய்ய வேண்டிய அவசியமாகவுள்ளது.

(அ) 8 வீடியோ புகைபட கருவிகள்.
(ஆ) 8 டிஜிட்டல் புகைபட கருவிகள்.
(இ) 7 கனணிகள்.
(ஈ) 8 நிற பிரின்டர்.

ஆ. தரவுகளை பராமரிக்க, புலன் விசாரனை, அனுமதியற்ற விடுமுறையில் உள்ளவர்களை கைது செய்வதற்கு, ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு மற்றும் இனையத்துடன் தொடர்புடைய குற்றங்களை தடுப்பதற்காக தகவல் தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் கனணி பராமரிப்பாளர்களின் தேவை அவசியமாக உள்ளது.

<u>நலன்புரி பணிப்பக குழுமம்</u>

20. இலங்கை நலன்புரி சம்மேலமானது தரைப்படையில் வேவையாற்றுகின்ற அதிகாரிகள் , ஏனைய நிலையினர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக 1989 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. தரைப்படையின் விரிவாக்கத்துக்கு அமைய இலங்கை தரைப்படை நலன்புரி சம்மேலமானது நலன்புரி பணிப்பக குழுமமாக 1994 ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதி பெயர் மாற்றப்பட்டது.

21. <u>பிரதான நடவடிக்கைகளும் முன்னேற்றங்களும்.</u> 2016 ஆம் இப்பணிப்பக குழுமத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நலன்புரி திட்டங்கள் விபரம் கீழ்வருமாறு.

அ. <u>சேவையிலுள்ள அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு கடன் வசதிகளை வழங்குதல்.</u> இலங்கை தரைப்படையில் சேவையாற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு 2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரை மீள்செலுத்தவேண்டிய தொகையில் 5 % குறைத்து 1786 சேவையாற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு இந் நலன்புரி திட்டம் வழங்கப்பட்டது.

ஆ. <u>குறைந்த விலை அடிப்படையில் காணிகளை வழங்குதல்.</u>

(1) அரசாங்க காணிகளில் ஆரம்ப வேலைகள் முற்று பெற்று உறுப்பினர்களுக்கு அடிப்படை விலையில் விற்பனைக்கு செய்யப்பட்டது. கம்பஹா மாவட்டத்தில் 95 காணிகளும் குருனாகலை மாவட்டத்தில் 195 காணிகளும் விற்பனை செய்ய ஒழுங்கு செய்யப்பட்டது.

(2) பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய சொந்த காணிகள் இல்லாத தரைப்படையில் சேவையாற்றுகின்ற உறுப்பினர்கள், யுத்தத்தில் இறந்த/ காணாமல் போன படைவீரர்களின் நெறுங்கிய உறவினர்கள் 1096 பேருக்கு களுத்துறை, இரத்தினபுரி, அநுராதபுரம், புத்தளம், குருனாகலை மாவட்டங்களில் கானிகளை பெறுவதற்காக விண்ணப்பங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இ. <u>அரசாங்க பாடசாலை/ பாதுகாப்பு சேவைகள் கல்லூரிக்கு விண்ணப்பித்தல்.</u> 2017 ஆம் ஆண்டில் தரைப்படை அங்கத்தவர்களுடைய பிள்ளைகள் 5722 பேர் அரசாங்க பாடசலைகளுக்கும் 152 பிள்ளைகள் கொழும்பு மற்றும் குருனாகலை பாதுகாப்பு சேவைகள் கல்லூரிக்கும் உட்சேர்க்க தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஈ. <u>உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட காப்புறுதி மற்றும் விசேட காப்புறுதி திட்டங்கள்.</u> நலன்புரி பணிப்பாளர் குழுமமானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பிரயான காப்புறுதி, வெடிபொருட்கள் கையாளுபவர்களுக்கான காப்புறுதி, சாரதி காப்புறுதி, தரைப்படை வாகனங்களுக்கான காப்புறுதி மற்றும் வேறு சில காப்புறுதி திட்டங்களை அறிமுகபடுத்தியது. 114 அதிகாரிகள் 1963 ஏனைய நிலையினர் இக்காப்புறுதித் திட்டத்தைப் பெற்றதுடன் ரூபா 18,900,000.00 இதற்காக ஒதுக்கப்பட்டது.

உ. <u>சுவசஹன நிதி.</u> 2016 ஆம் ஆண்டு 5231 தரைப்படை அங்கத்தவர்களுக்கு ரூபா 229,183,891.42 பெறுமதியான நிதி உதவி வழங்கப்பட்டது.

ஊ. <u>இலங்கை தரைப்படை சட்ட உதவி நிதி.</u> 2016 ஆம் ஆண்டு ஆறு தரைப்படை உறுப்பினர்களுக்காக ரூபா 1,250,000.00 நிதி சட்ட உதவிகளுக்காக வழங்கப்பட்டது.

எ. <u>இறந்தவர்களுக்கான நன்கொடை.</u> 2016 ஆம் ஆண்டு 223 உறுப்பினர்களுக்கு ரூபா 12,290,000.00 இறப்பு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

22. **<u>எதிர்கால முன்னோக்கல்கள்.</u>** நலன்புரி பணிப்பக குழுமமானது நலன்புரி நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துவதற்கும், நலன்புரி திட்டங்களுக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்புக்களை சரியான முறையில் பாவிப்பதன் மூலம் புதிய திட்டங்களை அறிமுகபடுத்தவும் என்னியுள்ளது. தரைப்படை தளபதியின் வழிகாட்டல்களுக்கு அமைய புதிய நலன்புரி திட்டங்கள் அனைத்து தரைபடை உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் அறிமுகபடுத்தபட்டுள்ளது.

**<u>படைவீரர்கள் விவகார பணிப்பக குழுமம்</u>**

23. மேலதிக நலன்புரி பணிப்பக குழுமமானது படைவீரர்கள் விவகார பணிப்பக குழுமமாக 2012 பெப்ரவரி 16 ஆம் திகதி பெயர் மாற்றம் செய்யப்பட்டது. நடவடிக்கை சேவைகளின் போது அங்கவீனராகிய, காணமல்போன, மற்றும் மரணமடைந்த படைவீரர்களதும் வாழ்க்கை தரங்களை உயர்த்துவதற்காக பல்வேறு நலன்புரி திட்டங்களை அறிமுகப்படுத்தப்பட்டன.

24. **<u>பிரதான செயற்பாடுகளும் முன்னேற்றமும்.</u>** இவ்வருடத்தில் அடையப்பட்ட முக்கிய நடவடிக்கைகளும் அவற்றின் முன்னேற்றங்களுக் கீழ்வருமாறு.

அ. இந்த பணிப்பாளர் குழுமத்தால் கீழ் குறிப்பிடப்பட்ட நலன்புரி மற்றும் ஏனைய திட்டங்கள் 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரை யுத்தத்தில் இறந்த அதிகாரிகள்/ ஏனைய நிலையினருடைய நெறுங்கிய உறவினர்களுக்காக வழங்கப்பட்டது.

| இல | விபரம் | யுத்தத்தில் காணமால் போனோர்கள் | யுத்தத்தில் இறந்தவர்கள் | சேவை ஆற்றுபவர்கள் |
|---|---|---|---|---|
| 1. | புலமைபரிசில் - பாதுகாப்பு அமைச்சசு (தரம் 1 - 13) | 10 | 5 | - |
| 2. | புலமைபரிசில் - DVA (தரம் 1 - 13) | 21 | 19 | - |
| 3. | புகையிரத பிரயாணச் சீட்டுகள் | 25 | | |
| 4. | பஸ்வண்டி பிரயாணச் சீட்டுகள் | 122 | | |
| 5. | சத்விரு சன்ஹிட வீடுகள் (பாதுகாப்பு அமைச்சின் அன்பளிப்பு) | 18 | 12 | 95 |
| 6. | சத்விரு சன்ஹிட அரைவாசி கட்டப்பட்ட வீடுகள் திட்டம் (ரூபா 750,000.00 பாதுகாப்பு அமைச்சினால் வழங்கபப்பட்டது) | - | - | 166 |
| 7. | விருசர சிறப்புரிமை அடையாள அட்டை வழங்கல் - கட்டம் 1 | 8498 | 12177 | - |
| 8. | விருசர சிறப்புரிமை அடையாள அட்டை வழங்கல் - கட்டம் 11 | - | - | 200 |

அட்டவனை 11.5: பணிப்பாளர் குழுமத்தால் வழங்கப்பட்ட நலன்புரி மற்றும் ஏனைய திட்டங்கள்.

ஆ. ஓய்வுபெற்ற படைவீரர்களின் விவகாரங்களை ஒன்றினைத்தல்.

(1) கடான, பொலகல பிரதேசத்தில் உள்ள முப்படைக்குரிய முதியோர் இல்லத்தை புதுப்பிக்க 7 (சு) பொசேப க்கு ரூபா 15,562,563.91 அளிக்கப்பட்டது.

(2) ஓய்வுபெற்ற படைவீரர்களின் சம்மேலத்தினால் வழங்கப்பட்ட வருடாந்த சீட்டிழுப்பு புத்தகங்களுக்காக தரைப்படை தளபதி நிதி மற்றும் படைபிரிவு தலைமையகங்களின் நிதியிலிருந்தும் ரூபா 1,000,000.00 ஓய்வுபெற்ற படைவீரர்களின் சம்மேலனத்துக்கு வழங்கப்பட்டது.

25. **நிதியியல் விபரங்கள்.** இவ்வாண்டுக்கான நிதியியல் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அ. **ரணவிருவா வீடமைப்பு நிதி.** ரனவிருவா வீடமைப்பு நிதியின் மிகுதியானது படைவீரர்கள் விவகார பணிப்பக குழுமத்தினால் பராமரிக்கப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டின் மீகுதித் தொகை ரூபா 146,349,682.24 ஆவதுடன் 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரையான காலப்பகுதியில் இப்பணம் பின்வரும் திட்டங்களுக்காக முதலீடு செய்யப்பட்டது.

| இல | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| 1. | தரைப்படை தளபதியின் எண்ணத்துக்கு அமைய விசேட திட்டங்களின் கட்டம்1, 11 ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. | 99,283,744.68 |
| 2. | யுத்தத்தில் இறந்த/ காயபட்டவர்களுக்கான வீடமைப்பு திட்டம் | 8,100,000.00 |
| 3. | சாலாவ, கொஸ்கம - சேதமடைந்த வீடுகளை திருத்தும் தேவைகளுக்காக பாப த (மேற்கு) இற்கு நிதி ஒதுக்கப்பட்டது. | 6,980,810.19 |
| 4. | சாலாவ, கொஸ்கம - சேதமடைந்த ரணவிருவா கிராமத்தை திருத்தும் தேவைகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டது. | 466,428.00 |
| 5. | தரைப்படை தளபதியின் வழிகாட்டலுக்கு அமைய பரா ஒலிம்பிக் போட்டியில் வெண்கல பதக்கம் வென்ற ப/469822 கோ ஹேரத் எயிச்எம்பிடி நிதியுதவி அளிக்கப்பட்டது. | 1,500,000.00 |
| 6. | தரைப்படை தளபதியின் வழிகாட்டலுக்கு அமைய ப/369591 லா கோ லக்மால் எயிச்பி (யுத்தத்தில் இறந்த) அவருடைய அம்மாவுக்கு காணி கொள்வனவுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. | 1,765,504.66 |
| 7. | தரைப்படை தளபதியின் வழிகாட்டலுக்கு அமைய அ/60323 மேஜர் பிஜேபி பெர்னான்டு - இசிப (ஓய்வுபெற்ற) காணி கொள்வனவுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. | 794,700.00 |
| 8. | தரைப்படை தளபதியின் வழிகாட்டலுக்கு அமைய ப/238683 லா கோ மானகே பிஎம்டி - 6 பொசேப அவருடைய உறவினருக்கு வீடு கட்டுவதற்காக நிதியுதவி அளிக்கப்பட்டது. | 900,000.00 |
| 9. | தரைப்படை தளபதியின் வழிகாட்டலுக்கு அமைய அ/62672 மேஜர் எயிச்எப் மாசூக் - இசிப அவருடைய உறவிருக்கு வீடு கட்டுவதற்காக நிதியுதவி அளிக்கப்பட்டது. | 4,234,641.00 |

அட்டவனை 11.6: ரனவிருவா வீடமைப்பு நிதி.

ஆ. **ரணவிருவா வீடமைப்பு திட்ட விபரங்கள்**

| இல | விபரம் | தொகை (ரூபா) | |
|---|---|---|---|
| 1. | நிலையான வைப்புக்கான வட்டி | 2,188,356.16 | 8,753,424.64 |
| 2. | ரணவிருவா வீடமைப்பு திட்டத்துக்காக சமஆ பணிப்பதகுழுமத்தினால் செலுத்தப்பட்ட தொகை ரூபா 2,400,000.00 x 12 | 2,400,000.00 x 12 | 28,800,000.00 |
| 3. | மொத்த வருமான நிதி | | 37,553,424.64 |
| 4. | செலுத்தப்படவேண்டிய மிகுதித் தொகை | | 9,500,000.00 |
| | **மிகுதித் தொகை** | | **28,053,424.64** |

அட்டவனை 11.7: ரணவிருவா வீடமைப்பு திட்ட விபரங்கள்.

<u>புணர்வாழ்வு பணிப்பக குழுமம்</u>

26. போரினால் ஊனமுற்ற அதிகாரிகள்/ சிப்பாய்களை புனர்வாழ்வு அளிக்கவும், போரினால் ஊனமுற்ற இராணுவ உறுப்பினர்களுடைய உடல் நிலைமைகளை சீராக பேணல், உடல் உணர்ச்சி, அறிவார்ந்த, உலவியல் மற்றும் சமூக செயல்பாட்டு நிலைமைகளை பராமரிக்கவும் பலனுடைய சேவையை வழங்கும் நோக்குடன் கீழ்க் காணப்படும் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. புணருத்தாபனம் பெற்றவர்கள் சுகந்திரமாகவும் சுயநிர்ணயத்துடனும் செயல்படகூடிய வகையில் மாற்றுவதும் இத்தாபனங்களின் முக்கிய நோக்கமாகும்.

அ. ரணவிரு செவன.
ஆ. ரணவிரு எபரல்ஸ்.
இ. அபிமன்சல ஆரோக்கிய ரிசோட் 1 (அநுராதபுரம்).
ஈ. அபிமன்சல ஆரோக்கிய ரிசோட் 2 (கம்புருக்பிடிய).
உ. அபிமன்சல ஆரோக்கிய ரிசோட் 3 (பன்கொல்ல).
ஊ. ரணவிருவா வள மையம்.
எ. மிகிந்து செத் மெதர.

27. **<u>பிரதான செயற்பாடுகளும் முன்னேற்றமும்</u>.** இப்பணிப்பகத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. **<u>தொழில்சார் பயிற்சிகள்</u>.** தொழில்நுட்ப பயிற்சிகள் அதிகாரசபை மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவனத்தின் உதவியுடன் அங்கவீனமுற்ற 01 அதிகாரி மற்றும் 231 ஏனைய நிலை அங்கத்தவர்களுக்கு தொழில்சார் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

ஆ. **<u>நலன்புரி புணருத்தாபண செலவுத்தலைப்பு</u>.** 2016 ஆம் ஆண்டு இப்பணிப்பக குழுமத்துக்கு கீழ் குறிப்பிட்ட தொகை மீள்வரும் செலவினத்துக்காக ஒதுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (1) | செலவு தலைப்பு இல | - | 222-01-2-1204 (VII). |
| (2) | செலவு தலைப்பு | - | நலன்புரி புணருத்தாபண செலவு. |
| (3) | வருடாந்த ஒதுக்கீடு (2016) | - | ரூபா 170,000,000.00. |

இ. **<u>இலங்கை தரைப்படை புணருத்தாபண நிதி</u>.** இலங்கை தரைப்படை புணருத்தாபன நிதியினால் நிர்வாகிக்கப்படுகின்ற மொத்த சொத்துக்கள் 2016 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று ரூபா 67,517,445.69 ஆவதுடன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (1) | வருடாந்த செலவு | - ரூபா | 5,238,472.40. |
| (2) | நிலையான வைப்பு | - ரூபா | 60,440,984.81. |
| (3) | நடைமுறை வைப்பு | - ரூபா | 1,141,688.48. |

ஈ. **<u>சமூகம் சார்ந்த புணர்வாழ்வு</u>.**

(1) அங்கவீனமுற்ற படைவீரர்கள் சமூகத்துடன் ஒன்றினைந்து வாழ்ககூடிய சூழல் வரும் வரையில் அவர்களுக்கு சமூகம் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திடத்தை சிறந்து முறையில் அமுல்படுத்த கண்கானித்தல் செயற்பாடுகள் நடைமுறைபடுத்தப்படுவதுடன் அவற்றுக்கு தேவையான மாற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(2) இந் நோக்கத்தை அடைவதற்காக பணிப்பக குழுமமானது படையணி தலைமையங்களுக்கும், நிறுவனங்கள் சார்ந்த மறுவாழ்வு மையங்களுக்கும் மற்றும் ரணவிரு கிராமங்களுக்கும் திட்டமிட்ட படி விஜயங்களை மேற்கொன்டது. சமூகம் சார்ந்த புணர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள் ரணவிரு கிராமங்களுக்கு மேற்கொள்ளப்பட்டன.

**<u>ஆளணி உட்சேர்ப்பு பணிப்பக குழுமம்</u>**

28. தரைப் படை நடைமுறையொழுங்கு 18/94 இன் அடிப்படையில் ஏப்பிரல் மாதம் பயிலுநர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் அலுவலமாக ஆரம்பிக்கப்பட்டு தரைப் படை நடைமுறையொழுங்கு 06/2012 இன் அடிப்படையில் 2012 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் ஆளணி உட்சேர்ப்பு பணிப்பக குழுமமாக மீளவும் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பணிப்பாளர் குழுமமானது நிறைவேற்று ஜெனரல் பிரிவின் கீழ் செயற்படுவதுடன் ஆளணி நிர்வாக பணிப்பாளர் குழுமத்துடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கும். மேலும் இங்கு கடமையாற்றுகின்ற மற்றும் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களது அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் தரைப் படைத் தலைமையகத்தின் தலைமையக படைப்பிரிவினரால் மேற்கொள்ளப்படும்.

29. **<u>பிரதான செயற்பாடுகளும் முன்னேற்றமும்</u>**. இப்பணிப்பகத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. திறமைமிக்க இளைஞர் யுவதிகளை இலங்கை தரைப்படைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் நோக்குடன் ஆட்சேர்த்தலுக்கான விளம்பரங்களை மேற்கொள்வதற்காக 2016 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அப்பணிப்பக குழுமமானது நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் ஆகியவற்றுக்கு பங்குபற்றியது.

ஆ. **<u>ஆட்சேர்ப்பு விபரங்கள் - அதிகாரிகள் (நிரந்தர படையணி)</u>**. இப்பணிப்பக குழுமமானது கீழ் குறிப்பிட்ட விசேட நிபுனத்துவ பிரிவுகளில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆரம்பத்தை ஏற்படுத்தியதோடு படைபிரிவு தலைமையங்களுக்கு அவசியமான அளவில் ஆட்சேர்ப்பு செய்து ஆரம்ப பயிற்சிகளை அளிப்பதற்கு வழிமுறை செய்தது. உட்சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கைகள் பின்வருமாறாகும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | தகவல் தொழிநுட்ப அதிகாரிகள் | - | 10. |
| (2) | பொறியியல் அதிகாரிகள் | - | 13 (பல்கலைகழக மாணவர்) |
| (3) | மருத்துவ, பல் வைத்திய அதிகாரிகள் | - | 08 (பல்கலைகழக மாணவர்) |
| (4) | விசேட மருத்துவ வைத்திய அதிகாரிகள் | - | 03. |
| (5) | சமிஞ்சை அதிகாரிகள் | - | 01. |
| (6) | விவசாய அதிகாரிகள் | - | 01. |
| (7) | இசை வாத்திய அதிகாரிகள் | - | 01. |
| (8) | பொறியியல் அதிகாரிகள் | - | 02. |
| (9) | கணக்கியல் அதிகாரிகள் | - | 15. |
| (10) | சட்ட அதிகாரிகள் | - | 03. |
| (11) | உத்தியோக பயிலுனர் (ஆண்) | - | 47 (இலங்கை இராணுவ கல்விக் கல்லூரி) |
| (12) | உத்தியோக பயிலுனர் (பெண்) | - | 22 (இலங்கை இராணுவ கல்விக் கல்லூரி) |
| (13) | உத்தியோக பயிலுனர் (ஆண்) | - | 37 (கொத்தலதவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்) |
| (14) | உத்தியோக பயிலுனர் (பெண்) | - | 04 (கொத்தலதவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்) |
| | **மொத்தம்** | - | **168** |

இ. 2016 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிரந்தர படைக்கு உட்சேர்க்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 6317 ஆகும். பரவலாக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறையானது எதிர்கால தேவைகளுக்காக படைபிரிவு தலைமையங்களுக்கு தேவையான அளவு ஆட்சேர்ப்பு செய்யவற்கு வழிவகுத்துள்ளது.

ஈ. இப்பணிப்பக குழுமமானது இரத்மலானை, 12 ஆவது தொகுதியில் இருந்து கொவுவல 11 ஆவது தொகுதிக்கு 2016.07.07 அன்று இடமாற்றம் செய்யப்பட்டது. முன்னால் நெல் முகாமைத்துவ சபை களஞ்சியமாக இருந்த இவ்விடம் புதுப்பிக்கப்பட்டது. ஒரு வருட காலத்துக்குள் இவ்விடமானது காரியாலயம், அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினர் வதிவிடம், உணவறை, களஞ்சியம் மற்றும் மலசல கூட வசதிகளை கொண்ட இடமாக மாற்றியமைக்கப்பட்டது. தற்போது புதிய குளியல் பிரதேசம் ஒன்று கட்டுமான பணியிலுள்ளது. புதுப்பித்தலுக்கான மொத்த செலவு ரூபா 7,118,235.21 ஆகும்.

30. **நிதியியல் விபரங்கள்.** விளம்பரம் மற்றும் பதிப்பக பிரசார நடவடிக்கைகளுக்காக ரூபா 2,969,89.00 ஒதுக்கப்பட்டது.

31. **எதிர்கால முன்னோக்கல்கள்.** தரைபடைக்கு ஆட்சேர்ப்புக்களை அதிகபடுத்துவதற்காக இலத்தியனியல் ஊடகங்கள் அதிகமாக பயன்படுத்தப்பட்டது. மேலும் இந்நாட்டு இறைஞர்களை கவருவதற்காக காணொலிகள் இப்பணிப்பக குழுமங்களினால் தயாரிக்கப்பட்டு இலங்கை ரூபவாஹினி மற்றும் சுயாதீன தொலைகாட்சி சேவை மற்றும் ஏனைய வனிய சேவைகள் ஊடாக விளம்பரபடுத்தி தரைப்படைக்கு ஆட்சேர்ப்புக்களை 2017 ஆம் ஆண்டுக்கு அதிகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்ட பணிப்பாளர் குழுமம்**

32. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துடன் இணைந்ததாக தரைப் படை நடவடிக்கைகளின் போது அதன் உறுப்பினர்களை மனித உரிமைகள் தொடர்பாக அறிவுறுத்தப்படுவதற்காக இலங்கை மனிதநேய சட்ட பணிப்பாளர் குழுமம் 1997 ஜனவரி 06 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. 2001 நவம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் இப்பணிப்பாளர் குழுமமானது மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்ட பணிப்பாளர் குழுமம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மனித உரிமைகள் தொடர்பாக அதன் உறுப்பினர்களை வலுப்படுத்துவதன் ஊடாக அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மனித உரிமைகள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டு அவற்றை மதித்து பாதுகாத்து மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்படுவதைத் தடுத்தல் என்பன இதன் பிரதான குறிக்கோள்களாகும்.

33. மனித உரிமைகளுடன் தொடர்புடைய அடிப்படைக் கொள்கைகள் மற்றும் சமவாயங்களை வலுப்படுத்தி சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மதித்து இணக்கப்பாட்டுடன் இலங்கை தரைப் படைக்குள் பயிற்சிகள், மேற்பார்வைகள், அறிக்கைகளை வைத்தல், முறைப்பாடுகளைச் செய்தல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் இக் குழுமத்தின் பொறுப்புக்களாகும்.

34. **பிரதான செயற்பாடுகளும் முன்னேற்றமும்.** இப்பணிப்பகத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. தரைப்படை நடைமுறையொழுங்கு பிரகாரம் பணிப்பாளர் குழுமத்தால் பாதுகாப்பு படைத் தலைமையகம், அணி தலைமையகம், படைப் பகுதி தலைமையகம், படையணிகள் என்பவற்றின் கீழ் உள்ள பிரதேசங்களில் மனித உரிமை குழுக்களை நியமித்தல். நியமிக்கப்பட்டுள்ள மனித உரிமை குழுக்கள் விபரம் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| பாபத | டிவிசன் | பிரிகேட் | பபித | படையணி (நி) | படையணி (சு) | ஏனைய தகா | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 07 | 22 | 69 | 23 | 174 | 99 | 08 | 402 |

ஆ. **இருவார அறிக்கை.** மனித உரிமைகள் குழு ஒன்றுகூடி உரிய விடயத்துடன் தொடர்புடைய விடயங்களைக் கலந்துரையாடப்பட்ட பின்னர் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய இரண்டு வாரத்திற்கொருமுறை அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். படைப் பகுதி தலைமையகம் /படை அணி தலைமையகத்தில் தாபிக்கப்பட்டுள்ள உரிய அலகுகள் இவ்வாறு ஒருங்கிணைந்து மனித உரிமைகள் செயற்பாடுகள்/ மீறல்கள் தொடர்பான அறிக்கையை இப்பணிப்பாளர் குழுமத்திடம் சமர்ப்பித்துள்ளதுடன் அவை மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

35. **<u>பயிற்சிகள்.</u>** இப்பணிப்பகத்தினால் கடந்த ஆண்டு பின்வரும் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. முப்படை, விசேட அதிரடி படை மற்றும் பொலிஸ் பிரிவை சேர்ந்த அதிகாரிகள், சிரேஸ்ட ஆணைக்குழுவற்ற அலுவலர்கள் மற்றும் ஏனைய நிலையினருக்கு மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதநேய சட்டங்கள் தொடர்பாக இக்குழுமத்தால் இவ்வருடம் அடிப்படை பயிற்சிநெறிகள் இரண்டும் உயர் பாடநெறிகள் இரண்டும் இலங்கை அமைதி காக்கும் தொழிற்பாட்டு பயிற்சி நிறுவனம் - குக்குலேகங்கவில் நடாத்தப்பட்டது.

ஆ. மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து பாதுகாப்புப் படைத் தலைமையகம், பயிற்சிப் பாடசாலைகள், அணி நிலையங்கள் மற்றும் அலகுகளில் அதிகாரிகள், சிரேஸ்ட ஆணைக்குழுவற்ற அலுவலர்கள் மற்றும் ஏனைய நிலையினருக்கு 05 மனித உரிமைகள் வெளிக்களப் பயிற்சிகள் இக் குழுமத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

இ. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஒருங்கிணைந்து ஐக்கியநாட்டு அமைதி காக்கும் பணிக்காக அமர்த்தப்படவுள்ள படையினருக்கு பாதுகாப்பு படை தலைமையகம், பயிற்சிப் பாடசாலைகள், அணி நிலையம் என்பவற்றில் சர்வதேச மனிதநேய சட்டம் தொடர்பான 08 சர்வதேச மனிதநேய சட்டங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை இலங்கை அமைதி காக்கும் தொழிற்பாட்டு பயிற்சி நிறுவனம் - குக்குலேகங்கவில் இப்பணிப்பாளர் குழுமத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

ஈ. அதிகாரிகள், சிரேஸ்ட ஆணைக்குழுவற்ற அலுவலர்கள் மற்றும் ஏனைய நிலையினருக்கு, பாதுகாப்புப் படைத் தலைமையகங்கள், படையணி தலைமையகங்கள், அணி நிலையங்கள் மற்றும் அலகுகளில் நடாத்தப் பட வேண்டுமென இப் பணிப்பாளர் குழுமத்தால் திட்டமிடப்பட்ட, மனித உரிமை சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதநேய சட்ட பயிற்சித் திட்டங்கள் 273 இற்கு, மனித உரிமை சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதநேய சட்டங்கள் தொடர்பான நிரந்தர ஆலோசகர் குழாமொன்றை தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளது.

உ. படைபிரிவு தலைமையங்கள் மட்டத்தில் 63 மூன்று நாள் சான்றிதல் மட்டத்திலான வேலை பட்டறைகள் இப்பணிப்பக குழுமத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டன.

ஊ. தெரிவு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரிகள் குழுவினால் 232 பயிற்சி அமர்வுகள் படைபிரிவு மட்டங்களில் ஒழுங்கு செய்யப்பட்டன.

எ. மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேய சட்டங்கள் சம்பந்தமான பயிற்சிகள் மற்றும் மூலதர்மங்கள் தரைப்படையை சார்ந்த அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினர் 52,739 பேருக்கு மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்டங்கள் பணிப்பக குழுமத்தினால் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

36. **<u>பரிந்துரைகள்.</u>** மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேய சட்டங்கள் சம்பந்தமாக அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு கீழ் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மேற்கொள்ளல் அவசியமாகும்.

அ. மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேய சட்டங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளில் ஆர்வமாக உள்ள அதிகாரிகளுக்கு இத்தாலியில் உள்ள சர்வதேச மனிதநேய சட்ட நிறுவனத்தில் பாடநெறிகளை பயில்வதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகிறது.

ஆ. மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேய சட்டங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளில் ஆர்வமாக உள்ள அதிகாரிகளுக்கு, உள்நாடுகளில் அல்லது இந்தியா, தேசிய சட்டக் கல்லூரியில் சர்வதேச மனிதநேய சட்டங்கள் மற்றும் அகதிகளுக்கான சட்டம் சம்பந்தமாக விரிவுரை ஆற்றுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகிறது.

**<u>சிவில் நிருவாக பணிப்பாளர் குழுமம்</u>**

37. இலங்கை தரைப் படையில் 11,000 ற்கும் மேற்பட்ட சிவில் ஆளனியினரது நிருவாக நடவடிக்கைகள் சிவில் நிருவாக பணிப்பாளர் குழுமத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. பாதுகாப்பு சேவை தலைமையகங்கள் அமைந்துள்ள அநுராதபுரம், மின்னேரியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, தியத்தலாவை பிரதேசங்களில் பிரதேச சிவில் நிருவாக அலுவலகங்களைத் ஸ்தாபித்து சிவில் நிருவாக பணிப்பாளருக்குள்ள அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சிவில் ஆளனியினரை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல், நிரந்தர நியமனங்களை வழங்குதல், இடமாற்றம் செய்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், பதவியுயர்வுகள், தனிப்பட்ட கோவைகளை வரைப்படுத்துதல், கடன்களை வழங்குதல், கடன்களை அனுமதித்தல், அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை நடாத்துதல், ஓய்வு பெறச் செய்தல் மற்றும் நலனோம்பல் நடவடிக்கைகள் இப்பணிப்பாளர் குழுமத்தால் மேற்கொள்ளப்படுகின்றன

38. **<u>பிரதான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களும்.</u>** இப்பணிப்பகத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. **<u>உட்சேர்ப்பு (உள்ளக மற்றும் வெளிவாரியாக)</u>**

(1) 2016 நவம்பர் 01 ஆம் திகதி முதல் தேசிய தொழில்பாட்டு தேர்ச்சிபெற்ற 10 நில அழகுபடுத்தும் நிபுனர்கள் உட்சேர்க்கப்பட்டார்கள்.

(2). சமையற்காரர், சாப்பாட்டறை உதவியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பதவிகளுக்குப் 368 சிவில் ஆளனியர் முதன்மை தர வகுப்புக்கு உட்சேர்க்கப்பட்டனர்.

ஆ. **<u>செயல்திறன் தேர்வு மற்றும் பதவி உயர்வு.</u>** செயல்திறன் தேர்வு மற்றும் புதிய உட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டு 538 சிவில் ஆளனியருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

இ. **<u>விழிப்புனர்வு நிகழ்ச்சி மற்றும் ஆலோசனைகள்</u>**

(1) குவாட்ட மாஸ்டர், விடயத்துடன் தொடர்புடைய எழுதுனர்கள் மற்றும் சிவில் ஊழியர்களுக்கு சிவில் நிர்வாகம் பற்றிய விழிப்புனர்வு நிகழ்ச்சி அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சியானது புதிய சிவில் நிர்வாகம் சம்பந்தமான புத்தகம் கொடுக்கப்பட்டதன் பின்னர் நடாத்தப்பட்டது.

(2) தொபகொட இலங்கை தரைப்படை போர் உபகரண பயிற்சி பாடசாலை, தியதலாவை சுயேட்சை படை பயிற்சிப் பாடசாலை மற்றும் திருகோணமலை லொஜிஸ்டிக் பாடசாலை ஆகியவற்றின் ஊடாக குவாட்ட மாஸ்டர், சிரேஸ்ட ஏனைய நிலையினர் மற்றும் களஞ்சிய காப்பாளர் 78 பேருக்கு சிவில் நிர்வாகம் சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

ஈ. **<u>பயிற்சி மற்றும் அபிவிருத்தி</u>**. முதலாம், இரன்டாம் மற்றும் முன்றாம் தர சிவல் ஊழியர்களுக்கு மனித வள முகாமைத்துவம், கனணி, கொள்வனவு முறைமைகள் மற்றும் அரசாங்க மொழிகள் என்பவற்றில் தேர்ச்சி பெற பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

## <u>உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளை</u>

1. உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளை இலங்கை இராணுவத்தின் பிரதான பதவி நிலை அதிகாரியின் கிளைகளில் ஒன்றாகும். இலங்கைக்குள் மற்றும் வெளியே புகையிரதம், தரைமார்க்கம், வான் மற்றும் கடல் மார்க்கமாக படைப்பிரிவினர் மற்றும் பொருட்களை போக்குவரத்துச் செய்வது இக் கிளை மூலமேயாகும். இராணுவ பாசறை படைவிடுதி, நிர்வாகம், தங்குமிட வசதிகள் வழங்குதல் அனைத்து தேவைகளையும், வாகனம் மற்றும் இலங்கை இராணுவத்தின் அனைத்து கட்டிடங்கள் அமைத்தல் போன்ற செயற்திட்டங்களை பொறியலாளர் சேவை பிரிவின் மூலம் மேற்கொள்ளுதல் உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையின் பொறுப்பாகும்.




படவுரு 12.1: உபகரண மாஸ்டர் ஜெனரால் கிளையின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு.

2. **<u>நிதியியல் விபரங்கள்.</u>** உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையின் கீழ் நிர்வகிக்கப்படும் நான்கு பணிப்பக குழுமங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகளை கட்டுப்படுத்துவதோடு 2016 ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரை சிறிய கொள்முதல் குழுக்களை நடாத்துகிறது. சிறிய கொள்முதல் குழுக்களின் நிதியியல் விபரங்கள் கீழ்வருமாறு:

| இல | பணிப்பக குழுமம் | விண்ணப்பபடிவங்கள் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| 1. | படை விடுதி வழங்கல் பணிப்பக குழுமம் | 41 | 240,902,847.80 |
| 2. | போக்குவரத்து பணிப்பக குழுமம் | 20 | 7,573,372.14 |
| 3. | வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பக குழுமம் | 69 | 10,810,415.53 |
| 4. | பொறியியற் சேவை பணிப்பக குழுமம் | 522 | 191,651,984.36 |
| | **மொத்தம்** | **652** | **450,938,619.83** |

அட்டவனை 12.1: நிதியியல் விபரங்கள்.

### <u>படை விடுதி வழங்கல் பணிப்பக குழுமம்</u>

3. இலங்கை தரைபடையினருக்கு தேவையான கட்டிடங்களை திட்டமிடல், படைவிடுதிகளை வேறாக்குதல் மற்றும் காணி, கட்டிடங்களை தம் வசப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் என்பன படை விடுதி பணிப்பக குழுமத்தின் பொறுப்பாகும்.

4. **<u>வருடத்துக்கான மீளாய்வு</u>** படை விடுதி பணிப்பக குழுமத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வு விபரங்கள் கீழ்வருமாறு:

அ. இவ்வருடம் காணிகள் மற்றும் கட்டிடங்கள் கையகப்படுத்தப்பட்டதோடு விடுவிக்கப்பட்டன.

ஆ. இவ்வருடம் பாவிக்கப்பட்ட செலவுத் தலைப்புகள் விபரம் கீழ்வருமாறு.

| இல | செலவுத் தலைப்புகள் விபரம் | வழங்கல் | உதவி வழங்கல்கள் | மொத்த வழங்கல்கள் |
|---|---|---|---|---|
| 1. | வாடகை | 424,500,000.00 | 27,400,000.00 | 451,900,000.00 |
| 2. | பாதுகாப்பு கருத்தரங்கு | 18,800,000.00 | 2,800,000.00 | 21,600,000.00 |
| 3. | வதிவிடம் மற்றும் ஏனையவை | 800,000.00 | 13,290,298.00 | 13,290,298.00 |
| 4. | வரி | 16,000,000.00 | - | 16,000,000.00 |

அட்டவனை 12.2: இவ்வருடம் பாவிக்கப்பட்ட செலவுத் தலைப்புகள் விபரம்.

5. **<u>வருடத்தில் எய்தப்பட்ட சாதனைகள்</u>.** கடந்த ஆண்டு இப்பணிப்பக குழுமத்தினால் 428.40 ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்தோடு 1714.88 ஏக்கர் தனியார் காணிகளும் 4924.88 ஏக்கர் அரசாங்க காணிகளும் விடுவிக்கப்பட்டன.

6. **<u>எதிர்கால முன்னோக்கல்கள்</u>.** இப்பணிப்பக குழுமத்தின் எதிர்கால முன்னோக்கல்கள் கீழ்வருமாறு:

அ. இலங்கை தரைப்படை கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டதால் பாரிய அளவில் காணிகள் தேவைபாடும் அதிகரித்தது. ஆதலால் பாதுகாப்பு அமைச்சு மற்றும் காணி அமைச்சின் தொடர்புடன் புதிய காணிகளை கையகப்படுத்தல் செயன்முறையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்படுகிறது.

ஆ. தற்போது நடைமுறையிலுள்ள விடுமுறை பங்களாக்களை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கும் அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் புதிய விடுமுறை பங்களாக்களை நிர்மானிக்கவும் கேட்கப்படுகிறது.

இ. மெனிங் டவுனில் குறிப்பிட்ட அளவு திருமணவானவர்கள் வதிவிடம் கானப்படுவதோடு ஆண்டுதோரும் இப்பணிப்பக குழுமமானது அதிக படியான திருமணவானவர்கள் வதிவிடத்துக்குரிய விண்ணப்ப படிவங்களை பெறுகிறது. மேலும் விண்ணப்பித்தவர்கள் 2 அல்லது 3 ஆண்டுகள் பணிமனைகளை பெறுவதற்காக காத்திருக்கும் பட்டியலில் இருக்க வேண்டிய நிலமை காணப்படுகிறது. ஆதலால் புதிய திருமணவானவர்களுக்குரிய வதிவிட கட்டிடங்களை அமைக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகிறது.

**<u>வழங்கல் மற்றும் போக்குவரத்துக் பணிப்பாளர் குழுமம்</u>**

7. முற்று முழுதாக தரைப்படையின் வழங்கல்களையும் போக்குவரத்துத் தேவைகளையும் காப்புச் சேவைகளையும் சமாதான காலத்திலும் போர்க் காலத்திலும் நிறைவேற்றுவது வழங்கல்கள் மற்றும் போக்குவரத்துப் பணிப்பாளர் குழுமத்தின் செயற்பொறுப்பாகும். அத்தகைய பணிகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு.

அ. **<u>வழங்கல்கள்</u>.** வழங்கல்கள் சேவை பிரதானமாக ஒப்பந்தங்களைக் கோரல், பங்கீட்டுணவு வகைகளைக் கொள்வனவு செய்தல், இருப்பைச் சேகரித்தல், இருப்பு முகாமை, எரிபொருள் வழங்கல், பங்கீட்டுணவு விநியோகமும் கணக்குப் பேணுதலும் ஆகிய பணிகளை உள்ளடக்கியதாகும். அதேபோல், மீளச்செலுத்தும் அடிப்படையில் ஏனைய படை, கருத்திட்டங்களுக்காக தரைப்படைத் தலைமையகத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் ஆலோசனையின் பேரில் பங்கீட்டுணவு வகைகளும் எரிபொருள்களும் வழங்கப்படுகின்றன.

ஆ. **<u>போக்குவரத்து</u>.** தரைப்படைக்கு அவசியமான முதல் வகுப்பு/ இரண்டாம் வகுப்பு போக்குவரத்து வசதிகளை வழங்குவதுடன், ஏனைய படைகள், அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் தரைப்படைத் தலைமையகத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் ஆலோசனையின் பேரில் போக்குவரத்து வசதி வழங்கப்படுகிறது. அதேபோல், பீ வாகன பராமரிப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

இ. **<u>துணைச் சேவைகள்</u>.** தரைப்படையினருக்கு வழங்கப்படும் துணைச் சேவைகள் பின்வருமாறு:

(1) ஈமக்கிரிகைளுக்கான பற்றுச்சீட்டுக்களைத் தயாரித்தலும் வழங்களும்.
(2) காய்ந்த விறகு, எரிவாயு, சமையல் எரிபொருள் வழங்குதலும் கணக்கீட்டு அலுவல்களை மேற்கொள்ளலும்.
(3) வண்ணான் சேவைகள்.
(4) பீ வாகன சாரதிகளைப் பயிற்றுவித்தல்.
(5) பீ வாகன சாரதிகளைப் பரீட்சித்தலும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதலும்.
(6) எழுதுநர்களைப் பயிற்றுவித்தல்.
(7) சமையற்கலை உதவியாளர்களைப் பயிற்றுவித்தல்.
(8) சமையற்கலை உதவியாளர்களின் ஆலோசனைகளை தரைப்படைப் பிரிவுகளுக்கு பெற்றுக்கொடுத்தல்.
(9) வெதுப்பக தேவைகளை நிறைவுசெய்தல்.

8. **<u>வருடத்தில் அடையப்பட்ட சாதனைகள்</u>.** இப்பணிப்பகத்தினால் இவ்வருடத்தில் அடையப்பட்ட சாதனைகள் விபரம் கீழ்வருமாறு.

அ. **<u>வழங்கல்கள் (துணைச் சேவைகள் உள்ளிட்ட)</u>.** வழங்கல்கள் மற்றும் போக்குவரத்துப் பணிப்பாளர் குழுமத்தின் முன் மேற்பார்வையின் கீழ் இலங்கை தரைப்படை சேவைச் சிறப்பணியின் 08 பிரிவுகளும் (நிரந்தரப் பிரிவுகள் 07, தொண்டர் பிரிவு 01) தமக்கே உரித்தான கடமைகளை ஆற்றுகின்றன. அதேபோல், அப்பிரிவுகளினால் சுமார் 150,000 (தரைப்படை முனைப்பான சேவையில் ஈடுபட்டுள்ள படைவீரர்கள் அனைவரும்) படைவீரர்களின் போசாக்குத் தேவைகள் நிறைவேற்றப்படுகிறது.

ஆ. **<u>போக்குவரத்து</u>.** முதலாம் வகுப்பு வாகனங்கள் நிர்வாகக் கடமைகளுக்காக வழங்கப்படும் அதேவேளை, இப்பணிப்பாளர் குழுமம் மேலதிக வாகனங்களை விசேட கடமைகளுக்கும் நிர்வாகக் கடமைகளுக்கும் இக்காலப்பகுதியில் வழங்கியுள்ளது. அதேபோல், இந்த இரண்டாம் வகுப்பு தேவையை நிறைவேற்றுவதற்காக 2 ஆவது வகுப்பு வாகனங்களின் குழாமிலிருந்து வாடகைக் கொடுப்பனவு அடிப்படையில் சிவில் வழங்குநர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இ. **<u>துனை சேவைகள்</u>.** இப்பணிப்பகமானது தரைப்படை சேவை படை பாடசாலை மற்றும் தரைப்படை சேவை படையணிகளின் உதவியுடன் உட்சேர்க்கப்பட்டவர்களுக்காக ஆரம்ப பயிற்சி பாடநெறிகள் அளிக்கப்பட்டன. மேலும் தரைப்படை தளபதியின் என்னத்துக்கு அமையவும் இப்பணிப்பகத்தின் மேற்பார்வையுடனும் தரைப்படை சேவை படையணி இலங்கை தரைப்படைக்கு உணவுப்பிரிவு ஒன்றையும் ஆரம்பித்தது.

9. **<u>எதிர்கால முன்னோக்கல்கள்</u>.** **பணிப்பகத்தின் எதிர்கால முன்னோக்கல்கள் பின்வருமாறு:**

அ. **<u>வழங்கல்</u>.**

(1) அவதானிக்கப்பட்ட சில இடங்களில் களஞ்சியப்படுத்தும் இட பிரதேசத்தை அதிகரிக்கவும் ஆரம்ப வசதிகளுடன் கூடியவாறு விரிவுபடுத்தல்.

(2) பக்கட் அடைக்கப்பட்ட உணவுபொருட்கள் மற்றும் உருகக்கூடிய உணவு பொருட்களை பாதுகாக்கவும் தரைப்படை பொது சேவை படையணிகளில் களஞ்சியப்படுத்தும் அறைகள் விஸ்தரிக்கப்படல்.

(3) இலங்கை தரைப்படை பொது சேவை படையணிகள் மற்றும் புவியியல் முக்கிய இடங்களில் எண்ணெய் நிரப்பும் குழாய்களை நிறுவுதல் அவசியமாகும்.

ஆ. **போக்குவரத்து**

(1) இலங்கை தரைப்படைக்கு குறிப்பிட்ட அளவு வாகனங்கள் உள்ளமையால் வாகன தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பின்வரும் எண்ணங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

(அ) நீண்ட காலமாக பாவனையற்ற நிலையிலுள்ள வாகனங்களை பழுது பார்த்து பாவனைக்குரிய முறையில் சேவைக்கு அமர்த்தல்.

(ஆ) முற்றாக பழுதடைந்த வாகனங்களை அகற்றி புதிதாக அல்லது வாடகை கொடுப்பனவு முறையில் வாகனங்களை உட்சேர்த்தல்.

(2) வாகனங்களை அகற்றும் போது, வேன், ஜூப் வண்டி, திராக்டர், டெயிலர் மோட்டார் வண்டி மற்றும் தண்ணீர் பவுசர் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கபடல் வேண்டும்.

(3) சொகுசு கார்கள், வேன், பஸ் வண்டிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களை அழைத்துசெல்ல பயன்படும் ஜூப் வண்டிகள் என்பவற்றை கொன்ட வாகன அணி ஒன்றை பராமரிக்க முன்மொழியப்பட்டோடு அதற்கான செலவுகளை முக்கிய பிரமுகர்களின் தொழில் தேவைகளுக்கு வாடகைக்கு அளிப்பதன் மூலம் குறைக்க முடியும்.

(4) பழுதடைந்த மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை அந்தந்த இடங்களுக்கு வழங்குவதன் மூலம் காலதாமதமின்றி வாகனங்களை பாவனைக்கு கொண்டுவர முடியும்.

(5) 15 வருட பாவனையில் உள்ள வாகனங்கள் திறனுடன் செயல்படாத காரணத்தால் அவற்றை முற்றாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இ. **நிதியியல் விபரங்கள்**

(1) வருடாந்த தேவைகளுக்கு ஏற்ப நிதிகளை ஒதுக்கீடு செய்தல்.

(2) விநியோகத்தர்களிடம் இருந்து தொடர்ச்சியான சேவைகளை பெற கணக்காளரிடம் செலவுத் தலைப்புக்களுக்கு அமைய உள்ள திரவ பணத்தை கொண்டு காலம் கடந்த கட்டணங்களை செலுத்தல் வேண்டும்.

| இல | ஒதுக்கீட்டு விபரம் | | 2016 ஆம் ஆண்டு மொத்த பகிர்ந்தளிப்பு (ரூபா) | 2016.11.30 ஆந் திகதி வரையான செலவின விபரம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | 222-01-2-1202 (i) | எரிபொருள் | 2,530.00 | 2,482.56 |
| 2. | 222-01-2-1202 (ii) | உராய்வு நீக்கி எண்ணெய் | 93.00 | 103.56 |
| 3. | 222-01-2-1203 (ii) | பங்கீட்டுணவு (நிரந்தர) | 9,597.00 | 8,956.70 |
| 4. | 222-01-4-1203 (ii) | பங்கீட்டுணவு (சுயேற்சை) | 2,290.00 | 1,416.96 |
| 5. | 222-01-2-1203 (iii) | மருத்துவமனை பங்கீட்டுணவு | 100.00 | 88.12 |
| 6. | 222-01-2-1401 (vi) | சிவில் கையகப்படுத்திய வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் | 1,831.64 | 2,052.39 |
| 7. | 222-01-1-1401 (vii) | இ.போ.ச. சாரதிக்கான கட்டணங்கள் | 2.63 | 1.85 |
| 8. | 222-01-2-1403 (ii) | காய்ந்த விறகு | 54.00 | 44.01 |
| 9. | 222-01-2-1403 (iii) | எரிவாயு | 713.00 | 330.90 |
| 10. | 222-01-2-1405 (iv) | வண்ணார சேவைகள் | 36.60 | 37.78 |
| 11. | 222-01-1-1405 (ix) | ஈமக்கிரியை சேவைகள் | 8.49 | 7.26 |
| 12. | 222-01-1-1401 (viii) | புகை பரிசோதனை | 3.23 | 0.96 |

அட்டவனை 12.3: நிதியியல் விபரங்கள்.

**போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பணிப்பாளர் குழுமம்**

10. இலங்கை தரைப்படையின் அனைத்து கிளைகள், பணிப்பக குழுமங்கள், ஏனைய நிறுவனங்கள் மற்றும் இடைநிலை முகாம்களான இரத்மலானை, அநுராதபுரம் மற்றும் காங்கேசன்துறை ஆகியவற்றுடன் ஒன்றினைந்து செயற்படுவதன் மூலம் படையினர் மற்றும் பொருட்கள் என்பவற்றின் போக்குவரத்துக்களை இப்பணிப்பகம் கட்டுப்படுத்துகிறது.

11. **வருடத்தில் அடையப்பட்ட சாதனைகள்.** இவ்வருடத்தில் அடையப்பட்ட சாதனைகள் விபரம் பின்வருமாறு:

அ. **புகையிரதத்தின் மூலம் பொருட்களை ஏற்றியிறக்குதல்.** பொறியியல் சேவை பணிப்பகம், போர் உபகரண பணிப்பகம், பாதுகாப்பு படை தலைமையகங்கள், டிவிசன் மற்றும் படைபிரிவு தலைமையங்கள் ஆகியவற்றுக்கு பொருட்களை ஏற்றி இறக்குவதற்காக இப்பணிப்பகமானது செலவுத் தலைப்புக்களை ஒதுக்கியது. ஒதுக்கப்பட்ட செலவுத் தொகை ரூபா 17,000,000.00 ஆவதுடன் போக்குவரத்து செலவுகளுக்காக ரூபா 13,019,337.21 செலவு செய்யப்பட்டது.

ஆ. **தொழில் ரீதியான தேவைகளுக்காக நெடுஞ்சாலைகளை பாவித்தல்.**

(1) செலவுத் தலைப்பு இலக்கம் - 222-01-1-1101 (வி)
(2) 2016 ஆண்டு செலவுத் தலைப்பு ஒதுக்கீடு - ரூபா 2,000,000.00
(3) 2016. டிசம்பர் 31 வரையான செலவு - ரூபா 1,690,000.00
(4) 2016. டிசம்பர் 31 செலவுத் தலைப்பு மீதி - ரூபா 310,000.00

இ. **கடலகப் பிரிவு.** 2016 ஆம் ஆண்டு வெளிநாட்டு பாடநெறி மற்றும் விஜயங்களுக்காக பங்குபற்றும் அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு மேலதிக பொருட்களை கடல் மார்க்கமாக அனுப்புவதற்குரிய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஈ. **வெளிநாட்டு பிரயான பிரிவு.** நிதி, திட்டமிடல் அமைச்சின் 2008.04.24 ஆந் திகதிய, PE/FS/01/XXXV ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய உத்தியோகத்தர்/ஏனைய நிலையினர்

| விபரம் | பங்குபற்றியோர் | செலவு (ரூபா) |
|---|---|---|
| பாடநெறிகள் | 1200 | 85,332,738.80 |
| விஜயங்கள் | 650 | 44,260,172.93 |

உ. **பேருந்துப் பயண ஆணைச்சீட்டு மற்றும் புகையிரதப் பயண ஆணைச்சீட்டு பிரிவு.**

(1) **சுதந்திர பேருந்துப் பயண ஆணைச்சீட்டுக்கள்.** 32 மைல்களுக்குக் குறைந்த தூரத்தில் வசிப்பவர்களுக்கு தமது வீட்டிலிருந்து சேவையிடத்துக்கு பிரயாணிக்க இலவசமாக போக்குவரத்து வசதிக்காக ரூபா 58,616,699.40 பெறுமதியான சுதந்திர பேருந்துப் பயண ஆணைச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன.

(2) **கடமைவழி பேருந்துப் பயண ஆணைச்சீட்டுக்கள்.** தரைப்படை வாகன வசதி இன்றிய சந்தர்ப்பங்களில் பல்வேறு இடங்களை நோக்கி கடமை ரீதியான பயணங்களை மேற்கொள்வதற்காக ரூபா 713,095,571.00 பெறுமதியான கடமை பேருந்து வண்டிப் பயண ஆணைச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன.

(3) **கடமைவழி புகையிரதப் பயண ஆணைச்சீட்டுக்கள்.** பல்வேறு கடமைரீதியான பயணங்களை மேற்கொள்வதற்காக ரூபா 21,134,933.28 பெறுமதியான கடமைவழி புகையிரதப் பயண ஆணைச்சீட்டுக்கள் வழங்கப்பட்டது.

(4) **விடுமுறை புகையிரதப் பயண ஆணைச்சீட்டுக்கள்.** தரைப்படையினருக்கும் சிவில் ஊழியர்களுக்கும் ரூபா 354,097,503.29 பெறுமதியான புகையிரதப் பயண ஆணைச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன.

<u>பொறியியல் சேவை பணிப்பக குழுமம்</u>

12. இலங்கை இராணுவத்தின் அனைத்து பொறியியற் சேவைகள் சம்பந்தமாக இராணுவத் தளபதிக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல். மேலும் பொறியியல் உபகரணங்கள் பற்றிய தொகை பராமரித்தல், பொறியியல் உபகரணங்களை பேணுதல், பொறியியல் சேவை படையினரின் அலகுகளின் தொகைத் தரம் மற்றும் வாங்குதல் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்துதல், பொறியியல் அலகுகளின் பிராதன கணக்கை அவதானித்தல். அனைத்து பொறியியற் சேவை சம்பந்தமாக கட்டளைகளை நிறுவுவதற்கு இராணுவத் தளபதிக்கு ஆலோசனைகளை வழங்குதல். மற்றும் பொறியியற் சேவைப் பொருட்கள் சம்பந்தமாக கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தொகை நடத்தல், சேர்த்து வைத்தல், பங்கிடுவது மற்றும் புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு திட்டமிடல். பொறியியற் சேவையின் ஒழுங்குப் படி கட்டிடங்கள் மற்றும் அதற்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் மற்றும் திட்டமிடல், அளவீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், மதீப்பீடு செய்தல், கட்டிடம் மற்றும் செயற்பாடுகளின் விபரக் குறிப்பு செயற்பாடுகளுக்கு திட்டமிடல்களை மேற்கொள்ளுதல்.

13. **<u>இவ்வருடத்தில் சாதனைகள்</u>.** 2016 ஆண்டு பொறியியல் சேவைகள் பணிப்பாளர் குழுமத்தின் மிகவும் பயனுறுதிவாய்ந்த ஆண்டாகும். 2015 ஆம் ஆண்டு கொழும்பு தேசிய நூதனசாலை, பிரதம மந்திரி மாளிகை ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பொலன்னறுவையில் பொலன்னறுவை பூங்கா, வெள்ளம் மற்றும் மன்சரிவுகளால் பாதிக்கப்படுபர்களுக்கான தங்குமிட கட்டிடம் ஆகியன நிர்மானப்பணிகளில் உள்ளன.



கந்துருவெல ம.ம.வி வகுப்பறை கட்டிடம் நிர்மாணித்தல்



கந்துருவெல நாகரா மகா வித்தியாலய பாடசாலை கட்டிடத்தை புணரமைத்தல்



நாகரா ம.வி வகுப்பறை கட்டிடம் நிர்மாணித்தல்



உனகலவெஹெர ராஜா மகா விகாரை தர்மசாலை கட்டிடத்தை நிர்மானித்தல்

14. **<u>இவ்வருடத்துக்கான மீளாய்வு</u>** பொறியியல் சேவைகள் பணிப்பக குழுமத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வு நடவடிக்கைகள் பின்வருமாறு.

அ. **<u>சிவில் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள்</u>.** இவ்வாண்டில் சிவில் திணைக்களங்களுக்கு வோட்டர்போல் நடவடிக்கைக்கும், சுத்தப்படுத்தும் நடவடிக்கைக்கும், அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்திற்கும் அவசியமான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

ஆ. தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கும் ஏனைய திட்டங்களுக்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 515.5 மில்லியன். மேலும் இவ்வருடம் பொறியியல் சேவை பணிப்பக குழுமத்தின் மேற்பார்வையின் கீழ் தேசிய அபிவிருத்தி திட்ட கட்டுமான பணிகள் தொடரப்பட்டதோடு அதற்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 6504.56 மில்லியனாகும்.

15. **<u>நிதியியல் விபரங்கள்.</u>** 2016 ஆம் ஆண்டுக்கான நிதியியல் ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகள் விபரம் கீழ்வருமாறு:

அ. 2016.10.28 அன்று வரையான மூலதன ஒதுக்கீடு மற்றும் செலவுகள்

| இல | செலவுத் தலைப்பு | ஒதுக்கீட்டு (ரூபா) | விலைகோரல் அனுமதி (ரூபா) |
|---|---|---|---|
| | **மூலதன சொத்துக்கள் புனருத்தாரணமும் மேம்படுத்தல்களும்** | | |
| 1. | கட்டிடங்களும் திட்டமிடல்களும் | 109,700,000.00 | 104,101,517.96 |
| 2. | கட்டிடங்களும் திட்டமிடல்களும் | 100,000,000.00 | 98,154,988.10 |
| 3. | இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் | 3,500,000.00 | 2,267,507.74 |
| | **மூலதன சொத்துக்களை கையகப்படுத்தல்** | | |
| 4. | கட்டிடங்களும் திட்டமிடல்களும் | 843,000,000.00 | 783,479,994.62 |
| 5. | கட்டிடங்களும் திட்டமிடல்களும் | 375,000,000.00 | 424,028,374.97 |
| | **மொத்தம்** | **1,431,200,000.00** | **1,412,032,384.39** |

அட்டவனை 12.4: மூலதன ஒதுக்கீடு மற்றும் செலவுகள்.

ஆ. 2016.10.28 அன்று வரையான மீண்டுவரும் ஒதுக்கீடு மற்றும் செலவுகள்.

| இல | செலவுத் தலைப்பு | ஒதுக்கீட்டு (ரூபா) | விலைகோரல் அனுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 1. | மின்பிறப்பாக்கி இயந்திரம், நீர்ப்பம்பிக்கான உதிரிப்பாகங்கள் | 42,000,000.00 | 43,681,771.53 |
| 2. | கட்டிடங்களும் திட்டமிடல்களும் பொருட்கள் | 536,138,242.00 | 413,874,326.82 |
| 3. | மின்பிறப்பாக்கி இயந்திரம், நீர்ப்பம்பி | 23,000,000.00 | 22,003,249.84 |
| 4. | கட்டிட பராமரிப்பு | 11,250,000.00 | 1,923,036.84 |
| 5. | மைதான பராமரிப்பு | 13,750,000.00 | 8,756,638.92 |
| 6. | மின்சாரம் | 1,794,500,000.00 | |
| 7. | நீர் | 700,000,000.00 | 2,198,461.34 |
| 8. | கழிவகற்றலும் துப்புர சேவைகள் | 5,100,000.00 | 1,747,656.40 |
| 9. | நிர்மாணமல்லாத சேவைகள் | 230,000,000.00 | 4,153,274.52 |
| | **மொத்தம்** | **3,355,738,242.00** | **498,338,416.21** |

அட்டவனை 12.5: மீண்டுவரும் ஒதுக்கீடு மற்றும் செலவுகள்.

16. **<u>பரிந்துரைகள்.</u>** பணிப்பகத்தின் வினைதிறன் மற்றும் செயற்திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகினறன.

28. பொறியியல் சேவை பணிப்பக குழுமத்தின் கீழ் பாரிய மூலதன வேலைகளை கையாளுவதற்காக மத்திய ஆலோசனை மற்றும் வடிவமைப்பு பிரிவு ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.

29. மூலப்பொருட்களை நேர்த்தியான முறையில் கையாளுவதற்கு கையிருப்பில் உள்ள மூலப்பொருட்கள் மற்றும் பொறியியல் சேவையின் வேலை முன்னேற்றங்களை கண்கானிப்பதற்காக மென் பொருளுடன் கூடிய கனணி வலையமைப்பு அமைக்கப்படல் வேண்டும்.

30. தரைப்படையினால் சுயமாக தொழில்படுவதற்கு இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும்.

31. தொழில்புரியும் படைவீரர்களின் பாதுகாப்புக்காக கட்டுமான பணித் தளங்களில் பாதுகாப்பு அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

## போர் உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளை

1. இராணுவத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை தேவையான அளவில் உரிய நேரத்தில் உரிய இடத்திற்கு உரிய தரத்துடன் உரிய முறையில் வழங்குதல் போர் உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையின் பொறுப்பாகும். இச் செயற்பாட்டின் போது போர்க் கருவிச் சேவை பணிப்பக குழுமம் மற்றும் மின்சாரம் மற்றும் எந்திர பொறியியல் சேவை பணிப்பக குழுமம் ஆகியன ஒத்துழைப்பை வழங்குகின்றன. அதேபோல் போர்கருவிச் சேவை பணிப்பக குழுமம் மற்றும் மின்சாரம் மற்றும் எந்திர பொறியியல் சேவை பணிப்பக குழுமங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் ஏனைய விடயம் சம்பந்தமான காரணங்கள் பற்றி பரிசோதனை மற்றும் முன்னேற்றத்திற்கு பிரதான நிலை தொடர்பாட்டு நிறுவனமாக செயல்படுவதும் இக் கிளையின் மூலமே ஆகும். மற்றும் திட்டமிடல் பணிப்பகத்தின் மூலமும் தொடர்பாட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.




படவுரு 13.1: போர்க் உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு.

2. **<u>வருடாந்த முன்னேற்றம்</u>.** பின்வரும் முன்னேற்றங்கள் இவ்வருடத்தில் எய்தப்பட்டன.

அ. **<u>இராணுவ கைத்தொழிற்சாலை வேலைத்திட்டம்</u>.** கைத்தொழிற் சாலை தொபகோட மற்றும் இ.மி.இ.பொ. கைத்தொழிற்சாலை கொஸ்கம போன்ற தொழிற் சாலைகள் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளும் இக் கிளையின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது.

ஆ. **<u>தேசத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம்</u>.** தேசத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டமான வாரச் சந்தை கட்டுமான பணிகளுக்கு தேவையான பொருட்கள் கொள்வனவுகள் மின்சாரம் மற்றும் இயந்திர பொறியியல் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

இ. **<u>மாலி அமைதி காக்கும் பணிகளுக்காக உபகரணங்களை கொள்வனவு செய்தல்</u>.** பாதுகாப்பு அமைச்சின் அறிவுருத்தல்களின் பேரில் அமைதி காக்கும் பணிகளுக்கான பணியமர்த்தும் படைவீரர்களுக்காக தேவையான வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் என்பன போர் உபகரண பணிப்பக குழுமத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

3. **<u>பொது விடயங்கள்</u>**

அ. போர்த் தளபாட மாஸ்டர் ஜெனரல் கிளையினால் 2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரை பின்வரும் குழுக்கள் ஒன்றுகூடின.

(1) திணைக்கள் கொள்வனவு குழு - 24.
(2) சிறு கொள்வனவு குழு - 47.

ஆ. 2016 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் தட்டுப்பாடு காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமைப்படி தேவைகள் நிறைவேற்றப்பட்டன. சில தேவைகள் குறைந்த முக்கியத்துவம் காரணமாக நீக்கப்பட்டன. எவ்வாறாயினும், சகல தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு போர்த் உபகரண மாஸ்டர் ஜெனரல் கிளையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இ. போர்த் தளபாட மாஸ்டர் ஜெனரல் கிளையும் அதன் கீழுள்ள பணிப்பாளர் குழுமங்களும் எடுத்த தீர்மானங்கள் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை மீளளிக்காமல் வேறு நிதியங்களின் ஊடாக ஈடுபடுத்தி அத்தியாவசிய பண்டத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4. **நிதியியல் விபரங்கள்.** நிதியியல் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல | செலவு | செலவுத் தகவல்கள் | வருடாந்த நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | முழுச் செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1. | 222-01-2-1302 (iii) | பராக் பராமரிப்பு | 14.450 | 16.94 |
| 2. | 222-01-2-1205(xxiv)<br>222-01-4-1205(xxiv) | சுகாதாரம் மற்றும் துப்புரவுப் பொருட்கள் | 5.00 | 14.22 |
| 3. | 222-01-2-1405(xx) | மதிப்பீட்டு வரியும் மற்றும் கலாசார கட்டண வசதிகளும் | 6.00 | 3.62 |
| 4. | 222-01-3-2103(i) அ | ஆலை மற்றும் இயந்திரங்கள் | 472.95 | 540.34 |
| 5. | 222-01-3-2103(vii) | வீரர்களுக்கான வசதிகள் | 16.72 | 17.46 |

அட்டவனை 13.1: நிதியியல் விபரங்கள்.

**போர் உபகரணச் சேவை பணிப்பக குழுமம்**

5. போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம் தரைப்படைத் தலைமையகத்தில் 1980 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. தரைப்படை நடத்தை ஒழுங்குகள் 18/94 உடன்படிக்கையின் பிரகாரம் சகல போர்த் தளபாட கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பு வகிக்க வேண்டும். இதில் உள்நாட்டு/ வெளிநாட்டு கொள்வனவுகள், துறைமுக மற்றும் நிதிப் பிரிவுகள் அடங்கும்.

6. தரைப்படைத் தலைமையகம் மீள் ஒழுங்கமைக்கப்பட்டவுடன் போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம் போர்த் தளபாட மாஸ்டர் ஜெனரல் கிளையின் கீழ் கொண்டுவரப்பட்டது. 17 உத்தியோகத்தர்களையும் 217 ஏனைய பதவிப் படித்தரங்களையும் உள்ளடக்கிய ஒரு கூட்டுத்தாபனம் அனுமதிக்கப்பட்டது. திட்டமிடல் பிரிவு, கொள்வனவுப் பிரிவு, முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு, நிறைவேற்றுப் பிரிவு, துறைமுகப் பிரிவு, நிதிப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு என்பவற்றை உள்ளடக்கி புதியதொரு கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தப்பட்டது.

7. **வருடாந்த முன்னேற்றம்.** இவ்வருடத்தில் எய்தப்பட்ட முன்னேற்றங்கள் கீழ்வருமாறு

அ. 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதி தொம்பகொட போர்க் உபகரண கைத்தொழிற்சாலை தரைப்படை தளபதியினால் திறந்து வைக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு போர்க் கருவி கைத்தொழிற்சாலை ரூபா 242,125,316.00 சந்தை பெறுமதியான பொருட்களை உற்பத்தி செய்ததோடு அவற்றின் உற்பத்தி செலவு ரூபா 114,278,024.41 செலவாகியது. அதன் மூலம் ரூபா 127,914,611.59 தரைப்படையினால் சேமிக்கப்பட்டது.

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது







ஆ. **<u>இல்லங்களை அளவை செய்தல் முறையை அறிமுகப்படுத்தல்</u>**. படை இல்லங்களை அளவை செய்யும் புதிய முறை ஒன்று முன்மொழியப்பட்டது. இதன் மூலம் இராணுவத்தின் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் தேவையான இல்ல அளவை பொருட்களின் அளவு எடுக்கப்பட்டு தரைப்படைக்கு தேவையான மொத்த வருடாந்த எதிர்வுகூறல்கள் கணிக்கப்பட்டு உன்மை தன்மை மிக்க கொள்வனவு திட்டம் தயாரிக்கப்படுகிறது.

இ. **<u>தோட்டாக்களை மீள் நிரப்புதல்</u>**. மத்திய ஆயுத மற்றும் தோட்டாக்கள் களஞ்சியத்தில் தோட்டாக்கள் நிரப்புதல் வேலைத்திட்டம் மூலம் போட்டிகளில் உபயோகப்படுத்திய தோட்டாக்கள் மற்றும் துப்பாக்கி ஆணிவகுப்புகளின் போது பாவினை செய்ய தோட்டாக்களை பல்வேறுவிதமான சிறு ஆயுதங்களை மீண்டும் நிரப்புதல் மூலம், தோட்டாக்களை கொள்வனவு செய்ய உபயோகப்படுத்தும் பொதுமக்கள் நிதி பாரியளவில் மீதப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

ஈ. **<u>துணித் தேவைகளின் வழங்கலைத் திட்டமிடுதல்</u>.**

(1) இப்பனிப்பகமானது 2016 ஆம் ஆண்டு தொடக்கம் படையினரின் துணி தேவைகளுக்காக அடுத்த ஆண்டுக்காக ஒரு மிகை இருப்பு தொகையை பேணி வருகிறது. இவ்வருடத்துக்குரிய வருடாந்த சீருடை கொள்வனவு மற்றும் ஏனைய துணி கொள்வனவுகள் 90 % நிறைவு பெற்றுள்ளன. தரைப்படை தளபதியின் அறிவுருத்தல்களுக்கு அமைய 2016 ஆம் ஆண்டுக்கான அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கான வருடான வழங்கல்கள் 2016 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முதல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(2) அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு உடற் பயிற்சிகளுக்கு புதிதாக காற்சட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(3) அதிகாரிகளுக்கு உடற் பயிற்சிகளுக்கு தரமான காலனி 2016 ஆம் ஆண்டு வழங்கப்பட இருக்கிறது. மேலும் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகாரிகளுக்காக டீ சேட் தன்மை அபிவிருத்தி செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளது.

உ. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு மேலாக தரைப்படையின் தொழில்நுட்ப நடவடிக்கைகளை அதிகரிக்கவும் போர் உபகரண வழங்கல் முறையை வினை திறனுள்ள முறையில் கையாள்வதற்கும் உற்பத்தியை அதிகரிக்கவும் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

8. **<u>போர்க் கருவி பரிசோதனை மற்றும் தொகை கணக்கிடுதல்</u>**

அ. பொறுப்புக் கூறவேண்டிய நபர்கள் மற்றும் குறித்த களஞ்சியசாலை காப்பாளர்களினால் அனைத்து பாதுகாப்பு படைப்பிரிவு தலைமையகங்களில், படைப்பிரிவுகளில், போர்த்தளபாடங்கள் அலகுகள் உட்பட அனைத்து அலகுகள் மற்றும் தரைப்படை கூட்டுத்தாபனங்களின் கொண்டு நடாத்தப்படுகின்ற பேரேடுகளில், சரக்கு ஆவணங்களின் மற்றும் கணக்கு செயல்முறைகள் மதிப்பாய்விற்குட்படுத்துதல் மற்றும் இருப்பு கணக்கெடுப்பு வருட ஆரம்பத்திலே மேற்கொள்ளப்பட்டது. இருப்பு கணக்கெடுப்பு மற்றும் போர்த்தளபாட விசாரணைக் குழு இருப்புகளை கணக்கெடுக்கும் தொழிற்பாடுகளில் சில குறைப்பாடுகளை அவதானித்ததுடன் அக்குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அக்குறித்த இடங்களில் கவனம் செலுத்தப்பட்டது. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களின் தேராய்வுக்கு முன்னர் அனைத்து படையணி நிலையங்களில் ஆரம்ப சோதனை நடாத்தப்படுவதுடன் அனைத்து பொறுப்பு கூற வேண்டிய நபர்கள் தரைப்படைக் கட்டளைகள் 9/50 இற்கு மற்றும் ஏனைய தரைப்படை கட்டளைகள் மற்றும் மதியுரைகளுக்கு ஏற்றவாறு திருத்தமான கணக்குகள் மற்றும் சரக்கிருப்புகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான மதியுரைகள் மற்றும் அறிவு வழங்கப்பட்டது.

ஆ. முன்வரிசை போர்த்தளவாட களஞ்சியசாலையைத் தவிர்ந்த அனைத்து போர்த்தளவாட இடங்களில் இருப்பு கணக்கெடுப்பு பூர்த்தி செய்வதற்கு இந்த பணிப்பாளர் குழுமத்தின் இருப்பு கணக்கெடுப்பு குழுவுக்கு முடியுமாக இருந்தது. அதன் பெறுபேறாக கண்கருகள் பல புதுப்படுத்துவதற்கு முடியுமாக இருந்தது. மேலும் சொத்துக்கள் முகாமைத்துவ பணிப்பாளர் குழுமத்தின் உதவியுடன் ஒவ்வொரு இடத்திற்கு கொண்டு செல்ல முடியாத வாகன மேலதிக உதிரிப்பாகங்கள் மற்றும் களஞ்சியசாலைகளில் பொதுவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இ. படையணிகளின் தொழில்நுட்ப செயற்பாடுகளில் விளைவு பெருக்கத்தை அதிகரிப்பதற்கு மற்றும் வினைத்திறனை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

(1) தரைப்படைக் கட்டளைகள் 9/50இணங்க அனைத்து படையணி களஞ்சியசாலைகளில் அலுவலக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களின் அறிவு விருத்தி செய்ய பாதுகாப்புச் படை தலைமையகங்கள் மட்டத்தில் பயிற்சி நடவடிக்கைகள் போர்த்தளவாட பிரிவினால் வழிநடத்தப்பட்டது.

(2) மத்திய ஆயத களஞ்சியசாலையால் ஆயதங்கள்/ தோட்டாக்கள் மூலம் பாதுகாத்துக் கொள்ளும் மற்றும் ஆயதங்கள்/ தோட்டாக்களை பொறுப்பேற்கும்போது/ ஒப்படைக்கும்போது பின்பற்றப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் பாதுகாப்பு பிரிவு தலைமையக மட்டத்தில் மேற்கொள்ளல்.

(3) மத்திய ஆயத களஞ்சியசாலையால் ஆயதங்கள்/ தோட்டாக்களை பாதுகாத்தல் மற்றும் கையாளுதல் சம்பந்தமான விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டு வருகின்றன.

அ. **<u>தோட்டாக்களை பரீட்சிக்கும் தொழிற்பாடு</u>.** 2016 ஆம் ஆண்டில் தோட்டா தேராய்வு தொழிற்பாடு துரிதப்படுத்தவுடன் பாவனைக்கு ஒவ்வாத தோட்டாக்கள் மற்றும் வெடிபொருள்கள் பெரும் எண்ணிக்கையானவை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின்கீழ் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து, அனுமதிக்கப்பட்ட குழும அறிக்கைகளுக்கமைய அழித்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையானது அனைத்து பாதுகாப்பு படை தலைமையக பிரதேசங்களிலும் நடாத்தப்பட்டது.

ஆ. **<u>போர் உபகரண தளபாடங்களின் விபர குறிப்புக்கள்</u>.** கடந்த வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட விபரக் குறிப்பு புத்தகம் புதுப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் அதனை ஏனைய போர்த்தளவாட படைவகுப்பிற்கு அறிமுகப்படுத்துவதனூடாக இலங்கை தரைப்படைக்கு தரத்தில் உயர் பண்டங்களை கொள்வனவு செய்வதற்கு மற்றும் தாமத்தை குறைப்பதற்கு கொள்முதல் தொழிற்பாடுகளை துரிதப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இ. **<u>போர்த்தளவாடங்களை கணக்கெடுக்கும் ஆவணங்கள் கணனிமயப்படுத்தல்</u>.** மத்திய ஆயத களஞ்சியசாலையினால் இதற்கு முன்னர் வருடத்தில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அத்துடன் சிருரக ஆயுதங்களுக்காக விபரங்களை உட்சேர்த்தல் பொறிமுறை இந்த வருடத்தில் முற்றாக பூர்த்தி செய்வதற்கு முடியுமாக இருந்தது. எதிர்காலத்தில் மத்திய ஆயத களஞ்சியசாலைக்குச் சொந்தமான அனைத்து ஆயுதங்களும் கணினிமயப்படுத்துவதற்கு இயலுமையாக இருந்ததனால் இலங்கை தரைப்படைக்குச் சொந்தமான மொத்த ஆயுதங்களின் அளவு சரியாக கணக்கில் வைப்பதற்கு முடியுமாகவுள்ளது.

ஈ. **<u>கொள்முதல் செயற்பாடுகளின் போது கொள்வனவாளர்களின் அதிகாரத்தை பிரயோகித்தல்</u>.** கொள்முதல் 18/11 விதந்துரையின் பிரகாரம் இலங்கை தரைப்படை மொத்தமாக ரூபா 23,448,261.31 ஆன தொகை திருத்தமான விலைக்கூறுநர்களிடமிருந்து மற்றும் ரூபா 4,771,162.70 ஆன நிதி செயல்முறைகள் தொடர்பாக பொறுப்பளிக்க முடியாத சேவை பெருநர்களிடமிருந்து அறவிடப்பட்டன. தாமதக் கட்டணமாக ரூபா 18,677,098.61 ஆன தொகை அரசிறைக்கு பற்று வைக்கப்பட்டது. இந்நடவடிக்கை காரணமாக கடந்த ஆண்டை பார்க்க பாரிய முன்னேற்றம் காட்டப்பட்டது.

| இல | பிரிவு | விலைக்கேள்வி காப்புப் பிணைமுறித் தொகை (ரூபா) | தாமதக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| 1. | குழு I | 880,941.00 | 5,504,283.31 |
| 2. | குழு II | 211,782.00 | 3,033,457.47 |
| 3. | குழு III | 446,000.00 | 339,800.00 |
| 4. | குழு IV | 1,225,750.70 | 4,735,544.37 |
| 5. | குழு V | 57,200.00 | 2,688,704.50 |
| 6. | குழுVI | 1,946,489.00 | 2,375,308.96 |
| | **மொத்தம்** | **4,771,162.70** | **18,677,098.61** |
| | **முழு மொத்தம்** | | **23,448,261.31** |

அட்டவனை 13.2: கொள்முதல் செயற்பாடுகளின் போது கொள்வனவாளர்களின் அதிகாரத்தை பிரயோகித்தல் முறை.

9. **நிதியியல் விபரங்கள்.** வருடாந்த ஒதுக்கீட்டு முகாமைத்துவ நடவடிக்கை கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள்.

அ. போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமத்தினால் நடவடிக்கைக் கட்டுப்பாடு/ கொள்வனவுகளை மேற்கொள்ளும் செலவுத் தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட வருடாந்த நிதி ஒதுக்கீடு மற்றும் அதற்குரிய செலவு விபரம் என்பன கீழ் தரப்பட்டுள்ளன.

| விபரம் | வருடாந்த ஒதுக்கீடு (ரூபா) | மொத்த செலவு (ரூபா) | பிணைப்புகள் (ரூபா) | மொத்த செலவு மற்றும் பிணைகள் (ரூபா) | சதவீதம் % |
|---|---|---|---|---|---|
| மீண்டு வருபவை | 6,421,253,191.66 | 5,707,297,838.91 | 2,122,215,076.06 | 7,829,512,914.97 | 225.85 |
| மூலதனம் | 5,098,177,520.89 | 1,517,469,826.21 | 1,646,627,992.06 | 3,164,097,818.27 | 62.06 |
| **முழு மொத்தம்** | **11,519,430,712.55** | **7,224,767,665.12** | **3,768,843,068.12** | **10,993,610,733.24** | **95.44** |

அட்டவனை 13.3: ஒதுக்கப்பட்ட வருடாந்த நிதி.

ஆ. 2016 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் சிக்கனமான முறையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் நிதிப் பணிப்பாளர் குழுமத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

10. **பண்டத் தீர்ப்பனவு.** போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமத்தின் கீழ் இடம்பெறும் பணிகளிடையே வான் மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் தபால் மார்க்கமாகவும் கிடைக்கின்ற பண்டங்கள், தாமதம் ஏற்படாத வகையில் தீர்ப்பனவு செய்து குறித்த இடங்களில் ஒப்படைக்கப்படுகிறது. இதனுடன் இணைப்பாக 2013 ஆம் ஆண்டிற்குரிய வான் மார்க்கவும் கடல் மார்க்கமாகவும் தீர்ப்பனவு செய்யப்பட்ட பண்டங்கள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது. அதன்படி, கடல் மார்க்கமாகக் கிடைக்கப்பெற்றுள்ள பண்டங்களின் மொத்த நிறை 408,156.60 கி.கி. ஆகவும் வான் மார்க்கமாகக் கிடைக்கப்பெற்றுள்ள பண்டங்களின் மொத்த நிறை 5201 கி.கி. ஆகவும் காணப்படுகிறது.

11. **எதிர்கால முன்னோக்கல்கள்.** இப்பணிப்பகத்தின் எதிர்கால முன்னோக்கல்கள் பின்வருமாறு:

அ. 2017 ஆம் ஆண்டு நடைமுறைபடுத்தப்படவுள்ள திட்டங்கள்.

(1) காலுறை உற்பத்தி பிரிவு.
(2) டயர் மீள் உற்பத்தி பிரிவு.
(3) எல்ஈடி மிக்கலம் உற்பத்தி பிரிவு.
(4) சன்னங்கள் பெட்டி தயாரிக்கும் பிரிவு.

ஆ. **கட்டுப்பாடுகள்.**

(1) தேவையான நேரங்களுக்கு சீரான மின் வழங்கலின்மை காரணமாக மின்பிறப்பாக்கியின் தேவை அவசியமாவதுடன் தேவைகள் தரைப்படைக்கு முன்மொழியப்பட்டுள்ளன.

(2) மாசுக்கள் அடங்கிய காற்று உற்பத்தி பிரிவுகளில் இருப்பதால் எடல நோய்கள் ஏற்படகூடிய வாய்ப்புகள் உள்ளது. ஆதலால் இக்காற்றை வெளியேற்றுவதற்கு 16 காற்று வெளியேற்றும் விசிறிகள் அவசியமாகவுள்ளது. ஏற்கனவே 08 காற்று வெளியேற்றும் விசிறிகள் பெறபட்டதுடன் ஏனையவை இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

(3) நிபுனத்துவம் மிக்க ஊழியர்களின் பற்றாக்குறை.

12. **பரிந்துரைகள்.** பணிப்பகத்தின் வினைதிறன் மற்றும் செயற்திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகினறன.

அ. இலங்கை தரைப்படை போர் உபகரண படைபிரிவின் தொழில்நுட்ப செயற்பாடுகளை திறனுடைய முறையில் பணிபுரிவதற்கு அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினரின் வெற்றிடங்கள் நிரப்பப்படல் அவசியமென பரிந்துரை செய்யப்படுகிறது.

ஆ. ராகமை போர் உபகரண களஞ்சிய கட்டுமான பணி மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நிதிகளை குறைவின்றி ஒதுக்கீடு செய்தல்.

இ. இலங்கையில் அமைந்துள்ள அனைத்து தரைப்படை போர் உபகரண படையணிகளுக்கும் துணி வகைகளை காலதாமதமின்றி வழங்குவதற்காக முதன்மை போர் உபகரன பண்டகசாலைக்கு 40 அடி நீளமான கண்டைனர் வானகம் இரண்டும் வேயாங்கொட துணி களஞ்சியசாலைக்கு 40 அடி நீளமான கண்டைனர் வானகம் ஒன்றும் அவசியம் என பரிந்துரை செய்யப்படுகிறது.

ஈ. ராகமை முதன்மை போர் உபகரன பண்டகசாலை மற்றும் வேயாங்கொட துணி களஞ்சியசாலைகளுக்கு ஆய்வு மற்றும் தர உத்தரவாத பிரிவுகள் அமைப்பதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

உ. தற்போது இலங்கையில் பாவிக்ககூடிய ஆயதங்கள் மற்றும் சன்னங்கள் அதிக அளவில் காணப்படுவதால் பாதுகாப்பு தலைமையங்களுக்கு உரிய பிரதேசங்களில் உரிய இடங்களில் வெடிபொருள் மற்றும் ஆயுத கிடங்குகள் அமைக்கும் கட்டுமான பணிகளை துரிதபடுத்த பரிந்துரை செய்யப்படுகிறது.

**மின்சாரம் மற்றும் எந்திர பொறியியலாளர் பணிப்பக குழுமம்**

13. இலங்கை மின்சாரம் மற்றும் எந்திர பொறியியலாளர் படைப் பிரிவினரால் இராணுவத்திற்கு சொந்தமான ஆயுத வாகனம், அனைத்து வாகனம், ஆயுத கருவி, ஆயுதம் மற்றும் வீட்டு உபகரணங்களை மற்றும் இலக்ரோனிக் உபகரணங்கள், கண் உபகரணங்கள், மற்றும் உயிரியில் மருத்துவ உபகனரங்கள் நடைமுறைபடுத்துவது மற்றும் புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு மாறாக கட்டில், அலுமாரி போன்றவை இராணுவத்தினராலே தயாரிக்கப்படுவதோடு தேசத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் சந்தை மற்றும் பஸ் தரப்பிடம் போன்ற கட்டிட வேலைத்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

14. **வருடத்தில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள்.** 2016 ஆம் ஆண்டு இலங்கை மின்சாரம் மற்றும் எந்திரங்கள் பணிப்பக குழுமத்தினால் நிறைவேற்றப்பட்ட இலக்குகள் பின்வருமாறு:

அ. புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகளை சரியாக செய்து கொள்ளப்பட்டன.

ஆ. புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகம் செய்யப்பட்டன.

இ. குறிப்புக்கள் புதுப்பிக்கப்பட்டன.

ஈ. நிதி முகாமைத்துத்திற்கு ஏற்ப 30 நாட்களுக்குள் 98 சதவீதமும் பணச் சீட்டு பத்திரங்களின் சதவீதங்களை அதிகமாக்குதல். வழங்கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கீட்டு சதவீதத்தின் 90 சதவீதமான அளவு விலைத்துண்டுகளை நிவர்த்தி செய்யப்பட்டன.

உ. கடந்த வருடம் 15 அதிகாரிகள் மற்றும் 119 ஏனைய நிலையினர் புதிதாக இலங்கை மின்சாரம் மற்றும் இயந்திர பொறியியலாளர் படைப் பிரிவிற்கு உட்சேர்க்கப்பட்டனர்.

ஊ. அதிக அளவிலான அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டன.

எ. தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

ஏ. களனியில் புதிய சுதந்திர வேலை பட்டறை ஒன்று சுதந்திர போக்குவரத்து படையணிக்கு கீழ் உருவாக்கப்பபட்டது.

ஒ. ஐக்கிய நாட்டு அமைதி காக்கும் பணிகளுக்காக வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் உற்பத்தி மற்றும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

15. **<u>பிரதான செயற்பாடுகளும் அதன் முன்னேற்றங்களும்.</u>** இப்பணிப்பகத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. **<u>வாகன நடுத்தர திருத்த நடைமுறையின் முன்னேற்றங்கள்</u>**. அகில இலங்கை ரீதியாக அனைத்து மின் மற்றும் எந்திர பொறியியல் வேலைதளங்களால் 11,287 வாகனங்களுக்குரிய நடுதர திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ. **<u>ஆரம்ப திருத்த நடைமுறையின் முன்னேற்றங்கள்</u>**. அகில இலங்கை ரீதியாக அனைத்து மின் மற்றும் இயந்திர பொறியியல் முதன்மை வேலைதளங்களால் 162 வாகனங்களுக்குரிய ஆரம்ப திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இ. **<u>நிதியியல் முன்னேற்றங்கள்.</u>** 2016 ஆம் ஆண்டு மின் மற்றும் எந்திர பொறியியல் படைபிரிவிற்கு ரூபா 1059.93 மில்லியன் ஒதுக்கப்பட்டதோடு மொத்த செலவு ரூபா 1049.19 மில்லியன் ஆகும்.

| இல | செலவுத் தலைப்பு | வருடாந்த நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | உறுதிப்பட்ட பணிகள் (ரூபா மில்லியன்) | முழுச் செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1. | மீண்டுவருபவை | 748.96 | 118.27 | 782.12 |
| 2. | மூலதனம் | 310.97 | 15.48 | 267.07 |
| | **மொத்தம்** | **1059.93** | **133.75** | **1049.19** |

அட்டவனை 13.4: நிதியியல் முன்னேற்றங்கள்

ஈ. **<u>நடைமுறைப்படுத்தப்பட்ட வேலை திட்டங்கள்</u>**

(1) உடவலவை மின் மற்றும் எந்திர பொறியியல் படைபிரிவின் முதன்மை வேலை பட்டறையில் முடிக்கப்பட்ட வேலைதிட்டங்கள்.

(அ) யுனிகோன் வாகனங்களுக்கு வாகனங்களை ஏற்றி இறக்கி சீர்படுத்தக்கூடிய அசையும் சரிவு மேடை வடிவமைக்கப்பட்டது.

(ஆ) மோட்டார் வண்டிகளை தாங்கி செல்லக்கூடிய வாகனம் வடிவமைக்கப்பட்டது.

(2) கடுபெத்தை மின் மற்றும் எந்திர பொறியியல் படைபிரிவின் முதன்மை வேலை பட்டறையில் முடிக்கப்பட்ட வேலைதிட்டங்கள்.

(அ) மாலி அமைதி காக்கும் பணிக்காக யுனிகோன் நோயாளர் வண்டி வடிவமைக்கப்பட்டது.

(ஆ) மாலி அமைதி காக்கும் பணிக்காக அசையக்கூடிய சமயலறை வடிவமைக்கப்பட்டது.

உ. **<u>தேசிய அபிவிருத்தி திட்டங்கள்.</u>** பாதுகாப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்தி சங்கம், கொழும்பு மாநகர சபை ஆகியவற்றினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்காக கீழ் குறிப்பிட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(1) **<u>முடிக்கப்பட்டுள்ள திட்டங்கள்</u>.**

(அ) கொழும்பு நகரத்தில் 34 பஸ் வண்டி தரிப்பிடங்கள் கட்டுமான பணிகள் மற்றும் நிறுவுதல்.

(ஆ) பூங்கா வீதி விற்பனை கூடாரங்ளின் கட்டுமாண பணிகள்.

(இ) இரத்மலானை தனியார் நிறுவனத்துக்கு 50 இரண்டு தட்டு இரட்டை படுக்கைகள் தயாரித்தல்.

(ஈ) தியட உயன சிறுவர் பூங்கா கூரை கட்டுமாண பணிகள்.

(உ) தியட உயனவில் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களுக்கு வர்ணம் பூசல் மற்றும் செங்குத்து விசிறிகள் பொறுத்துதல்.

(ஊ) கடவத்த சிறுவர் பூங்கா கூரை கட்டுமாண பணிகள்.

(2) **<u>நடைமுறையிலுள்ள திட்டங்கள்</u>.**

(அ) வலசமுள்ள வராந்த சந்தை கட்டுமாண பணிகள்.

16. **<u>பகுப்பாய்வு மற்றும் செயற்பாடுகளின் மதிப்பீடு</u>.** மின்சாரம் மற்றும் எந்திர பொறியியலாளர் பிரிவின் மூலம் கீழ்க் காணப்படும் பிரதான செயற்பாடுகளை வரையறை செய்தல் மற்றும் விமர்சனம் செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அ. இப் படைப்பிரிவினரால் இவ் ஆண்டு கடந்த ஆண்டை விட அதிகமான புதுப்பித்தல் மற்றும் ஆரம்ப புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல் அதிகமான அளவில் முதன்மை புதுப்பித்தல், முதன்மை வேலைத் தளங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் மிகவும் திறமையான மற்றும் நிவர்த்தியான முறையில் இப்படைப்பிரிவினர் இலங்கை இராணுவத்திக்கு சேவையாற்றுகின்றார்கள்.

ஆ. இச் சேவை ஸ்தானத்தின் மூலம் மிகவும் வெற்றிகரமான மற்றும் முறையான வாகன சேவையைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் வாகனத்தை நடைமுறைபடுத்தல் மற்றும் புதுப்பித்தல் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் ஆயுட் காலத்தை நீடித்துக் கொள்ள முடியும். அதிகளவிலான புதுப்பித்தல் வேலைப்பாடுகளுக்கான செலவுத் தொகையை கட்டுப்படுத்த முடிகின்றது.

இ. இப்பணிப்பக குழுமத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையை சரியான முகாமைத்துவத்துடன் பயன்படுத்துதல் மற்றும் கால அட்டவணைக்கு ஏற்ப நிதியை பயன்படுத்துவதன் மூலம் மிஎபொபபி தொழிற் சேவையை திறமையான முறையில் பெற்றுக் கொள்ள முடிவதோடு செலவு செய்த பணத் தொகையை குறைத்துக் கொள்வதற்கும் முடியுமாகவுள்ளது. மேலும் 2016 ஆம் ஆண்டு வருட இறுதிக்குள் 90 % கொடுப்பனவுகளை செலுத்தப்பட்டுள்ளன.

ஈ. தேவையான மூலபொருட்களை அவசியமான நேரத்திற்கு வழங்கல் பயிற்சிகள் மற்றும் கண்கானிப்பு ஆகியவற்றின் மூலம் திறன் அபிவிருத்தி நடவடிக்கைளை ஏற்படுத்த முடியும்.

உ. இராணுவத்தின் தேவைக்காக மிஎபொ படையினரால் பல்வேறு விதமான வேலைத்திட்டங்களை வெற்றியாகவும் மற்றும் எங்களுடைய தொழிற்சேவைக்கு மாறாக தேசத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு இப்படைப்பிரிவினா் பாரிய ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள்.

ஊ. மிஎபொறி. கைத்தொழிற்சாலை மூலம் அதிகமானளவு உலோகத்தினால் ஆன தயாரிப்புக்களை தயாரிப்பதும் அதன் மூலம் இலங்கை இராணுவத்தினரின் தேவையை நிறைவேற்றுவது, மற்றும் பணத்தை மீதப்படுத்திக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

எ. தொழில் அறிவு, ஆற்றல் மற்றும் ஆலோசனைகளை விருத்தி செய்து கொள்வதற்காக படைப்பிரிவினரின் தேவைக்கு ஏற்ப அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களை பயிற்றுவித்தல்.

ஏ. விசேடமாக ஊனமுற்ற படைவீரர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறுபட்ட நலன்புரி நடவடிக்கை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## பணிப்பாளர் நாயகம் காலாட்படை அலுவலகம்

1. இவ் அலுவலகத்திக்கான நடைமுறைக் காரணங்கள், படையணி பயிற்சிகள், மற்றும் விசேட காலாட் படை செயற்பாட்டு பயிற்சிகள் கண்காணிப்பது மற்றும் தொடர்புபடுத்துவது இவ் அலுவலகத்தின் முக்கிய பொறுப்பாகும். மேலும் காலாட் படையணிகளின் முதன்மை தேவையாவது யுத்தம் மற்றும் நிர்வாக உபகரண புள்ளி விபரக் கோவையை நடைமுறைபடுத்தல் மற்றும் அது சம்பந்தமான கவனிப்புகளுக்கு எடுக்க வேண்டிய தீர்மானங்கள் பற்றி இராணுவ தலைமையகத்திற்கு அறியப்படுத்தி, மத்தியஸ்தான சேனைத் தளபதிகளுடன் காலாட் படைகளுக்குரிய தேவைகளை கலந்துரையாடி பொதுத் தீர்மானம் எடுத்து வெளியிடப்படுகின்றது. மேலும் படையணி பயிற்சி பாடசாலை மற்றும் தரைப்படையின் ஏனைய நிறுவனங்களில் நடைபெறுகின்ற பாடநெறிகளை கண்கானித்தல், வெளியக பயிற்சிகளை ஒன்றினைத்தல் ஆகியன அப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2. **<u>இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்ட கொண்ட இலக்குகள்.</u>** இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. **<u>பயிற்சிகள்.</u>** 2016 ஆம் ஆண்டுக்கான பயிற்சி அட்டவனையின் பிரகாரம் படையணி பாடசாலைகளில் படையணி பயிற்சிகள் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. படையணி பயிற்சிகள் மற்றும் விசேட காலாட்படை பாடநெறிகளை மேற்கொள்வதன் மூலம் சிப்பாய்களின் ஆற்றல், அறிவு, திறமை, மனத்திடம், சமூக உணர்வு, குழுவாக வேலை செய்யும் ஆற்றல் மற்றும் ஒழுக்கவிதிகள், என்பன விருத்தி செய்யப்படுகின்றன. மேலும் விசேட காலாட்படை நடவடிக்கை பயிற்சிகள் காலாற்படை நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கு உதவுகிறது.

ஆ. **<u>படையணி பயிற்சி.</u>** இவ் ஆண்டில் படையணி பயிற்சிகள் 63 நடைபெற்றதோடு அதில் 751 அதிகாரிகள் மற்றும் 9315 சிப்பாய்கள் பயிற்சி பெற்றார்கள்.




இ. **<u>விசேட காலாட்படை செயற்பாட்டுக்குழு.</u>** பயிற்சி நெறிகள் இரண்டு இவ் ஆண்டில் விசேட காலாட்படை குழுவினரால் முழுமையாக பெற்றுக் கொண்டதோடு 51 அதிகாரிகளும், 852 சிப்பாய்களும் இதற்கு தகமை பெற்றார்கள்.



3. **<u>ஏனைய விபரங்கள்.</u>** படையணி பயிற்சிகள் மற்றும் விசேட காலாட்படை செயற்பாட்டு குழு பயிற்சிகளுக்கு மேலாக தரைப்படை தளபதியின் அனுமதிக்கு இனங்க இப்பணிப்பக குழுமத்தினால் பல்வேறு ஆயுத கண்காட்சிகளை கல்வி மற்றும் வனிக கண்காட்சிகளின் போது காட்சிப்படுத்தியது. பணிப்பாளர் நாயகம் காலாட்படை அலுவகத்தினால் இலங்கை இந்திய கூட்டு பயிற்சியான மித்ர சக்தி 2016 இலங்கை சிங்ஹ படைபிரிவு தலைமையகத்தில் வெற்றிகரமாக நடாத்தியது. இவ் வெளியக பயிற்சிக்காக ரூபா 11,880,729.00 ஒதுக்கப்பட்டது.





4. **<u>பரிந்துரைகள்.</u>** பணிப்பாளர் நாயகம் காலாட்படை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் பின்வருமாறு:

அ. மூன்று வருடத்துக்கு ஒரு முறை காலாற்படை செயல்முறைகள், அனைத்து படையணிகளுக்கும் பயிற்றுவித்தல் வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகிறது.

ஆ. படையணி பயிற்சி பாடசாலை மற்றும் தரைப்படை பயிற்சி பாடசாலை ஆகியன சுயேட்சையாக இயங்கக்கூடிய வகையில் சூழலை உருவாக்கல்.

இ. படையணி பயிற்சி பாடசாலைக்குரிய கட்டமைப்பு மற்றும் உபகரண அளவு என்பவற்றை பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

ஈ. படையணி பயிற்சி பாடசாலைக்குரிய கட்டமைப்பு வசதிகளில் பற்றாக்குறை நிலவுவதால் அவற்றை முலதன வேலைகள் மூலம் நிவர்த்தி செய்வதற்குரிய வழிமுறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

உ. காலாட்படை அதிகாரிகள் அனைவருக்கும் பாதுகாப்பு சேவைகள் கட்டளைகள் மற்றும் பதவிநிலை பாடநெறியை பயில்வதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகிறது.

ஊ. ஐக்கிய நாட்டு பதவிநிலை கடமைகளுக்காக காலாட்படை பிரிவினருக்கு அதிக வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகிறது.

எ. காலாட்படை படைபிரிவினரால் நீண்ட காலமாக தனிப்பட்ட ஆயுதங்கள் பாவிக்கப்படுவதால் அவை நல்ல நிலையில் இல்லை. ஆகையால் அவற்றை திருத்தும் வரை புது ஆயுதங்களை வழங்கல் அல்லது புதிய துப்பாக்கி வகையை அறிமுகபடுத்தி தற்போது பாவனையில் உள்ள துப்பாக்கிகளை அகற்றுமாறு பரிந்துரை செய்யப்படுகிறது.

## லொஜிஸ்டிக் கட்டளைகள் தலைமையகம்

1. லொஜிஸ்டிக் கட்டளைகள் தலைமையகமானது தரைப்படை தலைமையகத்தின் கீழ் இயங்குவதோடு அதன் பொறுப்புக்கள் மற்றும் கடைமைகளை பொறுத்த வரையில் தரைப்படை தளபதிக்கு பொறுப்பானதாகும். லொஜிஸ்டிக் கட்டளைகள் தலைமையகமானது கொஸ்கம, நாலாவையில் அமைந்துள்ளது. லொஜிஸ்டிக் கட்டளைகள் தலைமையகமானது படைபிரிவு தலைமையகங்களுடாக சேவை படையணிகளின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது.

2. **இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள்.** லொஜிஸ்டிக் கட்டளைகள் தலைமையகத்தினால் அடையப்பட்ட இலக்குகள் விபரம் கீழ்வருமாறு:

அ. **நிர்வாகம்.** முதலாம் மற்றும் இரண்டாம் காலான்றுக்குரிய தொழில் பரீட்சைகள் மற்றும் படைபிரிவுகளுக்கான விஜயங்கள் பிரதான பதவிநிலை அதிகாரியின் நிர்வாக ஆண்டுக்கு முன்னதாக முற்றுபெற்றன.

ஆ. **நலன்புரி.** கொஸ்கம ரணவிரு கிராமத்தில் சிறு வயதினருக்கான முன்பள்ளிகள் சலுகை கட்டணங்கள் அடிப்படையில் இத் தலைமையகத்தின மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படுகிறது. மேலும் இக் கிராமத்தில் அதிகபடியாக தரைபடையினராக (சேவையாற்றும்/ ஓய்வுபெற்ற) இருக்கின்றமையால் அவர்களுடைய பிள்ளைகளுக்கு நலனுக்காகவும் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் உதவுகிறது.

இ. **பயிற்றுவிப்புக்கள்.** பாதுகாப்பு படை தலைமையகம் மற்றும் முன்னிலை பராமரிப்பு பிரதேசம் ஆகியவற்றில் அதிகாரிகள் மற்றும் ஏனைய நிலையினருக்கு அவர்களுடைய தொழில்களுக்கு சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தபட்டன.

3. **பிரதான செயற்பாடுகளும் அதன் முன்னேற்றங்களும்.** இப்பணிப்பகத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அ. இத் தலைமையகத்தின் அறிவுறுத்தல்களின் பேரில் அனைத்து படைபிரிவுகளிலும் அனைத்து எழுதுனர்கள் (பொது கடமைகள்), சமையல்காரர், வாகன ஓட்டுனர்கள், தச்சன், வர்ணம் பூசுபவர் மற்றும் களஞ்சிய காப்பாளர் ஆகியோருக்கான தொழில் துறை பரீட்சைகள் நடாத்தப்பட்டன. அனைத்து பரீட்சைகளும் ஒவ்வொரு படையணிகளிலும் வெவ்வேறு அதிகாரிகள் குழுக்கள் நியமிக்கப்பட்டு நடாத்தப்பட்டன.









ஆ. **<u>தொழிற் பரீட்சைகளின் சாராம்சம்</u>.** 7 படைபிரிவுகளுக்கு உரிய 74 தொழிற் பரீட்சைகள் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு பங்குபற்றிய மற்றும் பரீட்சைக்கு தோற்றியவர்கள் விபரம் கீழ்வறுமாறு.

| இல | பிரிவு | சித்தி | சித்தியின்மை |
|---|---|---|---|
| 1. | எழுதுனர் (பொது கடமைகள்) | 1,872 | 4,342 |
| 2. | சமையல் காரர் | 237 | 898 |
| 3. | சாரதி (வாகன போக்குவரத்து) | 555 | 1,453 |
| 4. | தச்சன் | 320 | 505 |
| 5. | நிறம் பூசுபவர் (கட்டிடங்கள்) | 66 | 28 |
| 6. | நிறம் பூசுபவர் (வாகனம்) | 38 | 25 |
| 7. | களஞ்சிய காப்பாளன் (தொழில்நுட்பம்) | 233 | 1,194 |
| | **மொத்தம்** | **3,321** | **8,445** |

அட்டவனை 15.1: தொழிற் பரீட்சைகளின் சாரம்சம்.




வரைபடம் 15.1: அனைத்த படைபிரிவுக்குமான தொழிற்சார் பரீட்சைகளின் சாரம்சம்.

## பிரதான கள பொறியியலாளர் காரியாலயம்

1. பிரதான களப்பணி பொறியாளர் தலைமையகத்தின் பொறுப்பாக அமைவது களப்பணி கடமைகள் மற்றும் கருத்திட்ட கடமைகளைப் அணிக்கு ஒப்படைத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதாகும். தரைப்படை தளபதியின் மற்றும் தரைப்படை தலைமையகத்தில் களப்பணி பொறியியல் கடமைகள் தொடர்பாக மதியுரை பிரதான களப்பணி பொறியியாளர் மூலம் வழங்கப்படுதல் வேண்டும். அரசாங்கத்தால் நிறைவேற்றப்படுகின்ற துரித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பொறியியல் பிரிவு அணியால் களப்பணி பொறியியல்/ எந்திரவியல் கடமைகளைப் போன்று மனித நிலக் கண்ணிவெடி நீக்கும் கடமைகளுக்காக பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

2. **<u>இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள்.</u>** பிரதான களப்பணி பொறியாளர் காரியாலயத்தினால் நிறைவேற்றப்பட்ட இலக்குகள் விபரம் கீழ்வருமாறு:

அ. இக்கால கட்டத்திற்குள் பொறியியற் படையினர் பாதுகாப்பு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு பங்களிப்பு வழங்கினர். அரச அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் புதுப்பித்தல், வேலைத்திட்டமான குளங்களை புதுப்பித்தல், பாதைகள் மற்றும் சாலைகளை நிர்மானித்தல், விவசாயிகளுக்காக இயற்கை உரம் தயாரித்தல் ஆகியன ஜனாதிபதி செயலாளரின் வழிகாட்டலின் கீழ் நடைபெறுகிறது. கொஸ்கம, மத்திய ஆயுத மற்றும் சன்னங்கள் களஞ்சிய சாலையின் போர் உபகரண பொருட்கள் மற்றும் வெடிபொருட்கள் அகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மாஸ்சல் மரபுரிமை நிறுவனத்தின் வருடத்துக்கான கன்னிவெடி அகற்றும் மோப்ப நாய்கள் குழு பரிசிலை இலங்கை தரைப்படை மனிதாபிமான கன்னிவெடி அகற்றும் பிரிவு வென்றெடுத்தது. ஒக்டோபர் 26 ஆம் திகதி வொசிங்டனில் நடைபெற்ற பாத் காலைவை அகற்றலில் பொறியியல் படைபிரிவு தளபதி உட்பட கன்னிவெடி அகற்றும் மோப்ப நாய்கள் குழு பரிசில்கள் பெற்றது.





வருடத்துக்கான கன்னிவெடி கண்டுபிடிக்கும் மோப்ப நாய்கள் குழு

ஆ. பலம் வாய்ந்த சுதந்திரமான நாட்டை உருவாக்குவதற்கு இலங்கை பொறியியற் படையினர் பாரிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். வேலைத்திட்டங்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல், பாதைகளை புதுப்பித்தல், குளங்களை புணரமைத்தல், காடுகளை சுத்தப்படுத்துவதன் மூலம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு உதவுதல் போன்றவற்றின் மூலம் வாழ்க்கை மட்டத்தை உயர் நிலைக்கு கொண்டு செல்லும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

இ. மேல் குறிப்பிட்ட வேலை திட்டங்களுக்கு மேலாக நாட்டின் அபிவிருத்தி வேலை திட்டங்களுக்கும், பாலங்கள் கட்டுதல் கட்டுமான பணி, கட்டிட கட்டுமான பணி, விவசாயிகளுக்கான இயற்கை உரம் தயாரித்தல் ஆகியவற்றுக்காக தனது பங்களிப்பை வழங்கியது. 2016 ஆம் ஆண்டில் கொஸ்கம ஆயுத மற்றும் போர் உபகரண கிடங்கு வெடிப்பின் பின்னரான கள பொறியியலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் இவ்வாண்டின் முக்கியம் வாய்ந்த நிகழ்வாகும்.





பாவனைக்கு உகந்ததற்ற வெடிபொருட்களை அழித்தல்

ஈ. **மனிதாபிமான கன்னிவெடி அகற்றல்.** அனைத்து நிறுவனங்களின் மிதிவெடி அகற்றல் நடவடிக்கைகளை ஒன்றினைத்து பார்க்கையிலும் இலங்கை தரைபடையினால் மேற்கொள்ளப்படும் மிதிவெடிகளை அகற்றும் நிகழ்ச்சி திட்டமானது துரிதமாகவும் பாரிய அளவிலும் நடைபெறுகிறது அரசாங்கம் மற்றும் ஏனைய வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இலங்கை தரைபடையினரால் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக மனிதாபிமான கன்னிவெடி அகற்றல் மிக துரிதமாக மேற்கொள்ளப்படுகிறது. மேலும் 2016 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற, மறுசீரமைப்பு மற்றும் இந்து சமய விவகார அமைச்சிடமிருந்து கன்னிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக தரைப்படை கன்னிவெடி அகற்றும் பிரிவிற்கு 10.8 மில்லியன் ரூபா நிதியாக பெறபட்டது.

3. **திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள்**. நாளாந்த வழிமுறைகளுக்கு மாறாக நிபுனத்துவம் பெற்ற படைவீருர்களின் திறனுடன் கூடிய வலுவான விளைவுகளை வழங்கி நிறுவனத்தின் திறனை மேம்படுத்துவதற்காக பல நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. தேடுதல் நடவடிக்கை துறையில் சுய நிலை தன்மைனை மேம்படுத்துவதற்காக வெடிபொருட்களை மற்றும் மருந்துகளை கண்டறியும் கீரிப்பிள்ளை பிரிவு பொறியியல் படைபிரிவிற்கு மிக அன்மையில் சேர்க்கப்பட்டது.

ஆ. இரசாயண, உயிரியல் கதிர்வீச்சு மற்றும் அனுசக்தி, மோப்ப நாய்கள் மற்றும் போர் உபகரணம் ஆகியவற்றில் திறன் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்காக மனிதாபிமான கன்னிவெடி அகற்றல் முகாமைத்துவம், வெடிக்கும் போர் உபகரன சாதனம் நிலை III, ஆரம்ப கன்னிவெடி அகற்றல் ஆகிய துறைகளில் பாடநெறிகளை நடாத்தி தருமாறு அமெரிக்க தூதரகத்திடம் உதவி பெறப்பட்டது.

| இல | பாடநெறி | மாணவர் எண் | காலவரை |
|---|---|---|---|
| 1. | வெடிக்கும் போர் உபகரன சாதனம் நிலை III பாடநெறி | 02 அதிகாரிகள் 49 ஏனைய நிலையினர் | 17/10/2016 - 27/10/2016 |
| 2. | மேம்படுத்தப்பட்ட வெடிபொருள் சாதனங்கள் எதிர்ப்பு பயிற்சி பாடநெறி | 04 அதிகாரிகள் 63 ஏனைய நிலையினர் | 14/11/2016 - 22/11/2016 |
| 3. | வெடிக்கும் போர் உபகரன சாதனம் மோப்ப நாய்கள் பாடநெறி | 10 ஏனைய நிலையினர் | 06/07/2016 - 22/07/0216 |
| 4. | இரசாயண உயிரியல் கதிர்வீச்சு மற்றும் அனுசக்தி புத்துனர்ச்சி பாடநெறி | 01 அதிகாரி 27 ஏனைய நிலையினர் | 03/05/2016 - 19/05/2016 |
| 5. | இரசாயண உயிரியல் கதிர்வீச்சு மற்றும் அனுசக்தி ஆரம்ப பாடநெறி | 18 அதிகாரிகள் 76 ஏனைய நிலையினர் | 16/08/2016 - 01/09/2016 |

அட்டவனை 16.1: மனிதாபிமான கன்னிவெடி அகற்றல் முகாமைத்துவ பாடநெறி.

இ. இராணுவ பொறியியலாளர் துறையின் கீழ் புவியியல் தகவல்களை ஆராயச்சி செய்யும் அணி மற்றும் கள ஆய்வுக் குழு ஆகியன செயற்பாட்டுக்கு நிலப்பரப்பு பகுப்பாய்வு அமைப்பு ஒரு புதிய பரிமானத்தை உருவாக்கியதன் மூலம் புவியல் சம்பந்தமான புவியல் தகவல்களை வழங்கல் மற்றும் பங்கிடுதல் முடியும்.

4. **<u>2016 ஆம் ஆண்டு பிரதான பொறியியல் காரியாலத்தினால் மேற்கொளளப்பட்ட வேலை திட்டங்கள்.</u>** 2016 ஆம் ஆண்டு பிராதன கள பொறியியல் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள். பிரதான கள பொறியியல் தலைமையகம் மற்றும் பொறியியற் படைத் தலைமையத்தின் கண்காணிப்பின் கீழ் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டம் புதுப்பித்தல், கட்டுமான பணிகள், வேலைத்திட்டங்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல், பாதைகளை ஒன்றினைத்தல மற்றும் புதிய பாதைகள் அமைத்தல், மைதானங்களை புனருத்தாபனம் செய்தல், பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியேற்றம் செய்வதற்காகவும் விவசாயத்துக்காகவும் காடுகளை சுத்தமாக்கல் நடவடிக்கை மூலம் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தல். விவசாய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் போன்ற வாழ்க்கை மட்டத்தை உயர் நிலைக்கு கொண்டு செல்லும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியதோடு இதன் மூலம் இலங்கை இராணுவத்தின் பிரதான கள பொறியியல் அலுவலகத்தின் கண்காணிப்புடன் ரூபா 475,742 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.



களனிய நாகந்தன விகாரையின் அபிவிருத்தி வேலைகள்



பொலன்னறுவை ரோயல் கல்லூரியின் கட்டுமான பணிகள்



இயற்கை உர தயாரிப்பு திட்டம் - நச்சு அல்லாத நாட்டை கட்டியெழுப்புவோம்



முதியன்காடு தொட்டிலுக்கு கதவு வாயில் போடல்



திருகோனமலை கொமரங்கடவல நீர்தேக்கம்
புணரமைப்பு

5. **<u>சிக்கல்கள் மற்றும் சவால்கள்</u>.** பிரதான கள பொறியியல் அலுவலகத்தில் தற்போது நிலவுகின்ற சிக்கல்கள் மற்றும் சவால்கள் விபரம் கீழ்வருமாறு:

அ. வெவ்வேறு வகையிலான மற்றும் கலவை உதிரிப்பாகங்கள் மற்றும் தொடர்ச்சியான வேலைகள் எனபவற்றால் பொறியியல் உபகரணங்களை பராமரிப்பது மிக கடினமான காரணியாகியுள்ளது.

ஆ. ஐக்கியநாட்டு அமைதி காக்கும் பணிகளுக்காக வெடிபொருள் அகற்றும் போர் உபகரணங்களின் தேவைகள் மிக அதிகமாக காணப்படுவதாலும் அவற்றுக்கான உபகரணங்கள் குறைவாக காணப்படுவதாலும் இது பெரும் சவாலாக காணப்படுகிறது. ஆதலால் வெடிபொருள் அகற்றும் போர் உபகரணங்கள் அணியை சமீபத்திய சிறப்பு போர் உபகரணங்களுடன் கூடிய அணியாக மாற்றப்படல் வேண்டும்.

இ. இலக்குகளுடன் பாதுகாக்கும் நிலையுடன் கூடிய இரசாயண உயிரியல் கதிர்வீச்சு மற்றும் அனுசக்தி அணியை ஸ்தாபித்தல் மற்றும் வெவ்வேறு சூழல்களுக்கு முகம் கொடுக்க கூடிய வகையில் உபகரணங்களின் பற்றாக்குறை ஒரு சவாலான உள்ளது

ஈ. மீள்குடியேற்ற, மறுசீரமைப்பு மற்றும் இந்து சமய விவகார அமைச்சிடமிருந்து மனிதாபிமான கன்னிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் நிதி போதாமை.

6. **<u>எதிர்கால முன்னோக்கல்கள்</u>.** பிரதான கள பொறியியல் அலுவலகத்தின் எதிர்கால முன்னோக்கல்கள் பின்வருமாறு:

அ. கள பொறியியற் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எந்தவொரு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க கூடிய வகையில் தயார் படுத்தல் அவசியமாகும். ஆதலால் வெடிக்கும் போர் உபகரன சாதனங்கள், மனிதாபிமான கன்னிவெடி அகற்றல், இரசாயண உயிரியல் கதிர்வீச்சு மற்றும் அனுசக்தி உபயோகிக்கும் விசேட குழு முறையாக பயிற்றுவித்தல் மற்றும் மோப்ப நாய்களுக்குரிய கருவிகளை கையாளும் விதம், எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுத்தல், மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் உபகரணங்களை எதிர்த்தல் முறைமை, நவீன உபகரணங்களை பயன்படுத்தும் முறை மற்றும் சவால்களை எதிர் நோக்கும் விதம் என்பன முக்கியமாகும்.

ஆ. தற்போது பொறியியல் படைபிரிவின் கீழ் இலங்கை பூராவும் 13 வெவ்வேறு வகையான பொறியியல் படையணிகள் செயற்படுவதால் அதிக பணிச்சுமை, செயற்பாடு மற்றும் நிர்வாகம் ஆகியன கடினமாக உள்ளன. ஆதலால் எதிர்காலத்தில் இன்னுமொரு பொறியியல் படையணியை உருவாக்கி வேலை திறனை அதிகரிக்கவும் அதன்மூலம் எதிர் கால சவால்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. **பகுப்பாய்வு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள்**

அ. சில சிறப்பு பொறியியல் வளங்கள் குறைபாடு மற்றும் சிப்பாய்களின் குறைபாடு பிரதான கள பொறியியற் தலைமையகத்தின் செயல்திறன் நேரடியாக பாதிக்கப்படுவதோடு, எப்போதும் பொறியியற் சேவையின் தேவையை எடுத்துக்காட்டும். தற்போதைக்கு பொறியியற் சேவைக்கு விண்ணப்பம் குறையப்பட்டுள்ளதோடு அதற்கு சமமாக தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தேசிய அபிவிருத்தி மற்றும் இராணுவ புனரமைப்பு திட்டங்களின் படி இயந்திரம் மற்றும் கட்டிட வேலைத்திட்டங்களுக்கு விண்ணப்பம் அதிகமாகியுள்ளது.

ஆ. கள நிலை பொறியியல் படைப்பிரிவினர் அரச தனியார் துறைகளில் இருந்து அதிக பராட்டுக்களை பெற்றுள்ளனர். ஆனால் தகைமை பெற்றவர்களின் குறைவு விசேடமாக நிர்மாணித்தல், நில அளவையாளர் மற்றும் பொறியியற் சேவைக்கு தேவையான உபகரணங்கள் குறைபாட்டின் காரணமாக சுயாதீனமான முறையில் சிவில் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல் கடினமாகவுள்ளது.

இ. இலங்கை தரைப்படை மிதிவெடிகளை அகற்றும் அலகுகளினால் தேசிய மட்ட மிதிவெடிகளை அகற்றும் நிகழ்ச்சி திட்டத்தில் பாரியளவு பங்குவகிக்கின்றது. திறமை மற்றும் அனுபவம் மிக்க, மிதிவெடிகளை அகற்றும் உறுப்பினர்கள் ஓய்வூ பெறுதல் மற்றும் பதவி உயர்வுகள் அனைத்துச் செயற்பாடுகளிலும் குறைபாடுகள் ஏற்படுவதற்கு காரணமாய் உள்ளன.

ஈ. தற்போது தம்மிடம் உள்ள பாரிய குண்டுகளை அகற்றும் உபகரணங்கள் காலாவதியாக்கப்பட்ட நிலைமையில் இருப்பதன் காரணமாக குண்டுகளை அகற்றும் படைப் பிரிவு இரண்டை உபயோகித்து கொள்வதற்கு, ஐக்கிய நாடுகளின் அமைதி சேவை மற்றும் சரியான பயிற்சிக்கு தேவையான அனைத்து தேவைகளையும் சிக்கனமாக்கிக் கொள்ள முடியாதுள்ளது.

உ. ஓய்வு பெறும் சதவீதம் அதிகமாவதும், ஆட்சேர்ப்பு குறைவதும் அலகுகளின் சிப்பாய்களின் குறைபாடுகளின் காரணமாக உயர் தலைமையகங்கள், படைபிரிவு மத்தியஸ்தானங்கள் மற்றும் அத்திவசியமான பயிற்சி பாடநெறிகள், விசேட விதமான பயிற்சிகளுக்காக சிப்பாய்களை விடுவிக்க வேண்டி எற்படுவது, போர்ச் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதிய பக்கத்திற்காக இவ்விடம் வெற்றிடமாக விடப்பட்டது

## <u>பிரதான சமிஞ்சை அதிகாரி அலுவலகம்</u>

1. பிரதான சமிஞ்சை அதிகாரி இலங்கை இராணுவத்தின் கட்டளை மற்றும் நிர்வாகம் மற்றும் தொடர்பாடல், கணனி புலனாய்வு பிரிவு, தொடர்பாடல் மற்றும் பரிபாலன செயற்பாடுகளுடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல்/ சைபர் பாதுகாப்பு பற்றியும் பொறுப்புக் கூற வேண்டும். பிரதான சைகை அதிகாரி அலுவலக அமைப்பு பின்வருமாறு.




வரைபடம் 18.1: பிரதான சமிஞ்சை அதிகாரி அலுவலகத்தின் கீழுள்ள நிறுவனங்களின் கட்டமைப்பு.

2. **<u>இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள்.</u>** இவ் ஆண்டில் பிரதான சமிஞ்சை அதிகாரி அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு.

அ. **<u>ரேடியோ அலை தொடர்பாடல்.</u>** இலங்கை இராணுவத் தலைமையக வழிகாட்டலின் கீழ் போர் பயிற்சி, விழாக்கள் மற்றும் விசேட சந்தர்ப்பம் 44 க்கு தேவையான ரேடியோ அலை தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது.

ஆ. **<u>லைண் தொடர்பாடல்.</u>** புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தலைமையக நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு புதிய பரிமாறல் மத்தியஸ்தானத்தை அமைத்து, தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டது. அதுவே தற்போது இருக்கும் வசதிகளை பயன்படுத்திக் கொண்டு தொடர்பாடல் வசதிகளை அதிகரித்துக் கொண்டுள்ளன.

இ. **<u>நடமாடும் தொடர்பாடல் வலையமைப்பு</u>.** பாதுகாப்பு அமைச்சு மற்றும் பிரதான சமிஞ்சை அதிகாரி தலைமையகத்தினால் வரையறுக்கப்பட்ட டயலொக், மொபிட்டெல் வரையறுக்கப்பட்ட பாரதி எயார்டெல் மற்றும் எடிசலாட் போன்ற தனியார் நிறுவனங்கள் ஒன்றிணைந்து நடமாடும் ஒலிபரப்பும் இடங்கள், கோபுரம் தரைப்படை முகாமிற்குள் நிறுவியமையும் அதன் மூலம் நடமாடும் தொடர்பாடல் வலையமைப்பு வடக்கிலிருந்து கிழக்கு பின்தங்கிய பிரதேசங்கள் வரை பரவலாக்கம் செய்வதற்கும் ஏனைய நடமாடும் தொடர்பாடல் சேவைகளுக்காக தேவைப்பாடுகளை வழங்கி அவ்வலையமைப்பகளை பரவலாக்கம் செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஈ. **<u>ரணவிரு தொடர்பாடல் தகவல் பயிற்சி நிறுவனம்.</u>** போரினால் உயிரிழந்த அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் தற்போது சேவையில் இருக்கும், ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் ஆகியோரின் குடும்ப உறுப்பினர்களின் தகவல் தொடர்பாடல் அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இவ் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

